SENTAMIL POOMPOLIL

BY

A. S. NAGALINGAPILLAI,
SUTHUMALAI,
JAFFNA.

PRICE Re. 1.

செந்தமிழ்ப் பூம்பொழில்

ஆக்கியோன்

ஆ. சி. நாகலிங்கபிள்ளை,
சுதுமலை,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1

(*Copy Right Reserved*).

1937

Printed at the
American Ceylon Mission Press, Tellippalai.

FOREWORD

By J. V. Chelliah, Esq., M. A., J. P.,

Retired Vice-Principal, Jaffna College.

I have gone over Pundit A. S. Nagalingampillay's *Sen Tamil Poompolil* carefully and find it an excellent anthology of prose and verse. Besides selections from Tamil classical poems, the author has included an original contribution of high merit in verse composed by himself on the Awakening of Mother Lanka. There are also selections from the works of living writers.

I am especially pleased with the prose section. I have long desired that Tamil prose writers should adopt a simpler style, using simple diction, uninvolved constructions, and shorter sentences. For, it must be remembered prose is mainly intended to be a vehicle for imparting information and instruction, and should, therefore, be written clearly and lucidly. Modern English prose is written on this principle. I am glad to note, therefore, that the author has achieved this ideal. He does not use unnecessarily difficult words, his constructions are not complicated, and his sentences are of moderate length. Very often he uses short sentences effectively to emphasise his points.

The author has furnished a paraphrase of the verse selections in Tamil, and also an English translation, which would be found useful to pupils in English schools.

I heartily recommend the use of this anthology in English and Tamil schools.

As for the author, he is a Tamil scholar of wide and accurate knowledge of Tamil Language and Literature.

Vaddukoddai,
Dec. 27, 1936.

J. V. Chelliah.

A LETTER

K. S. ARULNANDHY, M. SC., (LOND).
Teacher's Diploma. (Lond).

Beach Road,
Jaffna.
28-12-36

திருவாளர் நாகலிங்கபிள்ளையவர்களறிவது:

தாங்கள் இயற்றிவெளியிடும் 'செந்தமிழ்ப் பூம்பொழில்' என்னும் நூலின் முதல் 96 பக்கங்களையுங் கொண்ட பிரதியை யான் படித்தேன்.

செய்யுட்பாகத்தைப் படித்தபோது செந்தமிழ்ப் பரப்பிலுள்ள செய்யுட் பூம்பொழிலினிடை உலாவிய வின்பம் பெற்றனன். பல்வேறு நூல்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பல பகுதிகளை இச்செய்யுட்பாகம் அடக்கியுள்ளதெனினும், செந்தமிழ்ச் செய்யுள் நடையின் பல்வேறுவித சுவைகளையும் தாங்கள் சுவைத்தின்புற்றவர்களாதலினாலன்றோ செந்தமிழ்ப் பூம்பொழிலினிடைப் புகுந்து ஆங்கிருந்து சிறந்த சில மலர்களைக்கொய்து வந்தெமக்கோர் அழகிய மாலையை ஆக்கித் தந்தீர்கள்.

இது நிற்க உரை நடைப்பகுதியும் மிகச் சிறப்பாகவிருக்கின்றது. தமிழ்மொழியில் சிறந்த உரை நடையை தங்களைப்போலும் எழுதுமாற்றலுடையாரைத் தமிழுலகம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றது.

யான் படித்த பிரதியில் அச்சுப்பிழைகளுண்டு. அவைகளைத் திருத்துதல் அவசியமாகும். 'இலங்கை மாதாவின்' திருப்பள்ளி எழுச்சியின் முதலாம் செய்யுளை நீக்கிவிடுதல் நன்றென்பது என்னுடைய கருத்து.

இங்ஙனம்
அன்புள்ள
K. S. ARULNANDHY

முகவுரை

'கதிரைமுத்துக் குமாரன் கழலடி
முதிருமன்பொடு முன்னிவழுத்துவன்.'

மலர்தலையுலகிற் குயிரெனச் சிறந்து விளங்கும் மக்கட் பகுப்பினர்களால் தேடப்படுவது அறிவேயாகும். அவ்வறிவினாற் பெறப்படுவதும் ஆனந்தமாம். ஆனந்தமென்னும் அழகொளியை உண்டாக்கும் அறிவானது, மிக அகன்று விரிந்த நூன்முறைகளாகவே மக்கட்குப் பயன்படுகின்றது. அவற்றுள், நந்தென் தமிழ் மொழியிற் சிறந்து விளங்கும் நூல்களோ அளப்பரியனவாகும். அவை, சிறுநூல், பெருநூல் என இரு பெரும் பிரிவுடையனவாம்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களே முதலில் வசன நூலை எழுதி அச்சிட்டுப் பள்ளிச் சிறுர்கள் முதற் பெரியோர் ஈறாக நற்கல்வி பயிற்றினர். அதன்பின் பெருந்தொகையான நூல்கள் இருநாடுகளிலுமெழுந்தன. இக்காலத்து ஆங்கில நாகரீகத்தைப் பின்பற்றி அம்முறையாகவே நந்தண்டமிழ் மொழியும் பாடசாலைகளிற் போதிக்கப்படுகின்றது. யாமுங் காலத்துக்கேற்பச் செய்யுட்பாகம், வசனபாகம் என இருபிரிவுகளையுடைய இச்சிறு நூலை, ஆன்றோர் இலக்கியங்களினதும், தற்போதுள்ள அறிஞர்கள் மூவரினதும், தக்கதென்று கண்ட செய்யுட்களைத் தொகுத்தும், வசனபாகத்தை மகாபாரதம், நற்றிணை, புறநானூறு, சில பிரபந்தங்கள், தண்டமிழ், ஆங்கிலம், மலையாளம், சிங்களம் முதலாம் மருத்துவ நூல்களிலுள்ள மூலபாடங்களை நன்கு தழுவிச் 'செந்தமிழ்ப் பூம்பொழில்' என்னும் பெருமைவாய்ந்த பெயரையும் இட்டு வெளியிட்டனம்.

யாம் இதனை எழுதிய காலமேயன்றி அச்சேற்றுங் காலம் அறிஞர்கள் உற்று நோக்குங் காலமாகும். இறையருள் முன்னின்றமையினால் ஒருவாறு அப்பெரிய கருமமுங் கைகூடியது.

இதன் செய்யுட்பாகத்துக்கு யான் எழுதிய உரை மணிமாலையை மேற்பார்வையிட்ட அறிஞர் பெருந்தகை அவர்கட்கும், ஆங்கில மொழிபெயர்ப்புச் செய்துதந்த பேரறிஞர் அவர்கட்கும், மனப்பூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன்.

வித்தியாதரிசி திருவாளர் அருணந்தி, M. Sc. அவர்கள் என் மீதுற்ற பரிவே காரணமாக எழுதிய கடிதத்திற்கு மனமார்ந்த வந்தனம் புரிந்து இ. மா. தி. ப. எழுச்சியிலுள்ள முதலாம் செய்யுளை நீக்குதலோடு, அதற்கு உரையும் ஆங்கில மொழி பெயர்ப்புந் தவிர்த்தும் மேல்வரும் பதிப்பில் இடத்தினின்றும் அதனை அகற்றுவதும் அச்சுப் பிழைகளை நீக்குவதும் எய்த வைப்பேன்.

தாது ௵ தை மீ

ஆ. சி. நா.

செந்தமிழ்ப் பூம்பொழில்

உள்ளுறை

---

1. செய்யுட் பாகம், தொகுப்பு

		பக்கம்
1.	குருவணக்கம்	1
2.	இலங்கை மாதாவின் திருப்பள்ளியெழுச்சி 1 ம் செய்யுள் நீக்கப்பெற்றது	1
3.	கந்தபுராணம்	4
4.	வில்லி பாரதம்	12
5.	சீவக சிந்தாமணி	17
6.	கம்பர் இராமாயணம்	19
7.	சகுந்தலை வெண்பா	23
8.	நாமகள் தசாங்கம்	25
9.	பிள்ளைத் தமிழ்	26
10.	சிலப்பதிகாரம	28
11.	புற நானூறு	30
12.	அற நெறிச்சாரம்	31

2. வசனபாகம்

1.	இராசசூய யாகம்	33
2.	அருச்சுனன் தவம்	50
3.	தருமர் அறவுரையும் சூழ்வினையும்	63
4.	நப்பசலையார்	91
5.	ஆறுமுகநாவலர்	99
6.	பனையின் பயன்	114

செந்தமிழ்ப் பூம்பொழில்

குருவணக்கம்.

அன்னை யத்தனுப் அழகுற கிளையா யரிய நூலதா யாருயிர்த்
துணையாய்
மன்னு சிந்தைசொற் சீலமாய் வலியாய் மருவு நற்றிரு மகிழ்வுமின்
பமுமாய்த்
துன்னு போகமிக் குவகையா யுயிராய்த் துணிவு முத்தியாய்ச்
சொல்லருஞ் சமைவாய்
என்னை யாளுடை யெழின்மிகு மைய னிருங்க மற்புணை யிருந்தவா
றெனக்கே.

இலங்கைமாதாவின் திருப்பள்ளி எழுச்சி.

1. திருவரு ளேயென வெழுந்தன னிரவி
திகழொளியா மென விடிந்தது வானம்
குருவரு ளோவெனக் கூடினர் பலரும்
கூற்றுவரோ வென மேற்றிசை வாணர்
தருதிறை கொள்வது தங்கட னென்றார்
தானவர்போ லெமைத் தாக்கினர் நின்றார்
கருநிறை வாரணங் குமிறிடுங் கடல்சூழ்
கற்பகமே பள்ளி யெழுந்தரு ளாயே.

2. ஐந்திணை வாழ்க்கையு மகன்றனம் யாமே
ஆறி[illegible] குளமென வசைந்தனம் யாமே
கந்திணை மாடெனக் கங்குலும் பகலும்
காதலு டன்பணி காத்துநிற் போமே.

வந்திணை கூடினர் வல்லவர் யாரும்
வாதிடவே யெமை வம்மென வழைப்பர்
சந்தணை தோளுடைத் தையலர்க் கரசே
சார்தரு பள்ளியெ ழுந்தரு ளாயே.

3. போற்றியுன் பதமலர் புண்ணிய வடிவே
புவனநா யகியெனப் போற்றினம் யாமே
மாற்றிடுந் துயர்தமை மதித்தருள் நீயே
மங்கல சங்கம தோவெனுந் தாயே
தேற்றிடு வாரிலைத் தென்பொதி மேவும்
தென்னவன் போலொரு தேசிக னருளே
ஆற்றிடு மடியரே மகத்திருள் போக்கு
மாயிழையே பள்ளி யெழுந்தரு ளாயே.

4 ஆரிய ரிலங்கையென் றரற்றின ரொருபால்
அன்புடன் புக்கர்நித் திலமென வறைந்தார்
கூரிய முகமிலாச் சீனர்கள் தாமுங்
குற்றமி லிரத்தின துவீபமென் றறைந்தார்
சீரிய கிரேக்கர்சிங் காரவ னத்தால்
சிறந்திடு பதும ராகமென் றுரைத்தார்
பாரிய தபோவனத் தையலே நீயும்
பண்புறு பள்ளி யெழுந்தரு ளாயே.

5. எந்திரக் கருவிக ளியக்குந ரொருபால்
ஏதமில் கைத்தொழில் விரிக்குந ரொருபால்
மந்திரச் சூழ்ச்சியில் மயங்குந ரொருபால்
மாதர்கள் சுதந்திரம் மகிழ்ந்தன ரொருபால்
சுந்தரச் சுதந்திரம் வேண்டின ரொருபால்
சூதுடன் வாதினைத் தேடின ரொருபால்
தந்திரத் தாற்பிறர் தாக்கின தறியார்
தாரகமே பள்ளி யெழுந்தரு ளாயே.

6: குன்றெனும் வளமொரு குன்றெனக் கொண்டாய்
கூறருந் நதிகளைக் குறைவறக் கொண்டாய்
நன்றெனுங் குளவள நாயகி யுன்பால்
நண்ணுதல் போலொரு நாட்டிலு முண்டோ
தின்றுநின் றேகினர் தெவ்வர்கள் யாரும்
தீயினைப் போலெமைச் சேய்மையில் வைப்பர்
மன்றினில் வாழ்வதை மயங்குறச் செய்தார்
மாண்புறு பள்ளி யெழுந்தரு ளாயே.

7. நித்தில வளமென நிறைந்தது மிங்கே
நீடிய வாசனை நிறைந்தது மிங்கே
பைத்தலை நன்மணி பரந்தது மிங்கே
பார்புகழ் ரத்தின பட்டின மிங்கே
புத்துறழ் சலாபமு முப்பழ மிங்கே
முக்குட மாமலை முதன்மையு மிங்கே
இத்தல மீதுனக் காரிணை யனையாய்
இன்னமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

8. அழகெனு மழகுநல் லழகுபெற் றுடைய
வழகினுக் கழகே வயிர்தநன் மொழியாய்
அழகெனி லியற்கை செயற்கை யெனறுதும்
அன்னைநின் னழகினின் அளவறி யேனே
அழகினுக கணியெனு மாருயிர்த் தாயே
அம்புவிக் கழகுநீ அளித்ததுன் னழகே
அழகினி லரியதொர் அம்மையே யன்பே
ஆரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே.

9. இயக்கரு நாகரு மியைந் திடுவேட
ரின்பநற் பழங்குடி யாயிடங் கொண்டார்
தியக்குறு போத்துக் கீசரொல் லாந்தர்
தேசுடைச் செந்தமிழ்ச் செல்வர்கள் யாரும்
மயக்கமில் நின்பெரு வளந்தனை நுகரு
மாற்றம தாய்வந்து மாய்நரு முளரே
சயத்தொரு மருப்புமுத் தொத்த நற்செல்வி
கற்பகமே பள்ளி யெழுந்தரு ளாயே.

10. சீருடைத் திருவினிற் றிகழ்தரு வளத்திற்
செறிவுறு கடல்தரு சிறப்பினில் யாற்றில்
ஏருடைப் பருவநற் காற்றினி னெழிலில்
எத்திசை யுங்கடல் சூழுநல் லழகில்
ஆரிணை புகலுவ ரறிவுமிக் குடையா
ரன்னைநின் னருளதை யன்புட னளிப்பாய்
பாரிடைப் புகழினிற் பண்புமிக் குடைய
பன்மலர் சேர்பள்ளி யெழுந்தரு ளாயே.

ஆக்கியோன்.

கந்தபுராணம்

இது பதினெண் புராணங்களில் ஒன்று. தமிழ்நாட்டுப் பழந்தெய்வமாகிய முருகக்கடவுளின் திருவிளையாடலைக் கூறுவது. இதனைத் தமிழ்ப்பாட்டுக்களிற் பாடியவர் தொண்டைநாட்டுக் காஞ்சிபுரத்தில் ஆதிசைவர் மரபில் உதித்த கச்சியப்ப சிவாசாரியர். கி. பி. 1178-ம் ஆண்டளவில் குமரகோட்டம் என்னும் ஆலயத்தில் அரங்கேற்றப்பெற்றதென்பர்.

மகேந்திரகாண்டம்.

அவைபுகுபடலம்.

84. சங்க மேவின ரினையன வளப்பில சாற்ற
வங்க ணோரரி மான்றவி சிருக்கையி லவுணன்
தங்க மெத்துணை யத்துணைச் சிறப்பொடு தோன்றிச்
செங்கை வேலவற் புகழ்ந்துவீற் றிருந்தனன் றிறலோன்.

1

85. அறிவர் மேலவன் றவிசில்வீற் றிருத்தலு மவுணர்க்
கிறைவ னுங்கது நோக்கியே யெயிற்றணி கறித்துக்
கறுவி யேநகைத் தராப்பிமெய் வியர்ப்பெழக் கண்கள்
பொறி சொரிந்திடப் புகையுமிழ்ந் தினையன புகல்வான்.

2

86. சுற்ற நீங்கியே யிலையுண்டு விலங்கெனச் சுழன்று
வற்றன் மாமரக் காட்டகத் திருந்துடல் வருத்துஞ்
சிற்று ணர்ச்சியோர் வல்லசித் தியல்பிது சிறியோய்
கற்று ளாய்கொலாங் காட்டினை நமதுமுன் காண.

3

87. துன்று வார்சடை யோகினோ ரல்லது தொலைந்து
பின்று தேவரும் வல்லரிச் சிறுதொழில் பெரிது
மொன்று மன்னதை யிவ்விடைக் காட்டல ருன்போ
னன்று நன்றுநீ நம்முனர்க் காட்டிய நடனம்.

4

88. சித்த ராயினோர் செங்கண்மான் முதலிய தேவ
ரித்தி றத்தன காட்டுதற் கஞ்சுவ ரென்முன்
றத்த மெல்லையிற் புரிந்திட லல்லது தமியோய்
பித்த னேகொலா நமக்கிது காட்டுதல் பிடித்தாய்.

5

89. உரைசெ யிந்நகர் மகளிருஞ் செய்வருன் முற்றுக்
கருவி னுள்ளுறு குழவியுஞ் செய்திடுங் கருத்தில்
வரைக ளுஞ்செயு மாக்களுஞ் செய்யுமற் றதனு
லரிய தன்றரோ பேதைநீ புரிந்திடு மாடல்.

6

90. என்னை யெண்ணல யெதிருற விருந்தனை யிதனுன்
மின்னல் வாட்படை யுறைகழித் தொய்யென வீசிச்
சென்னி வீட்டுவ னின்செயல் முற்றவுந் தெளிந்து
பின்ன ரத்தொழில் புரிவனென் றேயுளம் பிடித்தேன்.

7

91. ஏனுற்று ரெலாம் வழுத்திய வவுணரும் யானுங்
காணக் காட்டினை நீயறி விஞ்சையைக் கண்டாம்
பூணித் தாயென வாமுனக் கித்துணைப் பொழுது
பாணித் தாவியை யளித்தன னன்னது பரிசே.

8

92. வாச வன்கரந் தோடினன் பிறரிது மதியார்
கேச வன்னிது நினைகிலன் மறைகளின் கிழவோ
னுசி கூறியே திரிந்திடு மவர்க்கெலா முதலா
மீச னென்னிடை வருகிலன் யாரைநீ யென்றான்.

9

93. தீய னித்திற முரைத்தன கேட்டலுந் திறலோன்
காய மீனெனக் காயமேல் வியர்ப்பெழக் கனன்று
மாயை செய்துழல் வலியிலார் போலெனை மதித்தா
யாய புந்தியை விடுமதி கேளிதென் றறைவான்.

10

94. புரந்த ரன்குறை யயன்முத லமரர்தம் புன்மை
வருந்தும் வானவர் சிறையெலா நீக்கிமற் றவர்தந்
திருந்து தொல்லிறை யுதவுவான் செந்திமா நகர்வந்
திருந்த வாதியம் பண்ணவ னடியனேன் யானே.

11

95. துன்னு தானைகட் கரசரா யறுமுகத் தொல்லோன்
பின்னர் வந்துளா ரொன்பதோ டிலக்கமாம் பெயரா
ரன்ன வர்க்குளே யொருவன்யா னந்திபாங் கமர்ந்தே
னென்ன லார்புகழ் வீரவா கெனும்பெய ருள்ளேன்.

12

96. தார கப்பெய ரிளவலைத் தடவரை தன்னை
யோரி றைக்குமுன் படுத்தவே லறுமுகத் தொருவன்
சூரெ னப்படு நின்னிடைத் தமியனைத் தூதாப்
பேர ருட்டிறத் துய்த்தன னென்றனன் பெரியோன்.

13

97. கொடுத்தி டாதவென் கொண்டவ னுரைத்தசொற்கொடுங்
னடத்து மன்னவன் கேட்டலு மாங்கவ னம்மேல் [கோ
விடுத்த காரண மென்னையோ விளம்புதி யென்ன
வெடுத்து மற்றிவை யெம்பிரான் றூதுவ னிசைப்பான்.

14

98. மருத்து வன்றனைச் சசியொடு துரந்துசேண் வதிந்த
புரத்தை யாரழற் கூட்டியே யனையவன் புதல்வ
னொருத்த னோடுபல் லமரரை யுவளகந் தன்னி
லிருத்தி னாயென வினவின னறுமுகத் திறைவன்.

15

99. இந்தி ராதிப ரயன்முதற் பண்ணவர் யாரும்
வந்து வந்துவேண் டிடுதலு மவர்குறை மாற்றப்
புந்தி கொண்டுபன் னிருபுயத் தெம்பிரான புவிக்க
ணந்த மின்றுறை பாரிடத் தானையோ டடைந்தான்.

16

100. தரையி னண்ணிநின் னிளவலை வரையொடு தடிந்து
நெருந லேவந்து செந்தியின் வைகினா னினையும்
விரைவின் வந்தட வுன்னினா னின்றுநம் மிசையே
யருள்கொ டேசில புகன்றெனைத் தூண்டின னதுகேள்.

17

101. நிறைபு மிந்துவைப் படவராக் கவர்ந்தென நிகளச்
சிறைப டுத்தியே யமரரை வருத்தினை செய்பு
மறையொ ழுக்கமு நீக்கினை யுலகமாண் மன்ன
ரறமு மன்றிது வீரர்தஞ் செய்கையு மன்றால்.

18

102. தாதை யாகியோன் காசிப னாங்கவன் றனைய
னாதலா லுனக் கமரரைச் சிறைசெய்வ தறனோ
வேத மார்க்கமும் பிழைத்தனை சிறுபொருள் விளைந்தாய்
நீதி யாலுல களிப்பதே யரசர் தந் நெறியே.

19

103. உலத்தின் மாண்டதோட் சலந்தர னந்தக னொருங்கே
கலத்த லில்லதோர் புரத்தவ ராதியோர் கடவுட்
குலத்தை வாட்டலி னிமைப்பினில் வீந்தனர் கொடியோய்
நிலத்தி னும்பரை வருத்துத லழகிதோ நினக்கே.

20

104. மெய்ம்மை நீங்கியே கொலைகள வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சீறியே யணங்குசெய் தீயோர்
தம்மி லாற்றரும் பழிசுமந் தொல்லையிற் றமரோ
டிம்மை வீடுவ ரெழுமையுந் துயரினூ டிருப்பார்.

21

105. இங்ங னந்திரு நீங்கியே துயருழந் திறப்ப
ரங்ங னம்பெரி தாரிருள் மூழ்குவ ரதற்பி
னுங்ங னம்பிறந் தயருவ ரென்றுமீ துலவா
ரெங்ங னுய்வரோ பிறர்தமக் கல்லல் செய்திடுவோர்.

22

106. தீது நல்லன வாயிரு திறத்தவுந் தெரிந்தே
யேதி லார்க்கவை செய்வரேற் றமக்குட னெய்தும்
பேதை நீரையா யமரரைச் சிறைசெய்த பிழையான்
மாது யர்ப்பட லன்றியே யிறுதியும் வருமால்.

23

107. அண்ட ராற்றலை வவ்விய தாரக னாவி
யுண்ட கொற்றவே லிருந்தது விடுத்திடி னுனையுங்
கண்ட துண்டம தாக்குமா லறநெறி கருதித்
தண்டம் வல்லையிற் புரிந்தில னித்துணை தாழ்த்தான்.

24

108. கெடுத லில்லதோ ரமரர்கள் சிறையிடைக் கிடப்ப
விடுதல் செய்தனை பல்லுக மவர்தமை யின்னே
விடுத லுய்வகை யாகுமான் மறுத்தியேல் விரைந்து
படுத லேநினக் குறுதியா முறையுமப் பரிசே.

25

109. ஆண்ட ளப்பில நோற்றனை வேள்வியி னாற்றி
மூண்ட தீயிடை மூழ்கினோய்க் கெந்தைமுன் னளித்த
மாண்டி டாதபே ராயுளோ டிருவொடும் வாளா
வீண்டொர் புன்னெறி யாற்றியே யிழுக்குவ தியல்போ.

26

110. சைய மேற்படு வளத்தொடு நீயுநின் றமரு
முய்ய வேண்டுமே லமரர்தஞ் சிறையினை யொழித்து
வைய மேலறத் தியல்புளி வாழிமற் றிதனைச்
செய்ய லாயெனி வீங்குவந் தடுவனாற் றிண்ணம்.

27

111. என்று மற்றிவை யாவையும் வரைபக வெறிந்தோ
னுன்ற னக்கறை கென்றன னீங்கினி யும்பர்
வன்ற ளைச்சிறை நீக்கியே யறத்தினிவ் வளத்தை
நன்று துய்த்தனை நெடிதுநீ வாழ்கென நவின்றான்.

28

112. மறம கன்றிடா வீரனிங் கினையன வகுத்தே
யறையும் வாசகங் கேட்டலும் வெகுளிமூ ளகத்தன்
பொறியு மிழ்ந்திடு கண்ணினன் புகையுமி ழுயிர்ப்ப
னெறியு மங்கைய னிறந்திடு முறுவல னிசைப்பான்.

29

113. மேலை யாயிரத் தெட்டெனு மண்டமும் வென்றே
யேனு கின்றதோர் தனியிறை யாகிய வெனக்குக்
கோல வாலெயி றின்னமுந் தோன்றிலாக் குதலைப்
பால னேகொலா மினையன புந்திகள் பகர்வான்.

30

114. விறலின் மேதகு மவுணராம் வலியிலார் மிகவும்
வறிய ராகிய தேவரா மேலவர் மழலைச்
சிறுவ ராந்தனி முதல்வற்கு மமைச்சியல் செய்வா
ரெறியு நேமிசூ ழுலகத்து வழக்கநன் றிதுவே.

31

115. நறைகொ டார்முடி யவுணர்தங் குலத்தினை நலித்து
வறுமை செய்தனர் கடவுள யவர்திரு மாற்றிக்
குறிய வேவலுங் கொண்டன னொழுக்கமுங் கொன்றேன்
சிறையும் வைத்தன னங்குடித் தமர்முறை செய்தேன்.

32

116. நெடிய மான்மக னறங்குரா ளாணையை நீங்கித்
தொடு பெருங்கட லுலகெலாங் கொள்ளினுஞ் சுரரை
விடுவ னல்லன்யான் வீடருஞ் சிறையினை விண்மே
லுடைய வண்டத்தி னுச்சியி னொருதலை யுய்ப்பேன்.

33

117. தப்பல் செய்திடு மகபதி முதலினோர் தமையு
மிப்ப திக்கணே கொணர்ந்தனன் சிறைசெய விருந்தேன்
கைப்பு குஞ்சிறை விடுவனோ விடுகிலன் கண்டா
யொப்ப ருந்திறற் சூரனென் றொருபெய ருடையேன்.

34

118. மின்னு வச்சிரப் படிவமும் வேறுபல் வரமு
முன்னோர் ஞான்றுதன் றாதைபெற் களித்திடு முறைமைப்
பின்னர் யாவரே பெயர்ப்பவர் பெருஞ்சம ரியற்றி
யென்னை யாற்றலால் வென்றிடு நீர்மையோ ரெவரே.

35

119. தான மாமுகத் தாரக வெம்பியைத் தடிந்த
மான வேற்படை யவன்மிசை வருவது வலித்தேன்
பானல் வாய்ச்சிறு சேயொடு நீயமர் பயிற
லூன மேயெனத் தடுத்தன ராதலா லொழிந்தேன்.

36

120. தூங்கு கையுடைத் தாரக விளவலைத் தொல்லை
யோங்க றன்னொடு மட்டது நென்னலே யுணர்ந்தேன்
பாங்கி னோரையப் பாலன்மே லுந்தியென் பழியும்
வாங்கு கின்றன னாளையே காண்டியான் மன்னோ.

37

121. அரிக ளெண்ணில ரிந்திர ரெண்ணில ரல்லாச்
சுரர்க ளெண்ணில ரண்டங்க டொறுந்தொறு மிருந்தார்
செருவி னாற்றலர் வழுத்தியே போயினர் சிவன்க
ணொருநல் வந்திடு சிறுவனோ வென்னெதிர் நிற்பான்.

38

122. ஓதி யென்பல வமரரை விடுகில னுணர்ச்சி
யேது மில்லதோர் மகவுதன் புன்மொழி யேற்றுப்
பேதை யாதலி னொற்றனாய் வந்தனை பிழைத்துப்
போதி நின்னுயிர் தந்தனன் யானெனப் புகன்றான்.

39

123. அகில மாள்பவ னிங்கிவை மொழிதலு மையன்
வெகுளி வெங்கனல் சிந்திட வுளஞ்சுட வெதுண்டு
புகையு மங்கியு முயிர்ப்புற மயிர்ப்புறம் பொடிப்ப
நகையும் வந்திடச் சிவந்திட விழியிவை நவில்வான்.

40

124. உய்ய லாவதோர் பரிசினை யுணர்வுறு துழலுங்
கைய கேண்மதி கட்செவி மதியொடு கலந்த
செய்ய வார்சடைப் பரம்பொருட் டிருநுதல் விழிசே
ரையன் மேதக வுணர்ந்திலை பாலனென் றறைந்தாய்.

41

125. மானு டத்தரைத் தேவென்பர் வானகத் தவரை
யேனை முத்தொழி லவரென்ப ரிருவர் தங்களையு
நானி லத்தினிற் பரம்பொரு ளிவரென நவில்வா
ரான சொற்றிற முகமனே சரதமற் றன்றால்.

42

126. ஆய புல்லிய புகழ்ச்சி போற் கொள்ளலை யறிவோர்
தேய மாவது யார்க்கு மெட்டாதது தெளியிற்
றூய வீடுபே றாளுவ தபநிடக் துணிவாம்
வாய்மை யாவது புகலுவன் கேளென வகுப்பான்.

43

127. மண்ண ளந்திடு மாயனும் வனசமே, லவனு
மெண்ண ரும்பக றேடியுங் காண்கிலா திருந்த
பண்ண வன்னுதல் விழியிடைப் பரஞ்சுட ருருவா
யுண்ணி றைந்தபே ரருளினன் மதலையா யுதித்தான்.

44

128. முன்ன வர்க்குமுன் னாகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா தீசனுந் தனிப்பெயர் தாங்கி
யின்னு யிர்க்குயி ராயரு வுருவமா யெவர்க்கு
மன்னை தாதையா யிருந்திடும் பரமனே யவன்காண்.

45

129. ஈச னேயவ னாடலான் மதலை யாயினன் கா
ணாசி லாவவ னறுமுகத் தண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
றேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

46

130. பூத மைந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியு
ளோது கின்றபல் லண்டத்தி னோராயிரத் தெட்டுங்
கோதி லாக்கமும் படைகளு முனக்குமுன் கொடுத்த
வாதி யீசனே யவனெனின் மாற்றுவ தரிதோ.

47

131. ஏத மில்புவி யண்டங்கள் பெற்றன மென்றே
பேதை யுன்னினை சிறிதவன் றன்னருள் பெறுவோர்
பூத மைந்தினு மேனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்ட மெவற்றிற்கும வேத்தியல் புரிவார்.

48

132. ஆதி யாகிய குடிலையு மைவகைப் பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பான்மையும் வேறு
மோத நின்றிடு கலைகளு மவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா வுருவம்.

49

133. எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்க
ளெங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

50

134. தாம ரைக்க ணன் முதலிய பண்ணவர் தமக்கு
மேமு றப்படு மறைக்கெலா மாதி பெற்றியனு
மோமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமுகத் துளொன் றாமவன் தன்மையார் வகுப்பார்.

பாரதம்

இது பாரதர் மரபில்வந்த அரசரைக்குறித்து இயற்றிய நூலாகும். இதனைத் தமிழில் விருத்தயாப்பாக ஆக்கியவர் கொங்கநாட்டில் சனியூரில் வைணவப் பிராமண குலத்து உதித்த வில்லிபுத்தூராழ்வாராகும். பெருங்காப்பிய நிலையை நன்கு தழுவிப் போரும் போர்க் கெழுங் காரணமும் மிக அழகாகக் கூறப் பெற்றுள்ளது. காலம் இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன் என்பர்.

1. குன்றி விளவாடைவரும் பொழுதெல்லா
   மலர்ந்ததிருக் கொன்றை நாறத்
   தென்றல்வரும் பொழுதெல்லாஞ் செழுஞ்சாந்தின்
   மணநாறுஞ் செல்வ வீதி
   நன்றறிவார் வீற்றிருக்கு நான்மாடக்
   கூடல்வள நகரி யாளும்
   வென்றிபுனை வடிசுடர்வேன் மீனவனை
   வானவர்கோன் மதலை கண்டான்.

2. அந்நிலத்தி னவரல்லா வந்தணரோ
   டிவனவனுக் காசி கூற
   வெந்நிலத்தீ ரெப்பதியீ ரெத்திசைக்குப்
   போகின்றீ ரென்று போற்றிச்
   சென்னியர்க்கும் வில்லவர்க்கு மணிமுடியாங்
   கனைகழற்காற் செழியன் கேட்பக்
   கன்னியைக்கண் ணுற்றுட வந்தனமென்
   றனன்மெய்மைக் கடவுள் போல்வான்.

3. வெய்தின்மக பதிமுடியில் வளையெறிந்து
   மீண்டநாள் விண்ணின் மாதர்
   கொய்துமலர் தொலையாத குளிர்தருக்க
   ளொருகோடி கொண்டு போந்து
   மைதவழ்தன் றடங்கோயில் வருதமத
   னொருமருங்கு வைத்த காவிற
   கைதவர்கோன் மற்றவர்க்குப் போனகஞ்செய்
   தருந்துமிடங் கற்பித் தானே.

4. வேதியரோ டக்காவி லிளைப்பாறி
   யிருந்தளவின் மின்கு ழாம்போற்
   றுதியருஞ் சேடியருந் தற்சூழச்
   சிலைமதனன் றனிசே விக்கச்

   சோதியரிச் சிலம்பரற்றத் துணைநெடுங்கண்
   செவியளப்பத் தொடித்தோள் வீசி
   யாதியர விந்தைமென நிருபன்மகள்
   விளையாடற் காங்கு வந்தாள்.

5. புத்திரர்வே றில்லாது புரிவரிய
   தவம்புரிந்து பூழி வேந்தன்
   சித்திரவா கனன்பயந்த சித்திராங்
   கதையென்னுஞ் செஞ்சொல் வஞ்சி
   பத்திரமு நறுமலரு மவயவம்போல்
   விளங்குவன பலவுங் கொய்து
   மித்திரமா மகளிருடன் விரவியொரு
   செய்குன்றின் மேவி னாளே.

6. வண்டானந் திரிதடந்து வரிவண்டி
   னினம்பாட மயில்க ளாடத்
   தண்டார்மெய்க் கிளிக்கூட்டஞ் சான்றோர்க
   ளுரைபயிற்றத் தமிழ்கண் மூன்றுங்
   கொண்டாடி யிளம்பூவைக் குழாந்தலைசாய்த்
   துளமுருகுங் குன்றி னுங்கட்
   கண்டாளக் குமரனைத்தங் கொடிக்கயலைப்
   புறங்காணுங் கண்ணி னாளே.

7. கூடியிரு வருமொருவ ரெனவிதயங்
   கலந்ததற்பின் குறித்த தூநீ
   ராடியவந் ததுந்தன்னை யருச்சுனனென்
   பதுமிளமா னறியக் கூறி
   நீடியதென் றையுறுவர் நீயினியே
   கெனவுரைப்ப நெடுங்கண் ணாள்போய்ச்
   சேடியருக் கஞ்ஞான்று நிகழ்ந்ததெல்லா
   மகிழ்ந்துருகிச் செப்பி னாளே.

8. அங்குயிர்போ லிருமருங்கு மாயமட
   மகளிரிருந் தாற்ற வாற்றக்
   கங்குலெனும் பெருங்கடலைக் கரைகண்டாள்
   கடற்புறத்தே கதிருங் கண்டா
   ளிங்கிவள்போய் மலர்க்காவி னெழில்விசயற்
   கீடழிந்த வின்ன லெல்லாஞ்
   சங்கெறியுந் தடம்பொருனைத் துறைவனுக்குச்
   செவிலியராந் தாயர் சொன்னார்.

9. ஐந்தருவி வீழலின்வா ழரியுடனே
யோரரியா சனத்தில் வைகிப்
புந்தியுற வொருவருமுன பூணாத
மணியாரம் பூண்ட கோமா
னந்தவுரை செவிப்படலு மதிதூரம்
விழைவுடன் சென்றுநீ தீர்த்தம்
வந்ததுநந் தவப்பயனென் றுட்கொண்டான்
மகோததியும் வணங்குந் தாளான்.

10. பஞ்சவரி னடுப்பிறந்தோன் பஞ்சவன்பே
ரவை யெய்திப் பஞ்சபாண
வஞ்சகன்செய் வஞ்சனையான் மதிமயங்கி
யிருந்திழியம் மதுரை வேந்தன்
சஞ்சரிக நறுமலர்த்தார்த் தனஞ்சயனென்
றறிந்தெழுந்து தழீஇக்கொண் டாங்க
ணஞ்சலினி யுனக்குரியள் யான்பயந்த
கடற்பிறவா வமுத மென்றான்.

11. கேண்மதியோர் மொழிமுன்னங் கேண்மையினங்
குலத்தொருவன் கிரீசன் றன்னைத்
தாண்மல ரன்புறப் பணிந்து தவம்புரிந்தான்
மகப்பொருட்டாற் றரித்த கொன்றை
நாண்மலரோன் வெளிநின்றந் நரபதிக்கு
நின்குலத்து நரேசர் யார்க்கும்
வாண்மருவுங் கரதலத்தோ யோரொருமா
மகவென்று வரமு மீந்தான்.

12. அன்றுரைத்த வரத்தின்வழி யநேகரவ
னிபருமக வளித்தா ரான்றோன்
றோன்றுரைக்க மறுதொழிநீ யொருமகவும்
பெண்மகவா யுதித்த தென்பா
னன்றுரைக்கு மொழியாயென் னவ்விபெறு
மகவெனக்கே நல்க வேண்டு
மென்றுரைத்தான் மன்றல்பெற விருந்தோனு
மாமனுரைக் கிசைந்தானன்றே.

13. தெண்டிரைசை தொழுகழலோன் றிருமகட்கு
வதுவையெனச் சேர சோழ
ரெண்டிசையின் முடிவேந்த ரெல்லோரு
முனிகணத்தோ ரெவரு மீண்ட

வண்டர்பிரா னளித்தசிலை யாண்டகையை
யலங்கார மனைத்துஞ் செய்து
மண்டபமொன் றினிலறுகால் வண்ணமணிப
பலகையின்மேல் வைத்தா ரன்றே.

14. கோமடந்தை களிகூரப் புகழ்மடந்தை
களிகூரக் கொற்ற விந்தை
மாமடந்தை களிகூர மணவினையொப்
பனைக்குரிய மடந்தைமார்கள்
பூமடந்தையனை யாளைப் பூட்டிய வெண்
டரளமணிப் பூண்களாலே
நாமடந்தை நிகராக்கி நாயகன்றன்
வலப்பாக நண்ணுவித்தார்.

15. இந்திரனுஞ் சசியுமென விறையோனு
முமையுமென வெம்பிரானுஞ்
செந்திருவுமெனக் காமதேவு மிரதியுமென
வெஞ் சிலைவலோனுஞ்
சந்தணி பூண் முலையாளுஞ் சதுர்மறையோர்
சடங்கியற்றத் தழல் சான்றாகத்
துந்துபியின் குலமுழங்கச் சுரிசங்கின்
குழாந்தழங்கத் துலங்க வேட்டார்.

வேறு

16. பன்னாளி னெடும்போகம் பயின்ற பின்னர்ப்
பப்புருவா கனனென்னும் பைதற்றிங்க
ளன்னானை யவள்பயந்தாள் பயந்தபோதே
யம்மகவை யுவகை யுடனவனுமீந்தான்
றென்னாவென் றளிமுரல வேம்பின் றண்டார்த்
தேம்பரிசில் வழங்குபுயத் தென்னர்கோவு
நின்னாலென் மரபு நிலை பெற்றதென்று
நேயமுடன் கவர்ந்துதுயர் நீங்கினானே.

17. பார்த்தனருச் சுனன்கரியோன் விசயன்பாக
சாதனிசவ் வியசாசிபற் குனன்பா
ரேத்துதனஞ் சயன்கிரீடி சுவேதவாக
னெனுநாமம்படைத்த பிரான் யாழோரின்பம்
வாய்த்தவித ழமுதமொழிப் பேதைதாதை
மனையிருக்கத் திருவழுதி வளநாடுள்ள
தீர்த்தமுழு வதுமாடி யன்பாற் றன்பாற்
றிருமலையுங் கைதொழுது சிந்தித்தானே.

18. கன்றியவெங் கரன்முதலோர் களத்தில்வீழக்
        கவிகுலநா யகனிதயங் கலங்கிவீழ
வொன்றுபட மரமேழு முதகியேழு
        மூடுருவச் சரந்தொடுத்த வொருவில்வீரன்
றுன்றியெழு பதுவெள்ளங் குரங்கின்சேனை
        சூழ்போத வாய்த்ததிருத் துணைவ னோடுஞ்
சென்றவழி யின்றளவுந் துளவ நாறுஞ்
        சேதுதரி சனஞ்செய்தான் றிறல்வல் லோனே.

19. வன்றிரைவெங் களிற்றினங்க ளிரண்டுபா லு
        மலையாம விடுங்கணைய மரனேபோலுந்
தன்றலைக ளமிழாம லெடுப்பான்மேருத்
        தாழ்கடலி னீட்டியதோர் தடக்கைபோலு
மன்றியிரு பூதலமு மிருதட்டாக
        வகத்தியன்வாழ் குன்றினையு மணிமுக்கோணக்
குன்றினையுஞ் சீர்தூக்கி நிறுப்பதாகக்
        கோகனத னமைத்ததுலைக் கோலும் போலும்.

20. அண்டர்தம கங்கையினும் வானுண்டென்
        றரம்பையரோ டவனியில்வந் தாடுங்கன்னித்
தண்டுறையுந் தண்பொருநைப் பாவநாசத்
        தடந்துறையும் படிந்துநதித் தடமேபோந்து
பண்டுமழுப் படையோனம் மழுவாற்கொண்ட
        பாக்கியபூ மியுஞ்சேரன்பதிகள் யாவுங்
கண்டுமனங் களிகூரச் சென்றுமேலைக்
        கடல்கண்டா னுரகதலங் கண்டு மீண்டான்.

அந்தநெடுந் திசைப்புனல்க ளாடுநாளி
        லைந்துதடத் தரம்பையரோ ரைவர்சேர
விந்திரன்வெஞ் சாபத்தா லிடங்காகி
        யிடருழந்தோர் பழையவடி வெய்தநல்கிச்
சிந்துதிரை நதிபலவுஞ் சென்று தோய்ந்து
        திங்களுட னரவுறவு செய்யும் வேணிக்
கொந்தவிழு மலரிதழித் தொடையோன் வைகுங்
        கொடிமதில்சூழ் கோகன்னங் குறுகி னானே.

22. ஆகன்ன முறச்செம்பொன் வரைவில் வாங்கி
        யவுணர்புரங் கட்டழித்தோ னடியில் வீழ்ந்து
கோகன்ன வளம்பதியிற் றன்பின் வந்த
        குலமுனிவர் தமையிருத்திக் கோட்டுக்கோட்டு

நாகன்னப் பெடையுடனே யாடுங் கஞ்ச
        நறைவாவி வண்டுவரை நண்ணி யாங்கட்
பாகன்ன மொழிக்கனிவாய் முத்த மூரற்
        பாவை நலம் பெறமுக்கோற் பகவ னானன்.

23. வெங்கதிர்போய்க் குடதிசையில் வீழ்த பின்னர்
        வீழாமன் மாலையின்வாய் மீண்டு மந்தச்
செங்கதிர்வந் தெழுந்ததென மீது போர்த்த
        செய்யவா டையுந்தானுந் தீர்த்த வாரிச்
சங்கதிரு மணிவீதி நகரி சூழ்ந்த
        தடஞ்சார லிரைவதக சயில நண்ணிப்
பொங்கதிர்பைம் புயலெழுந்து பொழியுங் கங்குற்
        போயொருநீள் வடதருவின் பொதும்பர் சேர்ந்தான்.

சீவகசிந்தாமணி

இது முச்சங்க நூல்கள்போன்று தலைசிறந்து விளங்குவதாகும். திருத்தக்கதேவர் என்னும் புலவர் பெருந்தகை கொச்சகப்பாவில் பாடியருளினர். சீவகன் என்பவனது சீவியசரித்திரங் கூறுவதனால் இப்பெயர்பெற்றது. இவ்வரிய நூலை அச்சேற்றித் தமிழ்ப்புலவர் உலகுக்குதவியவர் டக்ரர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள்.

கனகமாலையார் இலம்பகம் 1723-ம் செ. தொடக்கம்.

1

இனத்திடை ஏறபோலும் ஏறழ்வலி உரைத்த மாற்றம்
மனத்திடை மகிழ்ந்து கேட்டு மைந்த நந்தட்ட னேயாம்
புனத்திடை மயி லாளாற் பொருளுரை பெற்று வந்தான்
எனத்தவி ராது சென்றுங் (கு) எய்தினன் என்ப அன்றே.

2

கருமுகிற் பொடித்த வெய்யோன் கடலிடை நடப்பதேபோற்
திருமுகஞ் சுடர நோக்கிச் சீவகன் சென்று சேர்ந்தான்
தருமனை அரிதிற் கண்ட தனஞ்சயன் போலத் தம்பி
திருமலர்த் தடக்கை கூப்பிச் சேவடி தொழுது வீழ்ந்தான்.

3

தாமரைத் தடக்கை கூப்பித் தன்முதற் கிடந்த தம்பி
தாமரைத் தடத்தை ஒத்தான் றமையனும் பரிதி யொத்தான்
றாமரைக் குணத்தினானை மும்முறை தழுவிக் கொண்டு
தாமரைச் செங்கணானுந் தன்னுறு பரிவு தீர்த்தான்

4

என்னுறு நிலைமை யோரா (து) எரியுறு தளிரின் வாடிப்
பொன்னுறு மேனி கன்றிப் போயினீர் பொறியி லாதேன்
முன்னுற விதனை போரேன் மூரிப்பே ரொக்க லெல்லாம்
பின்னுறு பரிவு செய்தேன் பேதையேன் கவல லென்றான்.

5

ஆக்கமும் கேடும் உற்றீர் அடிகளே அல்லீர் பேலைப்
பூக்குலாம் அலங்கல் மாலைப் புட்கொடி யாற்கும் உண்டோ
வீக்குவார் முலையி னார்போல் வெய்துயிர்த் (து) உருகி நைய
நோக்கினீர் என்னை என்றான் நுதியழற் குட்டம் ஒப்பான்.

6

குரவரைப் பேணலின்றிக் குறிப்பிகந்(து) ஆய பாவம்
தரவந்த பயத்தி னால்இத் தாமரைப் பாதம் நீங்கிப்
பருவரும் துன்பம் உற்றேன் பாவியேன் என்று சென்னி
திருவடி மிசையின் வைத்துச் சிலம்பநொந்(து) அழுதிட்டானே

7

பரிந்தழு கின்ற தம்பி பங்கயம் அனைய செங்கண்
பொருந்துபு துடைத்து வேண்டா புலம்புதல் காளை என்று
மருந்தனாள் உறையும் கோயில் மடுத்துடன் கொண்டு புக்கான்
அருந்ததிக் கற்பினாளை அடிபணிந்(து) அவனும் கண்டான்.

8

கொழுநனைக் குறிப்பினாலே குமரன் யாரென்று நோக்கக்
கழுமிய கற்பி னாய்நின் மைத்துனன் அனையன் என்ன
எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்றம் என்றாள்
கொழுமலர்த் தடங்கட் செவ்வாய்க் குவிமுலைக் கொம்ப னாளே.

9

விருந்தவள் செய்த பின்றைத் தம்பியும் தானும் வேறாய்
இருந்துழி என்னைக் காணா (து) உற்றதை எவன்கொல் என்று

பொருந்தினார் செய்த (து) எல்லாம் புரைவிடுத்(து) உரைமோ [என்னக்
கருங்கழல் செங்கட் பைந்தார்க் காளையீ (து) உரைக்கின்றானே.

10

புண்ணுமிழ் குருதி போர்த்த பொருகளம் போன்று தோன்றி
அண்ணலம் கதிரும் அத்தம் அடைந்துசெவ் வான்கொ ளந்தித்
துண்ணெனக் களத்தின் நீங்கித் தொன்நகர்ப் புறத்துத் தொக்கே
எண்ணுமின் செய்வ தென்றான் பதுமுகன் எறியும் வேலான்.

கம்பர் இராமாயணம்

இது இதிகாசம் மூன்றனுள் ஒன்று. அயோத்தியை ஆண்ட தசரதன் மகனாகிய ஸ்ரீ இராமச்சந்திரனைத் தலைவனாகக் கொண்டு விருத்த யாப்பிற்குகந்த கம்பர் என்னும் கவி அரசரால் தமிழில் பாடப்பெற்றது. (வேறு புலவனும் பாடியுளன்) நூல் அரங்கேறிய காலம் கி. பி. 1132 முதல் 1162 வரை என்பர். இடம் குலோத்துங்க சோழன் அவைக்களம்.

எழுச்சிப்படலம்

(52 ம் செ. தொடக்கம்.)

1. நசையுறு பரியுந் தேரும் வீரருங் குழுமி யெங்கும்
விசையொடு முடுகப் பொங்கி வீங்கிய தூளி விம்மப்
பசையுறு துளியின் றாரைப் பசுந்துளை யடைத்த மேகந்
திசைதொறு நின்ற யானை மதத்துளை செறிந்த வன்றே.

2. கேடகத் தடக்கை யாலே கிளரொளி வாளும் பற்றிச்
சூடகத் தளிர்க்கை மற்றைச் சுடர்மணித் தடக்கை பற்றி
ஆடகத் தோடை யானை யழிமதத் திழுக்க லாற்றிற்
பாடகக் காலி னாரைப் பயப்பயக் கொண்டு போனார்.

3. செய்களின் மடுவி னன்னீர்ச் சிறைகளி னிறையப் பூத்த
நெய்தலுங் குமுதப் பூவு நெகிழ்ந்த செங் கமலப் போதுங்
கைகளு முகமும் வாயுங் கண்களுங் காட்டக் கண்டு
கொய்திவை தருதி ரென்று கொழுநரைத் தொழுகின்றாரும்.

4. பந்தியம் புரவி நின்றும் பாரிடை யிழிந்து வாசக்
கொந்தள பாரஞ் சோரக் குலமணிக் கலன்கள் சிந்தச்
சந்தநுண் டுகிலும் வீழத் தளிர்க்கையா லணைத்துச் சார
வந்தது வேழ மென்ன மயிலென விரியல் போவார்.

5. குடையொடு களிறுந்தொங்கற் குழாங்களுங் கொடியின்காடும்
இடையிடை மயங்கி யெங்கும் வெளிகரந் திருளைச் செய்யப்
படைகளு முடியும் பூணும் படர்வெயில் பரப்பிச் செல்ல
இடையொரு கணத்தி னுள்ளே யிரவுண்டு பகலுமுண்டே.

6. அறலியற் கூந்தல் கண்வா ளமுதகு குதலைச் செவ்வாய்
விறலிய ரோடு நல்யாழ்ச் செயிரியர் புரவி மேலோர்
நறைசெவிப் பெய்வ தென்ன நைவள வமுதப் பாடல்
முறைமுறை பகர்ந்து போனார் கின்னர மிதுன மொப்பார்.

7. அருவிபெய் வரையிற் பொங்கி யங்குச நிமிர வெங்கும்
இரிதரச் சனங்கள் சிந்து மிளங்களிச் சிறுகண் யானை
விரிசிறைத் தும்பி வேறோர் வீழ்மதந் தோய்ந்து மாதர்
சுரிகுழல் படிய வொற்றிப் பிடியொடுந் தொடர்ந்து செல்ல.

8. பொய்கையங் கமலக் கானிற் பொலிவதோ ரன்ன மென்னக்
கைகயர் வேந்தன் பாவை கணிகைய ரணியி னீட்டம்
ஐயிரு நூறு சூழ்ந்த வாய்மணிச் சிவிகை தன்மேல்
தெய்வமங் கையரு நாணத் தேனிசை முரலப் போனாள்.

9. விரிமணித் தார்கள் பூண்ட வெப்பரி வெரிநிற் றோன்றும்
அரிமலர்த் தடங்க ணல்லா ராயிரத் திரட்டி சூழக்
குருமணிச் சிவிகை தன்மேற் கொண்டலின் மின்னி தென்ன
இருவரைப் பயந்த நங்கை யாழிசை முரலப் போனாள்

10. வெள்ளையிற் றிலவச் செவ்வாய் முகத்தைவெண் மதிய மெ
கொள்ளையிற் சுற்றி மீன்கள் குழுமிய வனைய வூர்தி [ன்று
தெள்ளரிப் பாண்டிற் பாணிச் செயிரிய ரிசைத்தேன் சிந்த
வள்ளலைப் பயந்த நங்கை வானவர் வணங்கப் போனாள்.

11. செங்கையின் மஞ்ஞை யன்னஞ் சிறுகிளி பூவை பாவை
சங்குறை கழித்த தன்ன சாமரை முதல தாங்கி
இங்கல தெண்ணுங் கானமற் றெழுதிரை வளாகத் துள்ளும்
மங்கைய ரில்லை யென்ன மடந்தையர் மருங்கு போனார்.

12. காரண மின்றி யேயுங் கனலெழ விழிக்குங் கண்ணார்
வீரர்வேத் திரத்தார் தாழ்ந்து விரிந்தகஞ் சுகத்து மெய்யார்
தாரணி புரவி மேலார் தலத்துளார் கதித்த சொல்லார்
ஆரணங் கனைய மாத ரடிமுறைகாத்துப் போனார்.

13. கூனொடு குறளுஞ் சிந்துஞ் சிலதியர் குழாமுங் கொண்ட
பானிறப் புரவி பன்னப் புள்ளெனப் பாரிற் செல்லத்
தேனொடு மிஞிறும் வண்டுந் தும்பியும் பந்தர் செய்யப்
பூநிறை கூந்தன் மாதர் புடைமடப் பிடியிற் போனார்.

14. துப்பினின் மணியிற் பொன்னிற் சுடர்மர கதத்தின் முத்தின்
ஒப்பற வமைந்த தேரி னோவியம் போல வேறி
முப்பதிற் றிரட்டி கொண்ட வாயிரர் முகிழ்மென்கொங்கைச்
செப்பருந் திருவி னல்லார் தெரிவையர் சூழப் போனார்.

15. செவிவயி னமிர்த கேள்வி தெவிட்டினார் தேவர் நாவின்
அவிகையி னளிக்கு நீரா ராயிர கோடி சூழக்
கவிகையி னீழற்கற்பி னருந்ததி கணவன் முத்தின்
சிவிகையி னன்ன மூருந் திசைமுக னென்னச் சென்றான்.

16. பொருகளி றிவுளி பொற்றேர் பொலங்கழற் குமரர் முந்நீர்
அருவரை சூழ்ந்ததென்ன வருகுபின் முன்னுஞ் செல்லத்
திருவளர் மார்பர் தெய்வச் சிலையினர் தேரர் வீரர்
இருவரு முனிபின் போன விருவரு மென்னப் போனார்.

17. நித்திய நியம முற்றி நேமியான் பாதஞ் சென்னி
வைத்தபின் மறைவலோர்க்கு வரம்பறு மணியும் பொன்னும்
பத்தியா னிரையும் பாநம் பரிவுட னல்கிப் போனான்
முத்தணி வயிரப் பூணான் மங்கலமுகூர்த்த நன்னாள்.

18. இருபிறப் பாள ரெண்ணா யிரர்மணிக் கலச மேந்தி
அருமறை வருக்கமோதி யறுகுநீர் தெளித்து வாழ்த்தி
வருமுறை வந்தார் கோடி மங்கையர் மழலைச் சொல்லார்
பருமணிக் கலாப மார்பப் பலாண்டிசை பாடிப் போனார்.

19. கண்டில னென்னை யென்பார் கண்டன னென்னை யென்பார்
குண்டலம் வீழ்ந்த தென்பார் குறுகரி தினிச்சென் றென்பார்
உண்டுகொ லெழுச்சி யென்பா ரொலித்தது சங்க மென்பார்
மண்டல வேந்தர் வந்து நெருங்கினர் மயங்கி மாதோ.

20. பொற்றொடி மகளி ரூரும்பொலன் கொடார்ப் புரவிவெள்ளஞ்
சுற்றுபு கமலம் பூத்த தொடுகடற் றிரையிற் செல்லக்
கொற்றவேன் மன்னர் செங்கைப் பங்கயக் குழாங்கள் கூம்ப
மற்றொரு கதிரோ னென்ன மணிநெடுந் தேரிற் போனான்.

21. ஆர்த்தது விசும்பை முட்டி மீண்டகன் றிசைக ளெங்கும்
பேர்த்ததங் கொருவர் தம்மை யொருவர்கட் புலங்கொளா
தீர்த்தது செறிந்ததோடித் திரைநெடுங்கடலையெல்லாந் [மைத்
தூர்த்தது சகரரோடு பகைத்தெனத் தூளி வெள்ளம்.

22. சங்கமும் பணையும் கொம்புந் தாளமுங் காளத்தோடும்
மங்கலபேரி செய்த பேரொலி மழையை யோட்டத்
தொங்கலுங் குடையுந் தோகைப் பிச்சமுஞ் சுடரையோட்டத்
திங்கள்வெண் குடைகண் டோடத் தேவரு மருளச் சென்றார்.

23. மந்திர கீதவோசை வலம்புரி முழங்கு மோசை
அந்தண ராசியோசை யார்த்தெழு முரசி னோசை
கந்துகொல் களிற்றி னோசை கடிகையர் கவியி னோசை
இந்திர திருவன் செல்ல வெழுந்தன திசைக ளெல்லாம்.

34. நோக்கிய திசைக ளெல்லாந் தன்னையே நோக்கிச் செல்ல
வீக்கிய கழற்கால் வேந்தர் விரிந்த கைம்மலர்கள் கூப்பத்
தாக்கிய களிறுந் தேரும் புரவியும் படைஞர் தாளும்
ஆக்கிய தூளி விண்ணு மண்ணுல காக்கப் போனான்.

25. வீரருங் களிறுந் தேரும் புரவியு மிடைந்த சேனை
போர்விட மில்லை மற்றோ ருலகில்லை பெயர்க்கலாகா
நீருடை யாடையாளு நெளித்தனண் முதுகை யென்றால்
பார்பொறை நீக்கினானென் றுரைத்ததெப் பரிசு மன்னோ.

சகுந்தலை வெண்பா

இது வடமொழிக் கடலை நன்கு கண்ட காளிதாச மகா கவியினால் எழுதப்பெற்றுள்ளது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L. அவர்கள். தற்போது இலங்கை அறங்கூறவையத்து உறுப்பினராகக் கடமைபார்ப்பவர். பரமேஸ்வரக் கல்லூரித் தலைமையாசிரியர். காலம் 20 ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். (1933.)

பிறப்புக் காண்டம்

1. பொன்னுலகின் கோவிருந்த பூந்தவிசின் முன்பணிந்து
மின்னற் கொடியனைய மேனகை—தன்னிகரில்
தேவர்க் கிறைவாழி தேரே னருள்கென்றாள்
ஏவற் குறிப்பிற் கிசைந்து.

2. கற்பகத்தின் மிக்க நற் காரிகையே யின்றெனக்
குற்றதிகி லொன்றுரைப்பேன் கேள்—முற்றற்
கரிய கடுந் தவத்தை யாற்றினான் பாரிற்
பெரிய முனி கோசி கன்.

3. இமையவர் தம்வேந்தாக யானுகரு மிவ்வாழ்
வமையா தெனக்கிவ் வகலுட்—சமனாக
வேட்டா ருளரேலவை வேற்கண்ணாய் நீயறிய
மாட்டாயோ கூறாய் மதி.

4. மன்ன னுரைத்த மொழியிவற்றைக் கேட்டவன்றன்
முன்ன முணாந்திட்ட மேனகைநன்—குன்னிக்
கழறுவாள விண்ணரசே காதி மகன் சீற்றம்
பிழைத்துப் பிழைப்பரோ பின்.

5. வெண்ணெ யுருகாதோ வெங் கதிரின்முன்னுற்றாற்
பெண்ணரசி யுன் வடிவின் பேரழகைக்—கண்ணுற்ற
புங்கவருந் தேடுவரோ விண்பொருளைப் பூங்கொடியே
சங்கை யுனக்கேன் றவிர்.

6. ஏனை யரம்பையர்க ளீடில்லை யென்றறிந்து
மானே யழைத்தேன் மதனைவற்—றுனைசூழ்
கோபளமே யுன்னைக் குறைபிரப்பான் கோசிகனும்
காமக்கரை காணான் கண்டு.

7. தேவர்கோன் கூறுமித் தேறுதலைக் கேட்ட நங்கை
ஆவி யழிந்தாலு மாற்றுவதுன்—சேவகமே
தேர்ந்தேற் குறுதுணையாத் தென்றலெனுந் தேவை
ஈந்தருள்க வென்றா ளிரந்து.

8. பூவாளி கொண்டுன்முன் போவான் மதவேளும்
நீவாழி மேனகை நீள்புவியிற்—பாவேறு
தென்றலான் வேனிலான் றேர்செலுத்த வுய்ப்பன்யான்
என்றனன் றேவேந் திரன்.

9. காவி மயிற்றோகை கார்வேந்தன் முன்பணிந்து
மேவினாள மேவியதும் மேதினியில்—ஆவி
அசையா துயிர்க்கு மருந்தவத்தோ னுள்ளம்.
மிசையே முகிழ்க்கும் மயல்.

10. ஓடு முளத்தை யொருதலையாய் மாய்த்திட்டேன்
ஈடு மெமக்குண்டோ விவ்வுலகில்—வீடுற்றேன்
என்று பெருமிதங்கொண் டெண்ணி யிருப்பனை
வென்றிடுங்கொல் மாயை விளைந்து.

11. பெண்ணில்லா வெங்கானிற் பேதை மனமெங்ஙன்
விண்கோட்டை கட்டினாய் வீணாகத்—திண்மை
நினைவழியக் கற்றாய் நிறை யழியா யென்று
தனை மறந்தா னம்மா தவன்.

14. வேனில் விளைக்கும் விரிகதிரோன் றன்கிரணம்
கானிற் குளிர்ந்து கவின்பொன்னாய்—வானிற்
படந்தீட்ட மாலை பனிமதி யின் றாதாய்
நடந்ததே பைய நிலத்து.

15. அரதனமும் பொன்னும் மணிசெய்யும் வானத்
திரைகடந்து வந்த திருமின்—தருசூழ்
பசும்புற் றரை யரங்கா யாடினாள் பாடி
அசும்புற்ற தேன் வாயினாள்.

16. காலிற் சிலம்பரியே கையிற் செறிவளையே
மேலுற்ற பூம்பட்டின் மேகலையே—ஆலித்துக்
கானை யுருக்குமக் காரிகையின் கானத்திற்
கான மெய்த் தாள மவை.

17. சாதித்து யோகத்தைச் சார்ந்தா ரகத்துமுரல்
கீதம்போற் கிண்கிணிபோற் கேசிட்குமிசை—யோதமுயிர்
ஓவியம்போ லங்கிருக்கு மொண்முனிவன் றன்னிதயம்
பாவியதே பண்ணின் றிறம்.

18. ஏதே யுறத்தீர்க்கு மிவ்விசையென் றோர்ந்திடுவான்
மீதே யிளந்தென்றல் மெல்லென்று—தாதார்பூ
வாசத் தொடுவீச வாசவற்கு வாழ் வளித்துக்
கோசிகன்றன் கண்ணைவிழிக் கும்.

19. கண்ணை மெலவிழித்துக் கண்டானே கோசிகன்மன்
பெண்ணென்ற தெய்விகப் பேரழகைக்—கண்டவுடன்
கொண்டதுளங் காமமோ வன்றிக் கவிதையோ
பண்டைவினை தானோ பகர்.

21. என்று நினைந்தா னெழுந்தான் முனிந்தான்முற் [தரை
பொன்னின்ற மின்னல்சேர் பொய்யிடையாள்—சென்னி
மீதேபடிந்தாள் முனிவ னகம்படிந்தாள்
கோதை யவிழ்ந்த குழல்.

22. என்னைப் பணிந்திவ் விளங்கொடியாள் வீழ்கின்றாள்
என்ன குறையுற்றா ளென்றாய்வாம்—நன்மனமே
பெண்ணிற்கே யஞ்சினாய் பேதுற்றா யென்றுதவன்
தண்ணுற்றான் வெம்மை தணிந்து.

23. தமியளா யிக்கானிற் றாழ்குழலாய் நீயே
அமுதொத் திசைபாடி யாடிக்—குமுதத்தை
யொத்த விதழ்வாயா லோர்மொழியுங் கூறாய்ம
லித்தரையி லுற்ற தெவன்.

நாமகள் தசாங்கம்

இது முதுதமிழ்ப் பெரும் புலவர்

நவாலியூர் திரு. க. சோமசுந்தரம் அவர்கள் பாடியது'

காலம் 1936ம் வருடம்.

நாடு: (1) செந்நாப் பசுங்கிளியே! தென்பாற் குறுமுனியீ
நந்தாத் தமிழரசி நாடுரையாய்—வந்தேறி
மங்குறவழ் வேங்கடமும் வான்குமரி யாறுமிடைத்
தங்குதமிழ் நன்னாடு தான்.

மலை: (2) அம்பொற்பசுங்கிளியே! அன்றிளங்கோவாய்ந்தளித்த
செம்பொற் சிலம்பி சிலப்புரையாய்—உம்பரெலாம்
வந்துலவு மிந்துலவு வண்டுபடு தண்டலைசூழ்
வந்துலவு தென்பொதிய மாம்.

ஆறு: (3) அம்பா லனையமொழி யஞ்சுகமே! செஞ்சொலருள்
ஐம்பா லழகிதமிழ் ஆறுரையாய்—நம்பாதார்
ஈட்டிச் செழுங்கழுவி லேறவெதி ரேறிவரும்
ஏட்டிற் சுமந்தவைகை யாறு.

ஊர்: (4) தாமப் பசுங்கிளியே! சங்கத் தலையிருத்தி
ஊமைக் குறைதெரித்தா ளூருரையாய்—தூமமலி
மேன்மாடத் தும்பர் விதுப்பழித்த நெற்றியர்வாழ்
நான்மாடக் கூடல் நகர்.

முரசு: (5) வண்டாடுஞ் சோலை மரகதமே! வானவருங்
கொண்டாடுஞ் செல்விபறை கூறிடுவாய்—பண்டே
வழுத்து மியலிசை நாடகமு மாகப்
பழுத்த தமிழ்மூன்றும் பறை.

கொடி: (6) முன்னம் பசுங்கிளியே! மூட்டுமறைப் பூட்டவிழ்ந்த
பொன்னங் கொடிக்குக் கொடிபுகலாய்—பின்னமிலா
வன்னக் கொடியிடத்தான் வேதண்ட மட்டுமுயர்
அன்னக் கொடியென் றறி.

மாலை: (7) தண்டலையில் வாழுமிளந் தத்தாய்! தமிழரசி
கொண்டணியும் மாலையொன்று கூறிடுவாய்—தொண்
மாமாலை நீக்கி மணிமாலை யீந்தருளும் [டருள
பாமாலை யென்றே பகர்.

யானை: (8) தேனேறு செஞ்சொற் சிறுகிளியே! செய்யதமிழ்
மானேறு பட்டத்து வாரணமென்—ஞானக்
கலைபடு கடாக்களிறுங் கௌசிகனுர் தந்த
மலைபடு கடாக்களிறும் மற்று.

குதிரை: (9) சோலைப் பசுங்கிளியே! சொல்லின் கிழத்திதிரு
மாலைப் பரிமா வகுத்துரையாய்—மேலை
வரிபாடு மன்பர் வகையாய் வகுத்த
பரிபாட லாடற் பரி.

செங் கோல்: (10) வானகம்போல் நாசி மரகதமே! வாய்ந்தமொழி
தேனகம்போற் றித்திப்பான செங்கோலென்—மான
பல்காப் பியநம் பணிந்துதலை மேற்சூடும் [முடன்
தொல்காப் பியமெனவே சொல்.

பிள்ளைத்தமிழ்

இது மதுரைச் சொக்கப்பெருமானின் இடப்பாகத்தமர்ந்த மீனுட்சியம்மையாரைத் தலைவியாகக் கொண்டு பாடப்பெற்றது. இதன் ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள். இவர் திருநெல்வேலியைச் சார்ந்த ஓர் சிற்றூரில் சைவவேளாண்மரபு துலங்கச் சண்முகசிகாமணிக் கவிராயருக்கு மகனுகத் தோன்றியவர். திருச்செந்தூர் முருகக்கடவுளின் திருவருள் பதிந்தமையினுல் அருட்புலமை உள்ளார். காலம் கி. பி. 16ம் நூற்ருண்டின் பிற்பகுதி என்பர்.

முத்தப்பருவம்

காலத் தொடுகற் பனைகடந்த கருகூலத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த கடவுண்மணியே! யுயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத் தருள் பழுத்த
மலர்க்கற் பகமே! யெழுதாச்சொன் மழலைததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! யுயிர்த்துணையாந் தோன்ருத்துணைக்கோர் துணை
துவாதசாந்தப் பெருவெளியிற் றுரியங்கடந்த பரநாத[யாகித்
மூலத் தலத்து முளைத்தமுழு முதலே! முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் மூலையாய் முத்தந்தருகவே. (1)

உருகி யுருகி நெக்கு நெக்கு ளுடைந்து கசிந்திட் டசும்பூறு
முழுவ லன்பிற் பழவடியா ருள்ளத்தடத்தி லூற்றெடுத்துப்
பெருகுபரமா னந்தவெள்ளப் பெருக்கே! சிறியேம் பெற்றபெரும்
பேறே! யூறு நறைக்கூந்தற் பிடியே! கொடிநுண் ணுசுப்பொசிய

வருகுங் குமக்குன் றிரண்டேந்து மலர்ப்பூங் கொம்பே! தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை மழலை யரும்பச் சேதாம்பன்
முருகு விரியுஞ் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந்தருகவே. (2)

கொழுதிமதர்வண்டுழக்குகுழற்கோதைக்குடைந்தகொண்டலுநின்
குதலைக் கிளிமென் மொழிக்குடைந்த குறுங்கட் கரும்புங்கூன்
[பிறைக்கோ
டுழுத பொலன்சீ றடிக்குடைந்த செந்தாமரையும் பசுங்கழுத்துக்
குடைந்த கமஞ்சூற் சங்குமொழு கொழிய கமுகுமழ கொழுகுதொய்யி
லெழுது தடந்தோட் குடைந்ததடம் பணையும் பணைமென் முலைக்
[குடைந்த
விணைமா மருப்புந் தருமுத்துன் றிருமுத்தெவ்வா விகபரங்கண்
முழுதுந் தருவாய் நின்கனிவாய் முத்தந்தருக முத்தமே
முக்கட்சுடர்க்கு விருந்திடும் முலையாய் முத்தந் தருகவே. (3)

வருகைப்பருவம்

தொடுக்குங் கடவுட்பழம்பாடற் றொடையின்பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே! யகந்தைக் கிழங்
[கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே! வளர்சிமய
விமயப் பொருப்பில் விளையாடு மிளமென்பிடியே! யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள்ளத்திலழ
கொழுகவெழுதிப் பார்த்திருக்கு முயிரோவியமே! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக்கொடியே! வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு வாழ்வே! வருக வருகவே. (4)

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற் பிடியே! வருக முழுஞானப்
பெருக்கே! வருக பிறைமௌலிப் பெம்மான்முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே! வருக மும்முதற்கும் வித்தே! வருக வித்தின்றி
விளைக்கும் பரமானந்தத்தின் விளைவே! வருக பழமறையின்
குருந்தே! வருக வருள்பழுத்த கொம்பே! வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளங் குடைவார்பிறவிப் பெரும்
[பிணிக்கோர்
மருந்தே! வருக பசுங்குதலை மழலைக்கிளியே! வருகவே
மலயத்துவசன் பெற்றபெரு வாழ்வே! வருக வருகவே; (5)

சிலப்பதிகாரம்

இது சேரர் முனியாகிய இளங்கோவடிகளால் முத்தமிழிலக்கிய முறையமையப் பாடப்பட்டது. சிலம்பினது செய்தி கூறுமாற்றால் இப்பெயர் கொண்டுள்ளது. கோவலன் கண்ணகி என்பவர்களைப் பாட்டுடைத் தலைவன் தலைவியராக அமைத்து, இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன்னர் அரங்கேற்றப் பெற்றது.

பதிகம்

குணவாயிற் கோட்டத் தரசு துறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்குக்
குன்றக் குறவ ரொருங்குடன் கூடிப்
பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழ
லொருமுலை யிழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் றமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட்புலங் காண விட்புலம் போய
திறம்பூது போலுமஃ தறிந்தரு ணீயென
வவனுழை யிருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவன துபட்டதென் றுரைப்போ
ளாரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவல னென்பானோர் வாணிக னவ்வூர்
நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேடுறக்
கண்ணகி யென்பாண் மனைவி யவள்காற்
பண்ணமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தன னதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் றன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக் கல்லதை யிச்சிலம்
பியாப்புற வில்லையீங் கிருக்கென் றேகிப்
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென
வினைவிளை கால மாதலின் யாவதுஞ்
சினையலர் வேம்பன் றேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்க் கள்வனைக்
கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்

கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணா ணெடுங்கணீ ருகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
முத்தார மார்பின் முலைமுகந் திருகி
நிலைகெழு கூட னீளெரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகு மிவளென
வினைவிளை கால மெனறீ ரியாதவர்
வினைவிளை வென்ன விறலோய் கேட்டி
யதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க்
கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம் பலத்து நள்ளிருட் கிடந்தே
னாரஞ ருற்ற வீரபத் தினிமுன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றங் கொங்கையின் விளைத்தோய்
முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்
முந்தைப் பிறப்பிற் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கம னென்னும் வாணிகன் மனைவி
யிட்ட சாபங் கட்டிய தாகலின்
வாரொலி கூந்தனின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
யீனோர் வடிவிற் காண்ட லில்லெனக்
கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென
வரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி கார மென்னும் பெயரா
னாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென
முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரிய
தடிக ணீரே யருளுகென் றாற்கவர்.

புறநானூறு

இது சங்கச் சான்றோர்கள் அருளிய எட்டுத்தொகையுள் ஒன்று. நானூறு என்னும் தொகைகொண்ட கவிகளினால் முடிந்தமையினால் அளவையாற் பெயர்பெற்றது. முரிஞ்சியூர் முடிநாகராயர் முதலாம் கவிகள் பலரையும் ஆசிரியர்களாகக் கொண்டுள்ளது. ஆசிரியப்பாவினழகு சிறந்து விளங்குவது. இந்நூலை அச்சேற்றியவர் டக்ரர் உ வே. சுவாமிநாத ஐயரவர்கள்.

135 ம் பாட்டு. திணை — பாடாண்டிணை

துறை—பரிசிற்றுறை

ஆயை உறையூர் ஏணிச்சேரி முடிமோசியார் பாடியது.

கொடுவரி வழங்குங் கோடுயர் நெடுவரை
யருவிடர்ச் சிறுநெறி யேறலின் வருந்தித்
தடவரல் கொண்ட தகைமெல் லொதுக்கின்
வளைக்கை விறலியென் பின்ன ளாகப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
வரிநவில் பனுவல் புலம்பெயர்ந் திசைப்பப்
படுமலை நின்ற பயங்கெழு சீறியா
ழொல்க லுள்ளமோ டொருபுடைத் தழீஇப்
புகழ்சால் சிறப்பினி னல்லிசை யுள்ளி
வந்தனெ னெந்தை யானே யென்று
மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையடி யானை யிரியல் போக்கு
மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே மாவு மன்றே
யொளிறுபடைப் புரவிய தேரு மன்றே
பாணர் பாடுநர் பரிசில ராங்கவர்
தமதெனத் தொடுக்குவ ராயி னெமதெனப்
பற்ற றெற்றாப் பயங்கெழு தாயமொ
டன்ன வாகநின் னூழி நின்னைக்
காண்டல் வேண்டிய வளவை வேண்டா
ருறுமுரண் கடந்த வாற்றற்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழ வோயே.

அறநெறிச்சாரம்

இது கதை தழுவாதனவும், துறை தழுவாதனவும் ஆகிப்பல அறநெறிகளை எடுத்து வரிசை படக்கூறும் ஒழுக்க நூலாகும். இதன் ஆசிரியா திருமுனைப்பாடி நாட்டில் உள்ள முனைப்பாடியார் என்று பெரியோர் கருதுகின்றனர். இவரது சமையம் சமணம். காலம் இற்றைக்கு 1000 ஆண்டுவரை என்பர்.

1. அறத்தினியல்பு

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மையொன் றின்மை துறவுடைமை—நன்மை
திறப்பா விரதந் தரித்தலோ டின்ன
அறம்பத்தும் ஆன்ற குணம்.

அறவுரையால் பயனெய்தாதவர்

2. கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றென்றும் அறனுணர்தல்—நல்லாய்!
நறுநெய் நிறைய முகப்பினும் மூழை
பெறுமோ சுவையுணரு மாறு.

3. மதுபானம்

ஒளியும், ஒளிசான்ற செய்கையும், சான்றோர்
தெளிவுடைய ரென்றுரைக்குந் தேசும்,—களியென்னும்
கட்டுரையாற் கோதப் படுமேல், இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து.

4. சூது

ஓதலும், ஓதியுணர்தலும், சான்றோரால்
மேதை யெனப்படு மேன்மையும்,—சூது
பொருமென்னுஞ் சொல்லினாற் புல்லப்படுமேல்,
இருளாம் ஒருங்கே யிவை.

5. நட்பு

இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலால்.—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே,
நட்டா ரெனப்படு வார்.

6. புலான்மறுத்தல் (1)

கொன்றா னுகருங் கொடுமையை யுண்ணினைந்
தன்றே ஒழிய விடுவானேல் - என்றும்
இடுக்க ணெனவுண்டோ? இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானுந் தன்னைத் தவம்.

7. புலான் மறுத்தல் (2)

தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதினபர்—அந்தோ
நடுநின் றுலக நயனிலா மாந்தர்
வடுவன்றோ செய்யும் வழக்கு.

8. நிலையாமை (1)

ஆசையும் பாசமும் அன்பும் அகத்தடக்கிப்
பூசிய பொதிந்த புலாலுடம்பு—ஊசல்
கயிறற்றாற் போலக் கிடக்குமே கூற்றத்
தெயிறுற் றிடைமுரிந்தக் கால்.

9. நிலையாமை (2)

மறந்தொருவன் வாழுமிம் மாயமா வாழ்க்கை
அறிந் தொருவன் வாழுமேல் இல்லை—செறிந்தொருவன்
ஊற்றம் இறந்துறுதி கொள்ளாக்கால் ஓ கொடிதே
கூற்றம் இடைக்கொடுத்த நாள்.

10 நிலையாமை (3)

பிறப்பிறப்பு மூப்புப் பிணியென்றிந் நான்கும்
மறப்பர் மதியிலா மாந்தர்—குறைக்கூடாச்
செல்வங் கிளைபொருள் காமமென் றிந்நான்கும்
பொல்லாப் பொறியறுக்கப் பட்டு.

11. ஊழ் (1)

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி.

12. ஊழ் (2)

இறந்த பிறப்பிற்றாஞ் செய்த வினையைப்
பிறந்த பிறப்பாலறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக, இனிப்பிறந்
தெய்தும் வினையின் பயன்.

13. ஊழ் (3)

தாய் தந்தை மக்கள் உடன்பிறந்தார் சுற்றத்தா
ராய்வந்து தோன்றி அருவினையால்—மாய்வதன்கண்
மேலைப் பிறப்பும் இதுவானால் மற்றென்னை?
கூலிக் கழுத குறை.

இராச சூயயாகம்.

இராச சூயயாகமென்பது அரசர்கள் முதன்மையாகச் செய்யும் வேள்வி யென்னும் பொருளையுணர்த்தும். இது மகாபாரதம் சபாபருவத்தில் வரும் முதலாவது கதையாகும்.

பாண்டு மக்கள் தருமன் முதல் ஐவருங் கிருஷ்ணரின் உதவியுடனிருந்து வாழும் நாளில், ஐம்புலன்களும் மனமும் போன்று ஒருவரோடொருவராய் இந்திரப் பிரத்தம் என்னும் நகரியைத் தமக்கு உறைவிடமாகக் கொண்டனர். தேவத் தச்சனாகிய மயனென்பவன் தோற்றி, வந்தனை வழிபாடாற்றிக் கீழ்படிதலோடு நின்று பின்வருமாறு கூறுகின்றான். பெரியோர்களே, நீங்கள் உற்றவிடத்துதவிய பேருதவியினாலடியேன் உயிர் பிழைத்தேன்.

"செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும்
வானமு மாற்றலரிது"

என்ற முதுமொழிபோல அடியேன் உங்களுதவிக்குப் பிரதியுபகாரஞ் செய்யுந்தன்மையுமுளதோ? எனினும், நீங்கள் பிறந்த குருகுலத்தார்களைப் போலவே மற்றைய யாவரு மின்பமார்ந்திருப்ப, உறுதுணை புரிந்து மேன்மையெய்துவீர்களாக. இன்னும் அடியேன் சொல்லத் தக்கது ஒன்றுளது. அது, தருமமே வடிவமாகவந்துதித்த தருமராசனானவர், தம்பிமார்களும், பாஞ்சாலியும், பரிசனங்களும் புடைசூழச் சிற்றரசர்களும், அறுவகைச்சுற்றத்தோர்களும், ஏவல்கேட்ப, அரசிருக்கை யெய்தி மனமகிழ்ந்திருத்தற்குரிய வோரழகிய கொலு மண்டபத்தைச் சிற்பநூலுணர்ந்தோர்களும், நாணும்படி யமைத்துத் தருகின்றேன். அம்மண்டபம் அமைக்கப்படும் முறையோவெனில், பண்டைக்காலத்தேயுள்ள விராடபருவனென்னும் வேந்தனானவன் வேற்றரசர்களிடனிருந்து பல இரத்தினவகைகளைத் திறைப்பொருளாகப் பெற்றனன். அவ்விரத்தினங்கள் இப்பொழுது விந்து நதியிலிடப்பட்டிருக்கின்றன. அவைகளை யுங்கள் சபாமண்டபத்திற்கு இன்றியமையாத வணிகளாகுமென்றான். இதனைக் கேட்டதருமரும் விடைகொடுத்தனர். கம்மியனானவன் கொலு மண்டபங் கட்டுவதற்குரிய தளபாடங்களை விரைவிற்கொண்டு வந்து சேர்ப்பித்தான். இந்திரப்பிரத்த நகரிலுள்ள வைந்துறுப்பமைந்த வறிஞர்கள் மூலம் நிலவணி கோலுவித்தான். பசும்

பொன்னழுத்தி நவமணிகுயிற்றிய சுவர்களை யமைத்தான். மரகத இரத்தினத்தால் தூண்களுமமைத்தான். பவளத்தினால் விட்டங்களுமமைத்தான். கண்டோரியாவருமிது இறைவனுக்குரியவிடமென்று பெருமிதக்கொண்டனர். மனவலியும் மயநூல்வலியும் புயவலியுமொருங்கமைந்த அவ்வசுரத்தச்சன் பலகோடிக்கணக்கான திரவியங்களைச் செலவிட்டான். பதினான்கு மாதகாலத்தில் அம்மண்டப மினிது நிறைவெய்தியது. அதனோடு வீமராசனுக்கு ஓர் தண்டும், அருச்சுனனுக்குத் தேவதத்தம் என்னுஞ் சங்குங்கொடுத்தான். அத்தருணம் தருமவேந்தர் பரிசனங்கள் சூழச்சென்று இனிதிருந்தனர். கண்ணபிரானும் அருந்துணையாகக் கூடவிருக்குஞ் சமையத்தில் தேவவிருடியும் யாழ்வல்லவருமாகிய நாரதர் அங்குச் சென்றனர். பாண்டவர்களைவருமெழுந்து வணங்கினர். பணியாசனத் திருத்தினர். முன்னீர் வழங்கினர். உபசார மொழிகளும் பல தனித்தனி கூறினர். தேவரீரிவ்விடமெழுந்தருளுவதற்கடியேங்கள் செய்த தவம் மிகமேலானது என்றார்கள். அத்தருணம் நீலமேகவர்ணனாகிய கண்ணபிரானும் மனங்களிப்ப விழிகளிப்ப முனிவரைத் தாமுங் கண்டனர். முனிவர் பாண்டு மக்களை நோக்கிக் கூறுகின்றார். அரசர்களே! இம்மண்டபமானது குபேரனாலும் பெறமுடியாத பெருமையையுடையது. உங்கள் புண்ணியமும், உங்கள் தந்தையின் பெருமையும் நீங்கள் மணிமண்டபத்தை யெய்தி இனிது வாழ்வதற்கேதுவாக விருக்கின்றன. இது நிற்க, உங்கள் தந்தையானவர் வேறு உவமை சொல்லமுடியாத இவ்விசித்திர மண்டபத்தில் ஒரு இராசசூயயாகம் நடாத்துப்படியுங்களை வேண்டுகின்றனர். அதனால் யாமுமிவண் வந்தனம்; ஏற்பன செய்மின்களென்று எழுந்து சென்றனர்.

அரசர்களுமிது தக்கதென நிச்சயித்தனர். அத்தருணம் பக்கத்தேயிருந்த கிருஷ்ணரானவர் பாண்டவர்களை விளித்துக் கூறுகின்றார்; அரசர்களே, கொடுமையேயாபரணமாக வணிந்த சராசந்தனென்பவனெத்தனையோவரசர்களைச் சிறையிட்டுள்ளான். இந்திரனுக் கொழித்த மந்தர மலையானது சமுத்திரத்தினுட் புகுந்த தன்மைபோலப் போருக்கு ஆற்றாதவரசர்களும் சிறை செய்யப்பட்டனர். அந்த மூர்க்கனை வீமனொருவனேயன்றி வேறி யாவருங் கொல்லமுடியாத கருமமாகும் என்றனர். இதனைக் கேட்ட தருமரும் அதுவே தக்கதென்றனர். காலந்தாழ்க்காது மாலும், வீமனும், அருச்சுனனும் எழுந்து சென்றனர். இரண்டு நாட்களில் மகதநாட்டை யண்மினர். முனிவர்வடிவங் கொண்டு சராசந்தனின் சமுகத்திற் சென்றனர். அரசனும் வந்தனை வழிபாடாற்றினன். உயர்ந்த ஆசனங்களிலிருக்கச் செய்தான். முனி

வர்களைக் குறிப்பாகப் பார்த்து மனத்திலெழுந்த ஐயுறவினால் சில சந்தேக மொழிகள் கூறுகின்றான். முற்றத்துறந்த முனிபுங்கவர்களே! உங்கள் வடிவமோ துறவிகளுக்குரிய ஆடையாபரணங்களையணிந்திருப்பினும், போர்வீரர்களுக்குரிய அம்புவில்லழுந்தக் கன்றிய குறிகள் காணப்படுகின்றன. ஆதலால் நீங்களியார்? உள்ளதைக் கூறுங்களென்றான். இதனைக் கேட்ட கிருஷ்ணர் பின்வருமாறு சொல்வாராயினர்.

விறல் மிகுந்த வேந்தே! யானே யாதவகுலத்திற் பிறந்த கிருஷ்ணன். இவ்விளவலோ பாண்டவர்களுள் தருமருக்கிளைய வீமன், மற்றவனோ பொன்னுலக வேந்தன் புதல்வன். உமது பட்டினத்திலுள்ள பெருமைகளைக் கண்டு களிப்படைய வந்தேம். மற்றையவரசர்களுக்குப் பயந்து முனிவர் வடிவங் கொண்டனம் என்று உண்மையைக் கூறினர். இதனைக்கேட்ட சராசந்தன் தினவுமிக்க தோள்வலியுடைமையினால் மற்போர்புரியவும் வல்லீர்களோவென்றான். பின்னரும் கிருஷ்ணரை நோக்கிக் கூறுகின்றான். கோபால! நீயோ! என் வலிமைக்குப் பயந்து வடமதுரையை விட்டோடித் துவாரகை புகுந்தனை! அருச்சுனனோ! அசுரர்களுக்குப் பயந்து சோலையிலொழித்த இந்திரன் மகன். வாயுமைந்தனாகிய வீமனே என்னோடு மற்போர்புரிதற்கு ஏற்றவலியுடையானென்று விழிசிவக்கக் கோபித்துக் கூறினன். தனது அரசிளங் குமரனுக்குப் பட்டமுங் கட்டினான். வீமனுமெழுந்து குவவுத்தோள் கொட்டி யார்த்தான்.

கண்டோரியாவரும், மந்தரம் விந்தமாகிய மலைகளேயென மதித்தனர். இரு பெரும் வீரர்களும் மற்போர் முறைப்படி பொருதனர். அன்று பகலும் நடுஇரவுஞ் சமர்த்தொழில் நடந்தது. போரினதிர்ச்சியினால் பூமியுந் நெளிந்தது. மலைகளுங் குலுங்கியன. மல்யுத்தம் பார்த்துக்கொண்டு நின்ற மனிதர்களினுடம்பும் நடுங்கியது. ஆபத்து வந்தகாலமும் இருதிறத்து வீரர்களுந் தனித்தனி சோர்வுற்றனரேயன்றி ஆவி நீங்கிலர். ஒருவர் மற்றவரைக் கொல்லக்கருதினும், ஒத்தவுடல்வலியால் அக்கருத்து முற்றுப்பெற்றிலது. இச்சமயத்தைக் காலெனும் மொய்ம்பனுங் கண்ணாரக்கண்டனன். தன்மதலையாகிய வீமன் களைதெளியும்படி யிளந்தென்றலாக வீசினான். வீமனுங் களைதெளிந்தான். பொருதலினாற்றாமையினால் விழுந்து கிடந்த சராசந்தனை வீமன் இரு கால்களினும் பிடித்துக் கிழித்தான். சந்தோஷமுங் கொண்டாடினான். வீமன் கைகளினாற் கிழியுண்ட இரு கீலங்களும் பழமைபோலப் பொருந்தியன. சராசந்தனெழுந்தான். மதயானைபோற் பிளிறினான். பின்னரும் போர்க்கறை கூவினான். வீமனோ! சிங்கம்போன்ற வலிமையுடையவனாதலினால், முன்போலக் குவ

வுத்தோள் கொட்டி யார்த் தெதிர்த்தனன். தன்றாளினாலுதைத்தான். பகைவனுடலம் இருபிளவாயது. இதனைக்கண்ட மாயவனானவர் சராசந்தனினிருகீலங்களையும் முன்போல முறையாகவையாது மாறிவைத்தலே நலமென்பதைக் குறிப்பாலுணர்த்தி, ஒருதுரும்பைக் கிழித்து மாறிவைத்துக்காட்டினர். அதனையறிந்த வீமன் உடற்கூறுகளிரண்டனையும் அடிதலைமாறி வைத்தான். அவைகள் பண்டுபோலப் பொருந்தாவாயின. வீமனின் வலியன்றோவலி. சராசந்தனாகிய வீரனுமிறந்தான். "சந்தச்சிகரச்சந்தணியுந் தடந்தோளாண்மைச் சராசந்தன்" என நூலாசிரியராற் புகழப்பட்ட பெருமையையும் நுண்மாண் நுழைபுலம்மிக்க புலவர்கள் நைந்து நைந்து உருகாநிற்பர்.

செயற்கரிய வீரச் செய்கையைச் செய்த வீமனானவன் கேசவன் முகத்தை நோக்கினன். சுவாமீ! இஃது என்னவதிசயம். இயற்கைக்கு மாறாக விருக்கின்றதே. இவ்விருத்தாந்தத்தை யடியேனறியக் கூறுதிரென்று பணிவுடன் கேட்டான். அச்சமயம் குன்றால் மழைதடுத்துக் குன்றாப்புகழ் படைத்த கொற்றவனார் கூறுகின்றார். அரசனே இவ்வீரனே அரசகுலத்தில் "பிருகத்ரதன்" என்னு மசுரனுக்கு மகனாக வுதித்தவன். மற்றையவரசர்களெல்லோரையும் போரில்வென்ற அழியாப்புகழும்படைத்தவன். ஒருகாலத்தில் எண்ணூறு முடிமன்னர்களை யாகப்பசுக்களாக்கி பூவுலகம் முழுவதையும் ஓமகுண்டமாக்கி வீரயாகஞ் செய்தவனென்று சொல்லும்படி சிறையிலிட்டான். தேவர்களும் இவன் பெயரைக் கேட்டபின் அஞ்சுவர். இவன்றந்தை மக்கட் பேறின்மை காரணமாக மனம் வருந்தினான். "சண்ட கௌசிகன்" என்னும் முனிவரை வேண்டித் தவஞ்செய்தான். அரசனின் தவத்தை மெச்சிய முனிவர் ஓர் மாங்கனி யுதவினர். அந்தக் கனியைத் தன்னிரு மனைவியரும் உண்ணக் கொடுத்தான். அவர்கள் அதனை இருபிளவாக்கி யுண்டனர். அதன் பயனாக இருவர் வயிற்றிலும் ஓர் ஆண் மகவின் இரு பிளவுகளும் ஒன்று படக்கூடிய தன்மையாக வுதித்தன. அக்குழந்தையின் இருபிளவையுங் கண்ட வேந்தன் துன்பமெய்தினான். அக்கீலங்களை நகர்ப்புறத்தி லெறிவித்தான். "சரை" என்னும் பெயரையுடைய ஓரரக்கியானவள் பிணந்தின்னுந் தொழிலையுடையாளாதலின், இவ்விருகூறுகளையுங் கையிலெடுத்து அதிசயமுற்றாள். சேரப் பொருத்தினள். அச்சமயம் அக்கூறிரண்டும் ஒன்றுபட்டு ஓர் ஆண்குழந்தையாயது. இவ்வதிசயத்தைக் கண்ட அரக்கியானவள் அக்குழந்தையை யரசன் கையிலொப்புவித்து, வேந்த, இம்மகவை யான் பொருத்தியகாரணத்தால் என்பெயரை முதலில்நாட்டி "சராசந்தன்" என்று

எக்காலமும் வழங்கும்படி வேண்டுகின்றேன் என்று கூறி மறைந்து சென்றாள். அக்காரணத்தினாலேயே இவ்வீரனுக்கு மேற்குறித்த பெயருண்டாயது என்றார். இதனைக்கேட்ட வீரர்களாகும் வீமனும் அருச்சுனனும் மகிழ்ச்சி யெய்தினர். சராசந்தன் மகனாகிய சகதேவனுக்குப் பட்டாபிடேகஞ் செய்தனர். அம்மன்னனால் சிறைசெய்யப்பெற்ற முடிமன்னர்களனைவரையுஞ் சிறைநீக்கி, சகதேவனாற் கொடுக்கப்பெற்ற தேரிலேறி மூவருமிந்திரப் பிரத்த மெய்தினர். அவர்களின் நல்வரவைக் கண்ட தருமராசன் மகிழ்ச்சி யெய்தினன். சராசந்தனின் திரவியங்களனைத்தையும் தருமரும் வியாசரும் மற்றைய முனிவர்களுங் கண்ணாரக்கண்டு, அதனை மீட்டுக்கொண்டுவந்த வீரர்களின் திறத்தைப் பலமுறை புகழ்ந்து பேசினர். அத்தருணம் வில் விசயனாகிய வருச்சுனன் திக்கு விசயஞ் செய்தலின் மகத்துவத்தைப் பல்லோர் குழுமிய அப்பேரவையிலெடுத்துக் காட்டி வழிவகைகளுங் கூறுகின்றான். தமையனாராகிய வீமன் கீழ்த்திசை செல்லல் தகுப். யான் வடதிசை செல்கின்றேன். நகுலன் மேற்றிசைக்கும், சகாதேவன் தென் திசைக்கும் போதல் தக்கது என்றான். உடனே வீரர்களெழுந்து சென்றார்கள். வீரர்களுக்குரிய பராக்கிரம மொழிகளைக்கூறி ஆசீர்வதித்து அனுப்பியபின் மீன், ஆமை, வராகம், நரசிங்கம், கற்கி, மனிதன், ஆகிய அவதாரங்களையும் பரிபூரணானந்தத்தையுமுடைய கிருஷ்ணர் துவாரகையை யடைந்தார். கீழ்த்திசையின்கட் சென்ற வீமனானவன் தேவராசனும் மகிழும் வண்ணம், வங்கம், கலிங்கம், குலிங்கம் ஆகிய மூன்று தேசத்து மன்னர்களையுமெதிர்த்துப் பொருதனன். அவர்களின் நால்வகைப் படைகளையும் மாயச்செய்தான். பின் அவ்விடத்தினின்றுந் திரும்பித் தன்னையெதிர்த்த முடிமன்னரனைவரையும் படைகளுடன் சாய்த்தான். போரிலெதிர்ப்பட்டோர்கள் அடைக்கலம் புகுந்து பலதிறப்பண்டங்களைக் கொடுத்தனர். வீமனுமவைகளை வீரத்துடனேற்று "இறையெனத் தந்ததந்த விததந்திமீது கொடுதங்கண் மாநரி சார"ச் சென்றனன். வில்லாண்மைமிக்குடைய வருச்சுனன் வடதிசையிலமைந்த குபேரபட்டினத்தை யடைந்தான். தன்னையெதிர்த்த வீரர்களை யடக்கினான். பாரத வருடம் நிலைபெற்று வழங்கும் நிலத்திலுள்ள வரசர்களை யெல்லாம் எதிர்த்து வெற்றி பெற்றான். சிவபெருமானெழுந்தருளி யிருக்கும் கைலையின் கீழுள்ள இமயம்வரை சென்று பொருது ஆங்குள்ள அரசர்களிடம் திறைபெற்று, வடக்குத்திசையிலமைந்த உத்தர குருக்களின் மேன்மையுமடக்கி, ஆங்குச்சமர விசயதம்பமும் நிறுத்தினன். பல்லாயிரக்கணக்காகிய யானை, குதிரை, தேர், காலாள்,

ஆகிய படைகளை வாரிக்கொண்டு தங்கள் பட்டினத்தை வந்து சேர்ந்தான்.

மேற்குத்திசையை நண்ணிய நகுலன் கண்டோர் நடுங்கும் வண்ணம் நின்று சரண்புகுந்தோர்களைக் காத்தும், எதிர்த்தோர்களை யழித்தும் போர் செய்தான். இதனைக்கண்ட மற்றைய வேந்தர்கள் ஈயாதான் தேட்டம் அழிவது போலத் தங்கள் திரவியங்களைக் கொள்ளை கொள்ளைகளாக அள்ளி அள்ளிக்கொடுத்தனர். மாளவம், கற்படம், திரிகர்த்தம், ஆகிய நகரங்களிலுள்ள வரசர்கள் எதிர்த்துப் புறங் கொடுத்தனர். நகுலனானவன் அந்தத் திசைக்கு அதிபனாகிய குபேரனும் நடுங்கும் வண்ணம் போரிற் புறங்கொடுத்த வரசர்கள் தருந்திறைப் பொருள்களை வாங்கிக்கொண்டு துளபமலர் மாலையையணிந்த கிருஷ்ணரிருக்குந் துவாரகையை யடைந்தான். அப்பட்டினத்தி லெழுந்தருளியிருக்கும் கிருஷ்ணரை வணங்கி ஆசீர்வாதம் பெற்று, பற்பல விங்கித மொழிகளையும் பேசி அன்னவரின் அனுமதியுடன் இந்திரப் பிரத்த நகரை யெய்தினன். சகாதேவனானவன் தென்திசையின்கட் சென்று தன்னை யெதிர்த்த பட்டவர்த்தனர், மகுடவர்த்தனரை வென்று திறைப் பொருள்கள் பல பெற்றான். மாகிஷ்மதியென்னும் பட்டினத்தை யடைந்தான். அச்சமயம் அப்பட்டினத்துக்குப் பாதுகாப்பாக விருந்த அனலானது எழுந்து சேனைகள் மயங்கும்படி புகையெழச் சுவாலித்தது. அதனைக் கண்ட சகாதேவன் அந்த அனலைத் தணிக்கத்தக்க பிறைமுகக் கணைகளைச் செலுத்தினான். ஆற்றுமைமிக்க வனலும் ஓர் பிராமண வடிவங்கொண்டு அரசன் முன்னிலையில் வந்து நின்றது. அரசனும் நீ சுடுகின்ற காரணமியாதென்றான். அக்கினியும் தன் விருத்தாந்தங்களைக் கூறியது. பின் நீலனென்னு மரசனிடமிருந்து யாகத்திற்குரிய பல பண்டங்களைத் திறையாக வாங்கினன். நீலன் கொடுத்த இந்திரநீலம் முதலிய இரத்தினங்களையும் பொற்குவியல்களையும் வாரிக்கொண்டு கலிங்கதேசத்திற் புகுந்து வெற்றித்துவசம் நாட்டினான். சேரசோழ நாடுகளிலுஞ் சென்று திறைபெற்றான். செந்தமிழ் வழங்கும் பாண்டி நாட்டிற் சென்று முத்துக்களைப் பெற்றுக்கொண்டு பொதிய மலையை யடைந்தான். இவ்வதிர்ச்சியினால் தென்திசையுமசைந்தது. அங்குள்ள தேவர்களஞ்சி அகத்திய முனிவரிடம் அடைக்கலம் புக்கனர். சகாதேவனோ! தன் தமையன் மகனாகிய கடோற்கசனை யழைத்தான். தென்னிலங்காபுரியிற் சென்று திறை பெற்று வரும்படி கட்டளையிட்டான். கடோற்கசனும் இலங்காபுரியிலுள்ள விபீஷணனை யெதிர்த்தும் போர்க்கறை கூவினான். அதனைக்கண்ட விபீஷணன் நீயாரென்று கேட்டான். கடோற்கசன் ஆண்மையும் அழகும் பொருந்த நின்று அரசனே! பாண்டுவின் இளையமகனாகிய வீமனுக்குப் புதல்வனும் இடும்பனுக்கு மருகனுமாகிய கடோற்கசன் நானே யென்றான். விபீஷணன் பலவுபசார மொழிகளைப்பேசி, வந்தகாரண மென்னை யென்றான். வீரனும் என்பெரிய தந்தையானவர் ஓர் இராச சூயயாகஞ் செய்வதற்கு உத்தேசித்து தம்பியர்கள் நால்வரையும் நாற்புறமும் திக்கு விசயங்கூறி யனுப்பினர். யானு முமது பட்டினத்துக்கு வந்தேனென்றான். விபீஷணன் மனமகிழ்ச்சி கொண்டான். பதினான்கு பொற்பனைகளை உபசாரமாகக் கொடுத்தான். கடோற்கசனாகிய வீரன் வந்தனத்துடன் பெற்றுக்கொண்டு சிறியதந்தையை யணுகி பொற்பனைகளுடன் மணிகளையுங் கொடுத்துக் கும்பிட்டான். சகாதேவனிவைகளைப் பெற்றுக்கொண்டு இரண்டுநாளில் இந்திரப் பிரத்த நகரை யடைந்தான். தருமராசனானவர், தம்பிமார்கள் கொண்டுவந்த திறைப் பொருள்களை மனமகிழ்ந்து ஏற்றபின் யாகத்திற்கு வேண்டிய அணிகள் பலவற்றைச் செய்வித்தார். கண்ணபிரானும் தமது யாகத்திற்கு இன்றியமையாதவரென்று கருதினார். தம்பக்கலிலிருந்த நாரத முனிவரை நோக்கி நீலமேனியனாகிய கண்ணபிரானை யழைத்து வரும்படி பணிவுடன் வேண்டினர். தருமரின் கட்டளைப்படியே மற்றைய வரசர்களுக்கும் தனித்தனி திருமுகம் அனுப்பப்பட்டது. நாரதமுனிவரானவர் மிக விரைந்து சென்று துவாரகாபுரியை யடைந்தார். அச்சமயமோ சிசுபாலனின் கொடுமைகளைக்கேட்ட கண்ணபிரான் மனஞ் சகிக்க முடியாமல் மூத்தோர்களாகிய உத்தவர் பலராமரென்னும் இரு முதியோர்களுடனும் ஆழ்ந்து ஆலோசிக்கும் நேரமாகவிருந்தது. நாரதரும் மெல்லச் சென்றனர். மூவருமிருக்கைவிட்டெழுந்தார்கள். வந்தனை வழிபாடுகள் ஆற்றினர். தோத்திரம் புரிந்தனர். பின்பு, அடிகளிவ்விடம் எழுந்தருளிய காரணமென்னை யென்று பணிவுடன் கேட்டனர். நாரதரும் யாகத்தின் வரலாற்றைக் கூறினர். முதியோர் மூவரும் தம் மனக்கருத்து இனிது முற்றியதென மகிழ்ந்தனர். உத்தவர் பலராமர் ஆகிய இருவரும் கண்ண பிரானைத் தேற்றிச் சென்றனர். கண்ண பிரானுமெழுந்து மணிமுடி, குண்டலம், வாகுவலயம் ஆகிய அணிகளை அணிந்தார். பொன்னழுத்திச் செய்த பீதாம்பரத்தை யுடுத்தார். சக்கரம், தண்டு, வில் முதலாம் படைகளையும் எடுத்தனர். குடைகள் எழுந்தன. கொடிகளு மெழுந்தன. சாமரைகள் அசைந்தன. சங்கந் தொனித்தது. முழவு அதிர்ந்தது. முரசு இயம்பின. மெய்காப்பாளரும் எழுந்தனர். சேனைத் தலைவர்களுடன் மந்திரிச் சுற்றத்தோரும் எழுந்தனர். யானை முதலாம் படைகளும் எழுந்தன. கண்ணபிரானோ! சித்திரவனப்புக்களமைந்த "சிப்பிரம்" என்னுந் தேரில் ஏறினர். தெருவீதி

போந்தனர். அத்திருவோலக்கத்தை செல்வ மகளிர்கள் மேல்
மாடங்களிலிருந்து பல கணிவாய்தல்கள் வழியாகக் கண்டனர்.
சனங்களின் நெருக்கமோ,

"தோளொடு தோண்முட்டத் தொடையொடு தொடைமுட்டத்
தாளொடு தாண்முட்டத் தலையொடு தலைமுட்ட
ஆளொடு மாண்முட்ட வாணும் பெண் ணொடுமுட்ட
நீளொளி மணிவீதி நிரந்தரித் தனசனமே"

என்று சொல்லும்படி சற்றேனும் வெளிடையின்றிச் சனங்கள்
நிறைந்து சென்றனர். சனநெருக்கத்தினுற் றேரும் மெல்ல மெல்
லச் சென்றது. பலவளங்களும் மிகுந்து விளங்கும் இரைவத
மலையையுந் தாண்டினர். புதிதாக அமைந்த பல அழகுகளையும்
கண்டனர். கார்முதலாக அறுவகைப் பருவங்களையும் அந்தந்
தப் பருவத்திற்கு ஏற்ற மரங்கள் செடிகள் கொடிகள் தளிர்த்
தும் பூத்தும் காய்த்தும் கனிந்தும் கரிந்தும் வாடியும் எரிந்தும்
கிடப்பனவற்றுல் இனிது கண்டனர். ஐவகை நிலங்களுள்ளும்
நடுநின்ற பாலை நிலமானது தனக்கெனவோர் இடமின்மையால்
மற்றைய நால்வகை நிலங்களையும் காலம்பார்த்திருந்து தன்
வசப்படுத்தும் தன்மையையுங் கண்டனர். மெல்ல மெல்லச்
சென்ற தேரினது வேகத்தை ஒரு மணித்தியாலத்திற்கு அல்
லது ஒரு நாளிகைக்கு எத்தனை கட்டைதூரம் போகவேண்டும்
என்னும் நியதியையும் மறந்தனர். எதிரேவந்த யமுனையென்னும்
நதியைக் கண்டனர். சேனைகள் கால்கள் வழியாகக் கடந்தன.
கண்ணபிரானும் யமுனுநதியைக் கடந்த சங்கதியை தருமரும்
தம்பிமாரும் அறிந்தனர். ஐவருங் கூடித்தேரிலேறிச் சென்று
எதிர் கொண்டனர். இருபக்கத்துச் சேனைகளும் கங்காநதியுடன்
யமுனுநதி கலந்ததுபோல நட்புக்கொண்டனர். கண்ண பிரானும்
தரும புத்திரரும் ஒருவரை யொருவர் எதிரே கண்டனர். தேர்
களில் நின்றும் இறங்கினர். இருவரும் அணுக்கர் களாயினர்.
சேனுசைனியங்கள் புடைசூழக் கண்ண பிரான் யானையின்மீதும்
தருமர் தேரின்மீதும் தம்பியர் நாற்புறமுஞ் சூழ்ந்து செல்ல
பழமை வாய்ந்த இந்திரப் பிரத்தமென்னும் நகரை யெய்தினர்.
அந்த நகரமோ பொன்னுலக மென்னும்படி மிளிர்ந்து கண்க
வர்வனப்பு மிகுந்து விளங்கியது. அந்நகரமாந்தரனைவரும் கண்ண
பிரான் இந்திரப் பிரத்த மெய்திய சங்கதி எட்டியவுடன் ஆர்
வம் மிகுதியினுல் விரைந்து சென்று வணங்கினர். அவசரமிகுதி
யினுல் அணிகளின்றியுஞ் சென்றனர் சிலர். துகில்களை மாற்
றிக்கட்டவும் நேரமில்லாது சிலர் சென்றனர். கண்குளிரக் கண்
டனர். தெருவீதிகடோறும் பூதுளிகளெழாவண்ணம் பன்னீரி
ணுற் றெளித்தனர். பூரண கும்பங்களை நிறுத்தினர். பொற்ப

லிகைகளும், மகர தோரணங்களும், பூமாலைகளும், வாழை, கமுகு
ஆதியனவற்றை வேண்டுமிடங்களில் அணிபெறச் செய்தனர்.
துந்துபி முதலிய வாத்தியங்களும் ஒலித்தன. கண்ணபிரான்
மயனென்பவனுல் அமைக்கப்பட்ட அரசிருக்கை மண்டபத்தை
யெய்தி இனிதிருந்தார். அச்சமயம், தருமவேந்தரானவர் கண்
ண பிரானை நோக்கி பின் வருமாறு சில உபசார மொழிகளைக்
கூறுகின்றுர். யாதவகுலப் பிரபுவே! இவ்வகன்று விரிந்த பூவுல
கின்கண்ணுள்ளார் சிலர் வெறும்புகழையே மெய்யென்று கரு
துவர்; தம்மையடுத்த ஏழைகள், வறியோர் பாவலர், பணப்பித்
துடையோர், ஆகிய இவர்களைக் கொண்டு பற்பல முகமன்
வார்த்தைகளைக் கூறுவித்துத் தாமுமின்ப மெய்துவர். இவர்களே
மூடராவார். தேவரீரோ அவர்களைப்போன்ற ஒருவரன்று;
பெருங்கருணைத் தடங்கடலாய் விளங்குகின்றீர். உம்மைப்புகழ்
வோர்களோ சிறு பொழுதேனும் பொய்யுரைகூறுத மெய்மை
யாளர்களேயாவர். பொய்வள்ளல்களாயுள்ளோர் சிலர் தம்மைப்
புகழ்ந்து கவிபாடும் போலிப்புலவர்கள் வந்து, பாரியே கன்ன
னே! யென்று கூறினும், இறுதியில் வெட்கத்துடன் திரும்பி
ஓட்டெடுக்கச் செய்வார்கள். தேவரீரைப் புகழ்ந்து பாடுபவர்
களோ வேண்டிய வேண்டிய இகபரபோகங்களை ஆரத்துய்ப்பர்.
மெய்யுணர்ச்சி யுடையோர்களது முன்னிலையில் அவர்கள் புகழை
யெடுத்துக் கூறுவதினுல் முகங் கோணல் மரபு. அடியேன்கூறு
வன முழுமையும் மெய்மை யமைந்திருத்தல் பற்றி இச்சிற்று
ரையுங் கொள்ளற் பாலனவேயாம்; என்று பற்பல விற்பன்ன
மொழிகளைக் கூறினர். கண்ணபிரான் அவற்றை யெல்லாங் கேட்
டுப் பின்வருமாறு சொல்லுகின்றுர். அறமுதல்வ! உமது சம்மதப்
படியே வீமன் முதலாம் வீரர்கள் நால்வரும் திக்கு விசயம்
செய்து உயர்ந்த திரவியங்களைத் தேடியது. உம்மிடத்து இயற்
கையாக அமைந்துள்ள நீதியின் பெருமையினுலேயாகும். இராச
சூயயாகம் செய்வதற்கு முன்நரமேத யாகஞ் செய்யும்படி வீம
னை ஏவியதும், அதுவேயாகும். வீமசேனனுவன், மல்லமரில்
சராசந்தனைக் கொன்றதும், வேற்றுப்புலத் தரசர்களைச் சிறை
மீட்டதும் அதுவேயாகும். இன்னும் மிக அருமையாகிய கருமங்
களை யெல்லாம் இயற்றினும். உமது அறத்தின் வலிமையே முன்
நின்று காப்பதன்றி எம்மால் ஒன்றும் முடியாது. "முறை
செய்து காப்பாற்று மன்னன் மக்கட்கிறை யென்று வைக்கப்ப
டும்" என்பதன்றோ முது மொழி. உணவுகளை நெறிதவறுது
உண்ணும் மகனொருவன் உடல் வலிமை பெறுகை திண்ணம்.
அவ்வலிமையானது மருத்துவனுல் வந்து கூடியது என்னில்
ஏற்காதே! இக்கருத்தமையத்தானே "மருந்தென வொன்று

வேண்டா" என்று உத்தரவேத முடையார் நுனித்துக் கூறினர். வேந்தே! இனிமேல் யாகத்துக்கு ஆகவேண்டியனவற்றைச் செய்தலே தகுதி. யான் உமது யாகத்துக்கு யாதோர் இடையூறும் வாராமற் காப்பன். இப்பூவுலகம் முழுதும் புகழ்மாலை சூட்டும் நீரே யாகத்தலைவராக விருத்தல் நலமாகும். உமது ஆணையை மறுத்து மாறாகிய கருமங்களைச் செய்யும் எவர்களையும், என் கையிலிருக்கும் இச்சக்கரமானது நிச்சயமாகக் கொல்லும் என்றனர். தருமர் மனமகிழ்ச்சியுடன் கூறுகின்றார். பெரியோய்! தேவரீர் காவலாக இருப்பது புதுமையன்று. எற்புடைத்தொழிலும் அதுவே யாகும். அங்ஙனமெனில், அடியேனது யாகத்துக்கு ஏதாவது இடையூறும் உண்டோவென்று கூறி யாகாதிகாரியாயினர்.

பலவகை அலங்காரங்களும் மிகுந்து விளங்கும் யாகசாலையின் நடுவில் அந்தணர்களும், முனிவர்களும் விதிப்படி அமைத்த வேதிகையானது தேவர்கள் அனலின்மூலமாக அவியுண்பதற்கு ஏற்ற இடமாகியிருந்தது. அவ்வேதிகைக்கு அயலில் பருந்தின் வடிவமாக ஓமகுண்டம் அமைக்கப்பட்டது. அக்குண்டத்தின் நான்கு திசைகளிலும் நான்கு இடபங்கள் அமைந்துள்ளன. யாகாதிபதியாகிய தருமவேந்தர் அக்குண்டத்திற்கணித்தாயிருந்தனர். அத்தருணம் வியாசமுனிவரானவர் யாகந் தொடங்குமுன் ஐவரையும் அழைத்து ஒரு மறைவிடத்திற் சேர்ந்து பின் வருவனவற்றைக் கூறுவார். அரசர்களே! இந்திரபாக்கியத்தைப் பெற்று மகிழ்வுடன் வாழும் உங்கள் வாழ்க்கை இன்பத்திற்கு அளவில்லை. அதுமட்டோ? அனலிற் பிறந்த மின்னற்கொடிபோன்ற திரௌபதியையும் பூவுலகம் மெச்சும்படி மணம்புரிந்தீர்கள். தவக்கொழுந்தாகிய பாஞ்சாலியானவள் உங்கள் ஐவர்க்கும் ஏற்ற வாழ்க்கைத்துணைவியாய் இருப்பினும், இச்சமயத்தில் நிகழப்போகின்ற இராசசூய யாகத்துக்குத் தலைவராகிய தருமபுத்திரருக்கே ஏற்ற பாரியும் ஆயினள். ஆதலால், நீங்கள் நால்வர்களும் தனையரும், தருமரும், திரௌபதியும், தந்தையும், தாயுமாகிய தன்மையையும் எய்தி இருக்கின்றீர்கள். அதுகாரணத்தால் தருமரைப் பாண்டுவேந்தனாகவும், திரௌபதியைக் குந்திதேவியாகவும் போற்றிப் புனைந்து கொள்ளலே அழகு. உலகியலை நன்றாக அறிந்த உங்கட்கு யான் அதிகஞ் சொல்லவேண்டியதில்லை. காலமும் யாகத்துக்கு ஏற்றனவாகும். வேண்டியன செய்தலே நன்று. என்றனர்.

முனிவரின் அமிழ்தனைய மொழிகளைக்கேட்டுப் பக்கத்தினின்ற கன்னியர்கள் விரைந்து சென்றனர். பகீரதிநதியின்

தீர்த்தத்தினால் எசமாட்டியை நன்னீர் ஆட்டினர். பூவும் சூட்டினர். நறுமணம் கமழும் கஸ்தூரி, புனுகு முதலாந் திரவியங்களைப் பூசுவித்தனர். யாக எசமானாகிய தருமரும் வேண்டுவன புனைந்தனர். தம்பாரியாருடன் சென்று கண்ணன், வீட்டுமன் முதலாம் பெரியோர்களை வணங்கி நன்மொழியும் பெற்றனர். யாகம் நடைபெறவேண்டிய நேரமும் ஆயிற்று. தமது இளவலாகிய வீமனை முன்னிலையாக்கி யாகத்துக்கு வருகின்றோர்கள் அருந்துவதற்குரிய உணவை அமிழ்தம் என மதிக்கும்படியாக அமைத்துக் கொடுக்குதி யென்றார். வில்லாண்மை மிக்க அருச்சுனனை முன்னிலைப்படுத்தி வேண்டுவோர்கட்கெல்லாம் நறுமணங் கமழுகின்ற புனுகு, சந்தனம், கஸ்தூரி, மலர்மாலை ஆதியனவற்றை வளங்குதி என்றார். சூரியன் புதல்வனாகிய கன்னனை விளித்து யாகத்துக்கு வரும் ஏழைகள் முதல் அரசர்கள் வரையும் உள்ள யாவர்க்கும் வேண்டும் பொருள்களை ஏற்ற ஏற்ற முறையாகக் கொடுக்கும்படியுங் கற்பித்தார். வணங்காமுடியோனாகிய துரியோதனனைக் கூவி அவனது நிலைமைக்கு ஏற்ற இராச்சியபரிபாலனத்தை முறையாகச் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

பெரியோர்களால் முறைதெரிந்து வகுத்துள்ள ஓமகுண்டத்திலுள்ள நெருப்பும் வலஞ்சுழித்தெரிந்தது. அக்குண்டத்தின் வலப்பக்கத்தில் திரௌபதியாகிய மின்னற்கொடி அமையத் தாமும் அழகுபொருந்த இருந்தனர். வேள்வி ஆசாரியன் கையில் அதற்குரிய பொறுப்புகள் முழுவதையும் சங்கற்பித்துக் கொடுத்தார். எனினும், அவ்வாசாரியன் செய்கைகள் எல்லாம் தருமவேந்தர் செய்கையாகவே நிகழ்ந்தன. வேள்வியில் அமைக்கவேண்டிய மூன்றுவகையாகிய (ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினியம்) என்னும் அனல்களின் தன்மையை நன்கு உணர்ந்தவர் ஆதலின், நாற்றிசையும் தருப்பைப் புல்லினால் காவல் செய்தனர். வேதமந்திரத்தை அபத்தம்பற்றாமல், உச்சமாகச் செபித்தனர். நெற்பொரி, தருப்பை, பூ வாதியனவற்றை ஆவுதிசெய்தனர். சுருக்கு, சுருவங்களினால் நெய்யை வாரி வாரித் தீயில் இறைத்தனர். இவ்வண்ணமாக ஏழு நாளாக அக்கினிகருமம் நிகழ்ந்தது.

பின்பு யாக முதல்வராகிய தருமரும், பட்டத்துத்தேவியாகிய பாஞ்சாலியும் எரியை முறையாக வலம்வந்து பூரணாகுதி பண்ணினர். இவ்வாறாகிய கிரியைகளுடன் யாகம் ஒருவாறு நிறைவுபெற்றது. சிற்றரசர்கள் கொண்டுவந்து கொடுத்த பண்டங்கள் பலவற்றையும், தானமாகவும், பிச்சையாகவும், அந்

தணர்க்கும், மற்றையோர்களுக்குங் கொடுத்தனர். தானங்களை ஏற்ற அந்தணர்களும் தம்பெயருக்கேற்பப் பரிசுத்தராயினர். இறைப் பொருள்களாக வந்தன சிலவற்றை, அந்தணர்க்கியும் அவாவினால் தாமும் அவா உடையவர்போன்று வாங்கியீந்தனர். குறுநிலமன்னர்களுக்கு வேண்டிய சகாயங்களை எல்லாம் தெளிந்து தெளிந்து ஆற்றினர். பெரியோர்களுக்குத் தானங் கொடுத்தலையே தலைமையாகக் கொள்ளினும், வறியோர்களின் முகத்தை அன்புடன் நோக்கினர். வறியோர்களும், யாகாதிபதியும், அன்னதாதாவும் ஆகிய தருமரின் முகத்தைத் தாமும் நோக்கினர். திரவியங்கள் பலவற்றை வாரிவாரிச் சொரிந்தனர். அந்தணர்களும், அன்பு, ஆசரவு, இன்சொல், இரக்கம், அகமலர்ச்சி, முகமலர்ச்சி, அவதானம் ஆகிய இவைகளினால் கண்டோர் மனதைக் களிப்புறச் செய்தனர்.

தானமும் ஒருவாறு நிறைவெய்தியது. தானத்தின் பின் நிகழவேண்டியது அக்கிரபூசையாகும். அது யாருக்குக் கொடுக்கவேண்டுமென்பதை நன்றாக உசாவிச் செய்வதே பெரியோர் நெறி. "குணநாடிக் குற்றமு நாடியவற்றுள் மிகைநாடி மிக்ககொளல்" என்பது தருமரின் மனப்பூர்வமாகிய கருத்தாகும். நன்றாக ஆராய்ந்த பெரியோருடன் ஆலோசித்தலே நலமாகும் என்று கண்டவர் ஆதலால், அங்குள்ளவர்களுள், வயசினாலும், அறிவினாலும் முதிர்ந்த, வீட்டுமரை வினவினர். தருமரின் மெய்மை வாய்ந்த கேள்விக்கு உடனே மறுமொழி கூறுவது இலகுவாகிய கருமம் ஆகாது; ஆதலால், தெளிந்த புத்தியையுடைய பெரியோர்களை முகம் நோக்கினர். அங்குள்ளோர்களுள் முதன்மை வாய்ந்த வியாசமுனிவர் தருமரை விளித்து, யாதவகுலத் தோன்றலாகிய கண்ணபிரானே அக்கிரபூசைக்கு அணி என்றனர். இதனைக் கேட்டுப் பக்கத்திலிருந்த பெரியோர் அனைவரும் ஆனந்தங் கொண்டனர். தருமர் இதுவே தக்கது என்று தலைசாய்த்தனர். வீட்டுமர் முதலாம் முனீந்திரர்கள் கண்ணனின் பத்து அவதாரத்தையும், வரம்பிலின்பம், முற்றறிவு முதலாம் பெருமைகளையும் ஒவ்வொன்றாகப் போற்றிப் பாராட்டினர்.

இச் சம்பவங்களையெல்லாம் சேதிநாட்டு அரசனாகிய சிசுபாலன் அறிந்தான். கோபம் ஆகிய கடலுள் அமிழ்ந்தினான். சினம் என்னும் குமிளியானது மேலும் மேலும் எழுந்தது. தன் அயலிலுள்ள அரசர்களை முகம்நோக்கினான். அரசர்களே! இப்பொழுது நிகழ்ந்த யாகத்தின் பெருமை அளப்பரியதாகும். ஆண்மையும், அன்பும், ஆள்வினையுடைமையும் உடைய அரசர்களே அன்றி வேறு யாவரும் மதிக்க முடியாதது.

அத்தகைப் பெருமை வாய்ந்த யாகத்தை நடாத்திய தலைவருமோ? தருமபுத்திரராகும். இதற்குச் சமுகங்கொடுத்தோர்கள் அரசகுமாரர்களும், அந்தணர்களும், முனிவர்களுமாகும். இத்தகைப் பெரியோர்கள் எல்லோருங் கூடியிருக்கும் நற்றருணத்தில், பூபாலர்களை எல்லாம் ஒதுக்கிக் கோபாலனுக்கு அக்கிரபூசை கொடுத்தல் அழகோ? என்றான். பின்னும் சினம் மிக்குக் கூறுகின்றான். சூரிய வம்மிசத்து அரசர்களும், சந்திர வம்மிசத்து அரசர்களும், அக்கினிகுலத்து அரசர்களும் ஒருங்கு திரண்டு இருப்ப, வீரம், புயவலிமை, செல்வம் இவைகள் இல்லாத ஒரு ஏழை மனிதனை, வீரமும், புயவலியும், செல்வமும் நிறைந்த ஒரு பராக்கிரமசாலி என மதிப்பது மாண்போ? இப்பூவுலகத்துள்ள அரசர்களுக்கு எல்லாம் முதன்மை பெறுபவர்களும், கோக்காக்கும் இடையர்களோ? தேவர்கள் உண்ணும் அவியுணவைத் தெருவிற் கிடக்கும் நாய்க்கிடுதல் தகாதே. ஓ தருமபுத்திரரே! நீரோ!! சத்தியத்தைக் காக்கும் தலைவர். கண்ணபிரானோ! அக்கிரபூசைக்குச் சற்றேனும் உரிமை இல்லாதவர் இவரைத் தகுதியுடையாரென்று அக்கிரதாம்பூலம் வழங்கில், உமது நடுவுநிலைமை யாதாகும்? இங்கே வந்திருக்கும் அரசர்கள் அடைந்த அவமானத்திற்கு என்செய்வீர், என்று தகாத மொழிகளைக் கூறிப்பின் சந்தனுகுமாரராகிய வீட்டுமரை விளித்தான். அறிவானும், வயசானும், அனுபவத்தானும் மிக முதிர்ந்து விளங்கும் பெரியோய்! இங்கே நிகழ்ந்த அக்கிரதாம்பூல கருமத்தை நன்றாக நாடிச் செய்யாமையானது தருமபுத்திரர்மீது குற்றமேயாகும். இதனை நன்றாக அறிந்த நீரும் தலைகவிழ்ந்திருத்தல் விந்தையேயாகும். அக்கிரபூசைக்கு உரியவர்கள், இல்வாழ்வார், பிதா முதலிய பெரியோர்கள், உறவினர், யாகபுரோகிதர்கள், மருமக்கள், புவிக்கரசர் என்னும் அறுவகையினர் என்று முன்பு நீர் கூறியது என்ன நிலைமையாயிற்று. அந்த அறுவர்களுள்ளும், இந்தக் கண்ணபிரான் எவ்வகுப்பைச் சேர்ந்தவர்? உமது நரையும், அறிவும், அவதானமும், மூப்பும் வீணாயிற்று என்று பல இழிமொழிகளைக் கூறினன். பின், கண்ணபிரானை முன்னிலைப் படுத்தினன். ஓய் கோக்குலக் கொழுந்தே! நீரும் அக்கிரபூசைக்குத் தகுதியுடையவர் தானோ? நீர் யார் என்பதை நீரே நன்றாக ஆராய்ந்து பார்த்தல் நன்றாகும். உம்மிடத்துள்ள வலிமைகள் எல்லாம் உமது உடன்பிறப்பாகிய பலராமனின் வலிமையேயன்றி உமதன்று. ஓய் கண்ணபிரானே! வலிமையுள்ளேன் என்று தலைமைபேசுகிறீர். காலயனன், சராசந்தன் முதலிய காவலர்களுக்குச் சாலவுந் தோற்றுத் தலைமையிழந்தீர்.

அப்பொழுது உமது வலிமை ஆரிடம் போயிற்று. சத்தியன், மதுசூதனன், சக்கரதரன், விக்கிரமன், நிர்க்குணன், ஸ்ரீபதி நரகவிசயன் முதலிய நாமங்களை உலகத்தார் உமக்கு வழங்குவர். சத்தியன் என்பது நக்கின சித்துவின் புத்திரியாகிய சத்தியபாமையைப் பத்தினியாய் வைத்திருத்தல் பற்றி வந்தநாமம். மதுசூதனன் என்பது தேனீக்களை நீக்கித் தேனழித்தலால் வந்த நாமம். மது என்பவனைக் கொன்ற காரணம்பற்றி வந்த நாமமன்று. சக்கரதரன் என்பது பகைவர்க்குப் பயந்த சேனையைத் தரித்தல்பற்றி வந்த பெயர். (சக்கரம்—சேனை) சக்கராயுதமுடையவன் என்பது தகுதியன்று. விக்கிரமன் என்பது விண்ணிலே அடிவைத்தலால் வந்தநாமம். வீரமுடைமையினாலன்று. நிர்க்குணன் என்பது மானுடசரீரத்துக்குரிய வீரம், வலிமை முதலாம் குணங்கள் இல்லாமையால் வந்தபெயர். முக்குணங்களையும் கடந்து குணிபொருளாய் விளங்கியமையினால் அன்று. நீர் குணிப்பொருள் ஆயின், முக்குணங்களையும் கடக்க முயல்வதேனோ? குணசம்பந்தமில்லாத ஒருவற்கு அக்கிரதாம்பூலம் யாது பயனைச் செய்யும்? மொட்டந்தலைக்குச் சீப்பும் அழகுசெய்யுமோ? ஸ்ரீபதி என்பது ஸ்ரீ என்னும் பெயருடைய இலக்குமிக்கு நாயகனாய் இருக்குங்காரணத்தால் வந்த பெயர். அரசுரிமையாகிய இலக்குமி என்பதே உமது கருத்தாகும். நரகவிசயன் என்பது பாவங்கள் இன்மையினாலே நரகத்தையும் வென்றவன் என்று உலகோர் அறிய வைத்த பெயர்; நரகாசுரனை வென்றமைபற்றியன்று என்று பலவாறு கோமாளமும், கொடுமையும் தோன்றக் கண்ணபிரானைக் கடிந்து கூறியபின் சபையில் இருந்த அரசர்களை முன்னிலையாக்கிச் சொல்லுகின்றான்.

பூவேந்தர்களே! இப்பேரவையிலே நீங்கள் எல்லீரும் சமுகமாயிருப்ப உங்களைச் சற்றேனும் மதியாமல் காட்டு நாயை மதித்து அவிப் பாகங் கொடுப்பதுபோல இத்தருமபுத்திரரானவர் கண்ணபிரானையே மதித்து அக்கிர தாம்பூலம் கொடுத்தனரே! இது அரசகுலத்துதித்த உங்கட்கெல்லாம் பெரிய விழுக்காடாகும் என்பதை நீங்கள் இன்னும் உணராதது வெகு ஆச்சரியம். கண்ணபிரானின் குறைகளை இன்னுங் கூறுகின்றேன்; கேளுங்கள். அரிட்டன் என்னும் ஒருவன் எருத்துமாட்டு வடிவம் அமைந்து வந்தவனைப் பிடித்து அடித்துக் கொன்றனர்; அதனால், தொட்டும் பூசனை புரிதற்குரிய தூயவரன்று. கோக்குலம் அடித்து மேய்க்கும் சண்டாளர் தேகமோ அழுக்கு மலிந்திருக்கும். இவர் குழந்தையாய் இருந்தபோது பால் வறுமையினால் அழுதனர் அன்றோ? மனவிரக்கம் காரணமாக முலைசுரந்து பால்கொடுத்த பூதனையாகிய பெண்ணையும் வேதனைசெய்து உயிரை உறிஞ்சிக் கொன்றனர். பெண் கொலை என்பது பெருத்த பாவம் என்பதையும் உணர்ந்தாரில்லை.

இவரைப் பசுக்காக்க வைத்துப் பாதுகாத்த தாய் மாமனாகிய கஞ்சனையும் கொன்றார். இதுவும் தமக்குப் பெருமையும் அழகும் என்று மதித்திருக்கின்றாரே! இஃதென்னை. இழிவு! புல்லாங்குழலை ஊதி மாடுகளை மேயவிடாது தடுப்பதும் இவரது இயற்கை அன்றோ? சகடனை உதைத்துக் கொன்றதும், மருதமரத்தைக் கிழித்ததும், கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்ததும் ஆண்மையாமோ? என்று பல நிட்டூர மொழிகள் புகன்று, நரகாசுரன் மகனாகிய வேணுதாரியுடன் கூடிநின்று கைதட்டி அட்டகாசம் செய்தான்.

அச்சம்பவங்களை எல்லாம் கண்ட யதுகுல வீரர்கள் கோபம் என்னுங் கொடுங்கனலானது பொங்கி எழத் தாமும் எழுந்தனர். கண்ணபிரான் அவர்களைத் தடுத்தனர். வீரர்களே! யான் இச்சிசுபாலன் மீதுற்ற பரிவினால் நூறு குற்றம் பொறுப்பேன் என்றமையை நினைக்கவேண்டியிருக்கின்றது என்று சிசுபாலன் நிந்திக்கைகளை ஒவ்வொன்றாகக் கணித்தனர். சிந்தையாலே சிந்தை திரிந்து வேறுபட்டவரும் அல்லர். அதனைக் கண்ட வீட்டுமரும் சிந்தை வேறுபட்டனர். மடை அவிழ்ந்த கடல்போலப் பொங்கி எழுந்து கூறுகின்றார். “இச்சபையிலே யான் செய்வித்த அக்கிர பூசையிலே உக்கிரமும், பொறாமையும் உடையவன் இக்கணம் எழுந்து வில்லு வளைக்கக்கடவன். எல்லா அரசர்கள் சிரசிலும் இந்தப் பாதம் வைக்கப்பட்டது” என்றார். வீட்டுமரின் வீர வார்த்தையைச் செவியுற்ற சிசுபாலன் பக்கத்து அரசர்களாகிய துருமன், வேணுதாரி, உருக்குமிணன் என்னும் அரசர்கள் முறையே கோபாவேசத்தால் உருமாறி நச்சுமரம் போலவும், காற்றினால் தீப்பற்றி எரியும் நச்சுமரம் போலவும், உருக்குமிணியைக் கண்ணபிரான் கவர்ந்த காலத்தில் எழுந்த கோபத்துடன் இப்பொழுது பொங்கி எழும் கோபமுங் கூடிக் கொதித்தெழுந்தனர். இன்னும் சில அரசர்கள் எழுந்து சீறினர். சிசுபாலனும் எழுந்தான். படம் விரித்தாடும் பாந்தள்போலச் சீறினன். சடலம் நடுங்கினன். கண்களில் நெருப்புப் பொறிகள் பறந்தன. நஞ்சுபோன்ற சில சொற்களைக் கூறுகின்றான்.

அரசர்களே! சோர புத்திரர்களாகிய பாண்டவரையும், வயதில் முதிர்ந்த வீட்டுமரையும், கண்ணபிரானையும் நீவிர் அனைவரும் இன்னும் கொல்லாதிருத்தல் என்னையோ? இவர் வீராதி வீரனாகிய என்னுடன் போர்புரியும் ஆற்றலும் உடையவரோ? இவரை

அக்கிர பூசைக்குத் தெரிந்தெடுத்த வீட்டுமருடன் தருமபுத்திரரும் போர் என்னும் உரைகல்லில் எங்கள் இருவரையும் உரைத்துப் பார்க்கச் செய்கின்றேன். பருந்துடன் கழுகும் எனது பாணங்கள் குடித்த மிகுதி இரத்தத்தைக் குடிக்கச் செய்கின்றேன் என்றான். தருமராகிய அறத்தலைவர் கண்ணபிரானின் பாத்துவத்தையும், சிசுபாலன் விதியையும் நன்கு அறிந்தவர் ஆகையால், சிசுபாலனின் போர் முயற்சியைத் தடுத்தனர். ஊழ் என்னுந் தெய்வம் யாரைத்தான் விட்டது. தருமரின் நல்லுரைகள் யாவும் இல்லிக் குடத்திற் பெய்த நீர்போலாயின. சிசுபாலன் வெளியிற் சென்றான். அவன்பக்கத்தரசரும் போயினர்.

பொறுமையும், கருணையும் உடைய பாண்டவர்கள் விடத்தினுங் கொடிய நிந்தனைகள்புரிந்த சிசுபாலன்மீது அன்பே அமைய நின்றனர். வெளியே சென்ற சிசுபாலன் தேரில் ஏறினன். பாளையத்தை அடைந்து சேனைகளைத் திரட்டி ஆயத்தஞ் செய்தான். இரண பேரிகை முதலாம் வாத்தியங்களும் முழங்கியது. வீரர்களும் யானைகளும் புறப்பட்டன. பல அபசகுனங்கள் உண்டாகியது. ஒரு வீரனின் மனைவியின் கையிலிருந்து தண்ணீர்க் குடந் தவறி விழுந்தது. வேறொருத்தி கண்ணீர் உகுத்தனள். சிசுபாலனும் போருக்கு வரும்படி தூதனுப்பினன். கண்ணபிரானின் பக்கத்தில் நின்ற சாத்தகியானவன் அத்தூதுவனுக்குச் "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர் செயற்கரியசெய்கலாதார்" என்னுங்கருத்தமைந்த நீதிமொழிகள் பலவற்றைச் சொல்லினன். தூதுவன் வெகுண்டு கண்ண பிரானை நோக்கிப் போர்க் கெழத்தக்க பலமொழிகளைப் புகன்று நின்றான். தூதுவனது கொடுமொழிகளைக்கேட்ட கண்ணபிரான் பக்கத்து வீரர்களாகிய பலராமன், நிடதன், யுதாசித்து முதலியோர் பிரசண்ட மாருதம் வீசப்பட்டுக் கடல்பொங்கி எழுந்தது போல கொதித்தெழுந்தனர். யானை முதலாம் படைகளும் எழுந்தன. போர்ப் பறைகளும் முழங்கியன. இருபுறச் சேனைகளும் கலந்து பூசல் விளைத்தன. வேணுதாரி என்பவன் பலராமரினால் தோற்கடிக்கப்பட்டான். இவ்வண்ணமே இருதிறத்து வீரர்களும் போர்புரிந்து, சிசுபாலன் பக்கலில் நின்றவீரர்களே அபசெயமடைந்தனர். சிசுபாலன் கண்ணபிரானை அறைகூவிப் பாணமழை பொழிந்தான். கண்ணபிரான் வேறு பாணங்களால் தடுத்தனர். பின் வாயவ்வியம் ஆக்கினேயம் முதலிய தீயபாணங்களைச் சிசுபாலன்மீது செலுத்தினர். சிசுபாலன் அவற்றையறுத்து நீக்கி ஆகாய மார்க்கமாக எழுந்துசென்று மறைந்துநின்று பாணமழையைச் சொரிந்தான். கண்ணபிரானும் அவ்வாறே செய்தனர். இறுதியுந் நேர்ந்தது. இனி இவனைக் கொல்லலே

தகுதி எனத்திருவுளம் பற்றிய கண்ணபிரான் தமது திருக்கையில் இருந்த சக்கரப்படையைச் செலுத்தினர் அவ்வாயுதம் சிசுபாலனின் தலையைக் கொய்து வீழ்த்தியது. வீழ்ந்த உடலத்தினின்றும் ஒரு சோதியானது எழுந்து விண் முதல் இடங்களில், ஒளிபரப்பி, மண்ணளந்த மாயவனின் மலரடியை நண்ணியது. அவ்வதிசயத்தைக் கண்ணுற்றோரனைவரும் யாது காரணமென்னக், கண்ணபிரான் சேதிகாவலனின் செய்கைகளை மிகவிரிவாகக் கூறினர். விண்ணவர் மலர்மாரி தூவினர். வீட்டுமர், துரோணர், விதுரன் முதலாம் மெய்யறிவுடையோர்கள் புளகாங்கிருதமும் ஆனந்தக்கண்ணீரும் பெருக நின்று சொற்றடுமாறினர். துளசிமாலையை அணிந்தவரும், வேதமுதல்வரும் ஆகிய கண்ணபிரானின் திருவிளையாடலைப் பலவாறு புகழ்ந்து போற்றினர்.

அச்சமயம் அருட்கடலாகிய கண்ணபிரானார் அறக்கடலாகிய தருமபுத்திரரை நோக்கி, இங்கே வந்துள்ள அரசர்களுக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்குதிர் என்றார். தருமரும் தம்பிமார்களுடன் இறை பணியாற்றினர். யாகத்துக்கு வந்த அரசர்களும் முனிவர்களும் பாண்டவரை ஆசீர்வதித்தும், கண்ணபிரானை வணங்கியும் தத்தம் இடங்கட்குச் சென்றனர். கண்ணனும் துவாரகை புகுந்தான். நூற்றுவரும் அவ்வாறேகினர். பெரியோர்கள் புகழ்ந்து கொண்டாடத் தகுந்த பராக்கிரமம் மிக்க பாண்டவர்கள் கடல் சூழுலகைக் குடைக்கீழ் ஆண்டிருந்தனர்.

2-ம் பாடம்.

அருச்சுனன் தவம்.

சூதாட்டத்திற் றோற்று அரசிழந்த பாண்டவர்கள் பன்னீராண்டு வனவாழ்வும், ஓர் ஆண்டு அஞ்ஞாத வாசமும் கழிக்க மனம்உவந்தனர். பாஞ்சாலியும் உடன் செல்வாளாயினள். பற்பல விடங்களிலும் அலைந்துதிரிந்தனர். பின்பு காமிய வனமென்னும் பசுமரச்சோலை செறிந்த ஒரு இடத்தையடைந்து, நாடுவிட்டுச்சென்ற துன்பத்தை மனமகிழக் கழித்தனர். அவ்வனத்திலே இம்மை மறுமை இன்பங்களை அவ்வப்போதே குறித்துக்காட்டுகின்ற நறுமணங் கமழுஞ் சந்தனக்கட்டை அகிலங்கட்டைகளை அளாவிய நந்நீர்ச் சுனைகளைக் கண்டனர். மத்தகம் பொருந்திய கொம்பன் யானைகள் பிடிகளுடன் கூடிக் களித்து விளையாடும் கான்யாறானது சமுத்திரத்திற் சென்று சேரும் நீர்வீழ்ச்சியையும் அழகுறக்கண்டனர். தண்பொழிலிடத்துப் பூவுங்காயுங் கனியும் நிறைந்துள்ளன. ஆங்காங்கு மேகங்கள் படியும் பண்ணையுங் கண்டனர். நல்லோர்கள் எய்திய காரணத்தால், அவ்வனத்திலுள்ள நெருப்புப் புகையும் மாறியது. முனிவர்கள் வேட்கும் ஓமப்புகையே முகிலாக விளங்கியது. மிருகேந்திரனாகிய சிங்கமானது தனக்கு எப்பொழுதும் ஒதுங்கிவாழும் யானைகளுடன் கூடிவிளையாடுகின்றது. அத்தண்பொழிலோ! இமயமலைச்சாரலை யொத்திருந்தது. இஃதிங்ஙனமாக, அரசர்களுள் திருவன், துட்டத்துய்மன் முதலியோரும், மற்றைய குறுநிலமன்னர்களும் பாண்டவர் மீதுற்ற காதல் காரணமாக அவ்வனத்தை யண்மினர். அச்சமயம் பாண்டவர் சகாயனாக, ஆயர்பாடியிலுதித்த தேவர்கள் தலைவனாகிய கிருஷ்ணரும் ஆங்கெய்தினர். பாண்டவர் பாரிழந்த கருமத்தை நினைந்துமனமுருகிய அரசர்களும் பெரியோர்களும் தருமரை முன்னிலையாக்கினர். பூதலத்திறைவ! துரியோதனனானவன் நற்குடிப்பிறந்த திரௌபதியை மானபங்கஞ் செய்தனனன்றோ! அத்தீயவனைக் கிளையுடன் கொல்லலே தகுதியென்று சிலர் கூறினர். தேர்ப்பாகன் மகனாகிய கன்னனைக் கொல்லவாருங்கள் என்றனர் சிலர். இவ்வண்ணமாக ஆங்கிருந்தோர்கள் தத்தம் மனப்பான்மைக்கேற்பப் பராக்கிரமம் பேசினர். இவற்றையெல்லாங் கேட்ட கேசவனானவன் மற்றைய மன்னர்களை விளித்து அரசர்களே! நீங்களனைவரும்

இப்போ கொண்டுள்ள வெஞ்சினத்தை மாற்றுங்கள். எதிர்காலத்திலன்றோ உங்கள் ஆண்மையும், ஆதரவும் பாண்டவர்க்கு இன்றியமையாத நற்றுணையாகும்.

வஞ்சத்தினாற் செய்யத்தகாதன செய்வோர் கெட்டொழிகை திண்ணம். "கெடுவல் யானென்பதறிக தன்னெஞ்சம் நடுவொரீஇ யல்ல செயின்" என்பதன்றோ விதி. ஆகையினால் யாம் கழிந்ததற்கிரங்கி ஆம்பயனுளதோ? மேல்வருதலை யாலோசித்தலே தகுதியாகும். முரசகேதனா! உமது மைந்தர்களை முரச கேதுசுற்றத்தாருடன் இருத்துதிர். தாயாகிய குந்தியைச் சுபலன் மகனிட மொப்புவிக்குதிர். பின்பு நீவிர் ஐவரும் பாஞ்சாலியுங் காடுறைதலன்றோ தகுதியென்றனர். தருமரும் இவ்வரிய வாசகத்தை மகிழ்வுடன் கேட்டுத் தாய் முதலியோரை ஏற்ற ஏற்ற இடங்கடோறு முய்த்தனர். தாங்கள் காடுறைதலையே சிறந்த பணியெனக் கொண்டனர். கொண்டல் வண்ணனுந் துவாரகை புக்கான். மற்றைய வேந்தர்களும் தத்தமிடங்களை யெய்தினர். அவ்வரிய தருணத்தில் வேதவியாசர் பாண்டவர்கள் மீதுற்றபரிவே காரணமாக அவ்விடஞ் சென்றனர். முனிவரை யெதிரேகண்டனர். பாண்டவர்களும் இருக்கை விட்டெழுந்தனர். ஆசனத்திருத்தினர். மூவகை நீரினாலும் உபசரித்தனர். வந்தனை புரிந்தனர். தேவரீரின் நல்வருகையினால் எமது நாடிழந்த துன்பம் நீங்கியது என்று முகமன் பல கூறினர். பின்பு சுயோதனன் இளைத்த தீங்குகளை முறைமுறையாகக் கூறினர். முனிவரும் அவற்றையெல்லாங் கேட்டு மனம் வருந்தினர். அரசர்களே! தாய பாகத்தினாலெப்பொழுதும் யார்க்கும் பிழைகள் நேருமென்றே பெரியோர்கள் கூறினர். ஆகையினால் ஆசைக்களவுண்டோ? "அவாவென்ப தெல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுந் தவா அப் பிறப்பீனும் வித்து" என்பது பெருமொழி யல்லவோ? நொதுமலர்கள் வருந்தத் தாம் அவரையெதிர்த்து இல்லாத தீங்குகளையுண்டாக்கினும் அவர்கள் துய்ப்பனவு ஒருபோதுங் கெடாது. வேந்தே! முன்னொரு காலம் ஏகசக்கிராதிபத்தியம் படைத்த நளமகாராசனும் சூதாடியரசையிழந்தனன். புட்கரன் கையில் நாடு நகரங்களை ஒப்பித்தனன். மனைவியுந்தானும் காலிற் பொடிபடக்காட்டிற் சென்றனர். இச்சம்பவத்தை நீங்களுமறிவீர்கள். "அடுக்கிவரினு மழிவிலானுற்ற விடுக்கணிடுக்கட்படும்" என்பது உறுதிமொழியாகும். அறிவிலும் பொறையிலுஞ் சிறந்த தருமவேந்தே! இப்பெரிய துன்பத்தை வெல்வதற்கு யான் ஓர் உபாயங் கூறுகின்றேன். அதாவது உலகத்துள்ள மக்களனைவரும் செயற்கரிய செய்கையைச் செய்யவேண்டில், தவஞ்செய்து அத

னாற் பெறுவதன்றி வேறு எதனாலும் பெறமுடியாது. நீங்களும் அவ்வாறு செய்தலே தகுதி. உங்களுள் தவத்திற்றூரியவனும் இந்திரகுமாரனாகிய அருச்சுனனல்லவோ? அவ்விளவலே சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து அக்கடவுளிடத்திற் பாசுபதாஸ்திரம் பெறினன்றியொருபோதும் வெஞ்சினந் தீர்க்கமாட்டீர்கள். அவ்வம்பினாலேயே பகைவர்களைப் படுகளத்தில் நீறாக்கலாம். அதற்குரிய மந்திரத்தைப் பார்த்தனானவன் பெறுதற்குரிய சமயம் இதுவேயாகும். அது உமக்கு உடன்பாடோ? என்றனர். முனி மொழியை முழுதுணர்ந்த தருமரின் காதலைக் குறிப்பால் அறிந்த காண்டீபனும் பொருக்கெனவெழுந்தனன். முனிவர் பக்கலில் தலைசாய நின்றனன். காலத்தினால் வந்தவுதவியை வேண்டாமென்பவர்களுமுளரோ? அச்சணமே தபோமந்திரம் உபதேசிக்கப்பட்டது. அருச்சுனனும் அகமகிழ்ச்சியெய்தினன். பசுபதியைத் தியானிக்கும் முறைமையையும் முனிவரெடுத்துரைத்தனர். மெஞ்ஞானவொளியும் வீசியது. முழுமுதற்கடவுளின் முதன்மையாகிய மந்திரம் பெற்றமையினால் முத்த முறுவலுண்டாயது. முனிபுங்கவரும் பார்த்தனின் மகிழ்ச்சியை நன்குணர்ந்தனர். அச்சமயம் தெரிவுறுத்த வேண்டியவைகளைத் தெரிந்து கூறினர். அரசிளங்குமர! தவஞ் செய்வோர்கள் நன்குணரவேண்டிய சாதனங்களை நீ நன்றாகவறிந்திருத்தல் வேண்டும். அல்லது பலவகையான துன்பங்கள் நேரிடவுங்கூடும். நீ செல்லுமிடமோ பசுமரச் சோலைசெறிந்த மலைச்சாரலாகும். ஆங்குத் துட்டமிருகங்களும் வனவேடர்களும் மகிழ்ந்துறைவர். அவர்களால் வந்தெய்தும் தீங்குகட்கு ஏற்றவகையாக ஆயுதங்களும் அமையவேண்டும். இன்னும் மிக முக்கியமாகிய கருமமொன்றுளது. அதுவேயடக்கமென்பது. எத்தன்மையுடையாரும் அடக்கத்தை மெய்ப்பொருளாகக் காக்கவேண்டியதே விதி. "காக்க" என்று நாயனாரும் கூறினர். கௌதமமுனிவரானவர் அடக்கமுடைமையினால் இந்திரன் அனுபவிக்கச் சாபமிட்டனர். இன்னும் விசேடமாகவொன்று கூறுவன். "இளையானடக்கமே யடக்கம்" ஆகையால் அடக்கம் மிக முக்கியமாகக் காப்பாற்றவேண்டும். இன்னும் நீ போகும்வழியில் ஏற்புடைக்கடவுளர்களும் பலருளர். அவர்களையும் அவ்வவர் நிலைமைக்குத் தக்கபடி வேண்டுதல்செய்து முழுத்தவமுதல்வனாகுவையென்று ஆசீர்வதித்துக் கூறி முனிவர் மறைந்தனர்.

காண்டீபன் முனியின் பதமலரை வழிபட்டுத் தவத்திற்குச் செல்லுந்நாளுங் கோளுந் நன்குணர்ந்தான். வியாசமுனிவரின் ஏவலினால் ஆங்குநின்ற இயக்கனது துணையும் வந்து

சேர்ந்தது. இயக்கனின் நிலையோ! பக்குவான்மாக்களை இறைவனுடன் கொண்டு கூட்டுந் திரோதாயிபோன்றிருந்தது. பெரியோர்களின் நட்புரிமையானது எந்நேரமும் மேல்நோக்கியே செலுத்தும். இயக்கனின் உதவியோ! காலத்தினாற் செய்த உதவியாகும். இருவருங் கூடியுயர நடக்கவே இந்த்ரநீலம் என்னுமிடமும் விரைந்து காணப்பட்டது. பார்த்தனும் ஏறுவானாயினன். வடதிசையே ஏற்ற இடமாயிற்று. நற்கருமஞ் செய்வோரும் வடதிசையையே விரும்பிச் செய்வர். உதாரணமாக மாதவத் தொல்காப்பியனார் கூறிய "வடவேங்கடம் தென்குமரி" என்ற பாயிரவடிக்கு ஆசிரியர் உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியரும் தாம் கூறிய விருத்தியுரையுள் இக்கருத்தையமைத்து "மங்கலமரபிற் காரியஞ் செய்வார் வடக்குங் கிழக்குந் நோக்கியுஞ் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராகலின் வடதிசையை முற் கூறினார்." அதுவே இந்திரநீலமென்னு மிடமாயிற்று. ஆங்குள்ள இயற்கைவளனோ பார்த்தனின் கண்களைக் களிப்படையச் செய்தன. வானம்பாடி முதலிய புட்களின் ஒலியோ! இன்னிசை வேணுகானம் போன்று செவிக்கமிர்தத்தையூட்டியது. கதிரவன் வெப்பத்தினாலுருகிய பனிக்கட்டியானது பளிங்கைக் கரைத்துச் சொரிந்த தன்மையைப் போன்றவழகும், மெழுமெழுவென்னும் அனுகரணவோசையையுமுண்டாக்கலால் கண்ணுஞ் செவியுமாகிய விருபொறிகளும் ஒரு பொருளை யொருமுறையில் ஆரத்துய்க்கு மனுபவத்தையும் எய்தியது. அன்ன பலவியற்கை வளங்களைக் கண்டு களிப்புற்ற பார்த்தனை இயக்கன் முன்னிலைப் படுத்தினான்.

அறிவிற் சிறந்த அரசரேறே! இப்பெருங் குன்றத்தின் பெருமையை யார்தான் சொல்லமுடியும். எப்பொருட்கும் மேலாகிய இறைவன் கோயில்கொண்டருளியதும் இம்மலையின் கொடுமுடியேயாகும். பார்வதி தேவியாரும் சிவபெருமானைக் குறித்து நெடுநாட் டவமியற்றியது இக்குன்றிலன்றோ! இவ்விடமுள்ள இயற்கை வளங்களோ! மற்றையவிடங்களைப் போன்று பருவக்காற்று, கால மாரியென்னு மிவைகளினால் வாட்டமும் மகிழ்வும் எய்துவதில்லை. தவக்கொழுந்தே! இத்தகைய பெருமைவாய்ந்த விந்திரநீலத்தில் நீர் தவஞ் செய்யுங்கால் பற்பலவிடையூறுகள் வந்தெய்துவது சகசமெனினும், அன்னவற்றிற்கு அசையாதிருத்தலன்றோ ஆண்மை, என்று அளப்பரிய விழுப்பம் மிகுந்த நந்நயமொழிகளைப் புகன்று இயக்கன் மறைந்தனன்.

கிரீடியும் இயக்கனின் பிரிவாற்றாமையினால் நின்று உருகி ஒருவாறு தேறிப் பின் இந்திர நீலமென்னும் அழகிய குன்றின் மீது ஏறத் தொடங்கினான். அவ்விடத்தேயுள்ள மாவொலி, புள்

ளொலிகளும், மற்றைய கண்கவர் வனப்புகளும், மிக்கு மிக்கு விளங்கக் கண்டான். பகீரதியென்னும் நதியின் கரையைச் சென்றடைந்தான். அவ்விடஞ் சிறிதுநேரந் தங்கி அப்பாற் சென்று பற்பல நறுங்கனிகளை யுதிர்க்கின்ற பசுமரச் சோலை செறிந்தவோர் பூங்காவையெய்தினான். அந்த இடமோ பார்த்தனின் கருதிய கருமம் இனிது கைகூடுவதற்கு உரிய இடமாகவிருந்தது. அங்கே தங்குவானாயினன். குவலையானந்தம் முதலிய யோக நூல்களில் நுனித்துக் கூறும் ஆசன விதியை முதலில் வகுத்துப் பின்நியான சமாதி செய்வதற்குத் துணிந்தான்.

"ஆசினான் மறைப்படியு மெண்ணில் கோடியாகமத்தின்படியு
மெழுத் தைந்துங்கூறிப்
பூசினான் வடிவமெல்லாம் விபூதியாலப் பூதியினைப்புரிந்த சடைப்
புறத்தே சேர்த்தான்
தேசினாலப் பொருப்பின் சிகரமேவுஞ் சிவனிவனேபோலுமென்
னத் தேவரெல்லாம்
பேசினார் வருசிலைக்கை விசயன்பூண்ட பெருந்தவத்தினிலை
சிலர்க்குப் பேசலாமோ"

என்னுஞ் செய்யுளிற் கூறியபடி திருவெண்ணீற்றை ஐந்தெழுத்தோதிச் சாத்தி, அச்சிகரியின்மீது எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானின் வடிவமேயென்று கண்டோர் வியப்படைய நின்றான்.

"ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரம்" என்னும் முதுமொழியை ஒத்து ஐம்புல வேடுவருடன் பொருஞ் சமர் புரிந்து வெற்றியெய்தினான். தனது ஒரு தாளையூன்றி அத்தாளின்மீது மறுதாளைச் சேர்த்தினான். மேனோக்கிய பார்வையுடனும், கண்டோர்கள் இவன் சூரியனைப் பிடிக்க எத்தனிக்கின்றான் என்று சொல்லும்படியாகத் தனது இரு கரங்களையும் நீட்டியும், இமையா நாட்டத்துடனும், நீர்த்தாரை மேன் மேலுஞ் சொரியவும், அரசர்களுள் இவனுக்கு நிகராவாருளரோவென்று சொல்லும்படியாக நின்றான். மிக மேலாகிய வுள்ளத்துறவெய்தினான். உடல் வலியுடன் படைக்கைக்கொண்ட பெருவலியும் மிக்கிருப்பினும், யாதோரிடையூறுமின்றி நின்றான். யோகவுறுப்பினைப் பெரியார் பலர் கூறியுள்ளனவற்றை நன்குணர்ந்தான். இயமம், நியமம், இருத்தல், உயிர்நிலை, மனவடக்கம், தாரணை, தியானம், சமாதி என்னும் எண்வகை நிலைகளையும் மிக மேன்மையுடன் கையாண்டான். (அட்டாங்க யோகம் என்னும் விதியை நன்கு அனுஷ்டித்தான்.) இறைநிறைவிலழுந்தலாகிய கடும் போரைப் பார்ப்பதி கொழுநனுடன் புரிந்தனன்.

இக்கருமங்களை நேரிற் கண்ட சூரியனும் தன் வெங்கதிரைத் தண்ணிலவென மாற்றினான். இதுவோ!! தவத்தின் பெருமை.

"மேலைத் தவத்தளவேயாகுமாந் தான்பெற்ற செல்வம்" என்னும் முதுமொழியை நன்குணரும் புலவர்கள் அல்லது கவிஞர்கட்குப் பார்த்தனுமோர் எடுத்துக்காட்டாயினன். இறைவனுக்குரிய மூவகை வடிவங்களில் உருவத் திருமேனியையே தனது தியானத்தில் அழுத்தினன்.

"அருவாகி நின்றானை யாரே யறிவா
ருருவாகி வந்திலனே லுற்று" என்றமையினால், தான் நிர்விகற்ப சமாதியினின்று வழிபாடாற்றினும், இறைவனுக்குரிய உருவத் திருமேனியை மனததினாலறிந்து வலப்பக்கத்துள்ளது செம்பவளச் சோதியோ? இடப்பக்கத்துள்ளது நீலமலையோ? வென இரு பெரிய திருவுருவங்களோடு சேரவமைந்தமையினால் அந்த உமையொருபாகத் தண்ணல் வடிவத்தையே மனத்தில் நிறுத்தினான். அளவிறந்த ஆனந்தத்தினால் மார்பும் தோளும் பூரித்தன. மயிர்ப்புளகமுண்டாயது. பசுபதியைத் தியானித்தமையினால் அத்தியான நிலையையன்றி வேறொரு செயலுமில்லாது வச்சிரத் தம்பமென நின்றான். மலையிலுள்ள யானைகளும், இது ஒரு நடுதறியென்று கருதிச் சொறிதேய்த்தன. கறையானும் மேலோங்கி மேலெழுந்து மண்ணைக் குவித்துப் புற்றுருவாக்கின. பாம்புகளும் அப்புற்றினுள்ளே வசித்தன. தாவிப் படரக் கொழுகொம்பு தேடியலையும் கொடியினங்களும், இதுவொரு வயிர மரமெனப் படரலாயின. பார்த்தனும் வெயில் மழை யிவற்றாலுண்டாகும் வித்தியாசமறியாதவனாய் நின்று சிவ சிவ என்னும் மந்திரத்தையே யுச்சரித்து நின்றான்.

"சிவசிவ வென்கிலர் சிந்தனையாளர்
சிவசிவ வென்றிடற் றீவினை மாயுஞ்
சிவசிவ வென்றிடற் றேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே" என்னுந் திருமந்திரப் பொருளையும் வற்புறுத்தினான்.

பண்டொருகாலம் பகீரதனும், அசுரர்களிற் பலரும் பெருந்தவங்களை யியற்றினரெனினும், இவன் தவமோ மிக மேலானது. எவ்வகைப் பெரியாரெனினுந் தவஞ் செய்யின் அதனையறிந்து கெடுக்கும் இந்திரன் மகனே யாவரும் கெடுக்கமுடியாத தவமியற்றினனெனில், இதனினுமதிசயம் வேறுண்டோ? இவ்வருந் தவப் பெருமையை அக்குன்றின்மீதுள்ள வேடுவர் கண்டனர். விம்மிதங் கொண்டனர். விரைந்து சென்று இந்திரனைத் தொழுத கையுடன் கூறுகின்றார்கள்.

தேவராசனே! உமது இந்திர நீலத்திலே பூவுலகிலுள்ள உத்தமனொருவன் மரவுரியும், அம்பும், வில்லும், வாளுந் தரித்த கையனாய் மார்பிற் கவசமுந் துலங்க நின்று தவம் புரிகின்றான். கொற்றவ! யாம் அவனிடத்திற் கண்ட அதிசயமொன்றுளது. அது தவஞ் செய்வார்க் கேவல் கேட்பது ஐம்புலனன்றோ! அதுவே வழக்காறுமாம். இவ்வரசிளங்குமரனுக்கோ மண், புனல், அனல், கால், விசும்பு ஆகிய ஐம்பூதங்களுமே யேவல் புரிகின்றன. மரங்களுமோ! நல்வளமிகுந்து பூமுதற் பொருள்களை உதவுகின்றன. சுருங்கச் சொல்லின், இந்திரநீல மென்னுமிடமானது அவனது வசத்ததேயாகும். அங்குள்ள புள்ளும் மாவும் அவனேவல் கேட்பன, என்று கூறினர். அவர் வாய்மொழியை யிந்திரன் மகிழ்வுடன் கேட்டான். புன்னகை பூத்தான். ஆங்குத் தவஞ் செய்பவன் தனது மகனேயெனக் கருதி யுளம் பூரித்தான்.

"மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்னும் முதுமொழியைப் பல்முறையு முன்னினான். பெறுதற்கரிய பெரும் பேறிதுவன்றோ வென்று உவகைக் கடலுட்டிளைத்தான். எனினும், பிறர் தவங் கெடுத்தலானது தனது தொழிலாகையால், அருச்சுனன் தவத்தையும் அவ்வாறறிய முயற்சித்தான்.

தனது அரம்பையர்கள் நால்வர்களின் வலிமையையும் முன்னரறிந்துள்ளானாகையால் அவர்கள் வரக் கூவினான். வானர மகளிர்கள் அடிபணிந்து ஏவல் கேட்ப நின்றனர். மங்கை நல்லீர்! உங்கள் வலிமையே மிக மேலானது. இனிய மொழியாலும், அரிய செயலாலும் பிறர் தவங் கெடுக்குமாற்றல் உங்களிடமுண்டென்பது மிகையாகாது. இருவினை யின்பங்களையும் அனுபவிக்கும் இப்பூவுலகிலுள்ள மக்கள் கருப்பு வில்லியின் பாணங்கட்குத் தப்புவது மிகவும் அருமையாகும். நீங்களோ அம்மதன வேளுக்கமைந்த பாணங்களாவீர்கள். எவ்வகைப்பட்ட முனிவரெனினும் மயக்குமாற்றல் உங்களுக்குண்டு. உங்களில் மேனகையன்றோ இராச முனியாகிய விசுவாமித்திரனின் தவத்தைக் கெடுத்து நின்றவள். ஆதலால் இசை நாடகங்களில் வல்ல பாணர்களுடன் நீங்கள் இந்திர நீலத்தை யெய்துங்கள். பூவுலக வேந்தனொருவன் கடுந்தவம் புரிகின்றான். அவனது தவத்தையழித்து மீளுங்கள் என்றான்.

இம்மொழியைக் கேட்ட தெய்வ நங்கையர்களும், மன மகிழ்ச்சியுடன் மறுநாட் காலை இந்திரநீலத்தை நோக்கினர். பரிசனர்களையுங் கூய்த் தங்கள் கெடுத்தற்றொழிலுக் கின்றியமையாதவனாகிய மதனை நினைந்தனர். காலம் பார்த்திருக்கும் உருவிலியோ அவ்வமயந் தனது ஐங்கணைகளுங் கருப்பு வில்லுமேந்திய

கையினனாய்ப் பரிசனர்களுடன் வந்தான். காலமும் ஏற்புடை வசந்தகாலமாயது. அச்சமயம் குன்றம் பிழந்த குமரவேளும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளுமுடனிருப்ப, முத்தமிழ் முதநூல் இயற்றிய அகத்தியனாருக்கு உறைவிடமாகிய பொதிய மலையிற் றோன்றிய மந்தாகினி நதியையும், சந்தனவகிற் கட்டைகளையும் அழாவிக்கொண்டு மந்த மாருதமென்னுங் காற்றும் வீசியது. தேவ அரம்பையர்கள் தமது பரிசனங்களுடன் ஆற்றங்கரையை நண்ணினர். அந்த யாற்றின் பெருமையுமளப்பரியது. அந்த யாற்று நீரானது இம்மையின்பங்களை அவ்வப்போதே யுதவத்தக்க தன்மையுடையதாதலின், அக்கன்னியர்கள் நீர்விளையாட்டை மிகச் சிறப்பாகக் கழித்தனர். புதியனவும், அழகுக்கழகு பயப்பனவுமாகிய பொன்னணிகளைப் பூண்டனர். பட்டாடைகளையுடுத்தினர். உண்டாட்டயர்ந்தனர். அச்சங்கதியையறிந்த பரிதியந் தேவனும் மேற்குத்திசையில் மறைந்தான். தேவ மாதர்களும் கண்படைகொண்டனர். பொழுதும் விடிந்தது. துயில் நீத்துக் காலைக்கடனை முடித்து இந்திர குமாரன் தவஞ் செய்யும் பன்னக சாலையை அடையலாயினர்.

காண்டீபன் ஐந்தனலின் நடுவே நின்று தவஞ்செய்தலைக் கண்டார்கள். தேவ துந்துபியின் ஒலியும் கேட்டனர். அதற்கு மாறாக மன்மத பாணமானது எதிரொலிப்பக் கேட்டனர். அவ்வானரமகளிர்கள் தங்கள் காற்சிலம்பின் ஒலியும் மேகலையின் ஒலியும் மிக்குஆர்ப்ப பந்து, அம்மானை, களங்கு ஆகிய விளையாட்டுக்களைச் செய்தனர். இது மட்டுமோ? ஆசைக்கும் அளவுமுண்டோ? அம்மெல்லியர்கள் தங்கள் நெற்றிகளிற்றிலகசிந்தூரமுந்தீட்டினர். இனிய இசையுடன் கூவுங் குயில்களுடனும், கிளிகளுடனும் தாங்கள் எதிரொலியாக இனிய கீதங்களைமிழற்றினர். மயில்கள் ஆடும்பொழுது தாங்களுந்துகில்களை விரித்து, கலாபியோ என்று கண்டோர் வியக்க ஆடினர். கரியகூந்தலாகிய முகில்களைக் குலைத்து வேண்டுவன கூட்டி முற்ற முடித்தனர். குங்குமக்குளம்புகளையு மணிந்தனர். அரையிலுடுத்தவாடைகளைப் புரட்டிப் புரட்டியுடுத்துத் தாவணிகளையும் மாற்றித் தொங்கக் கட்டினர். வாசனைத் திரவியங்களையணிந்து மதனவேத மந்திரங்களைச் செபித்தனர். பண்ணமைந்த பாட்டுக்களுடன் பருந்தும் நிழலுமென்ன வாத்தியங்களை யிரட்டினர். நற்குணங்களோடும் மாறுபாடெய்திய சிற்றின்பப் பேச்சுக்களையும் பேசினர். வெறுவினைகளும் புரிந்தனர். ஐயையோ! அம்மெல்லியர்களின் செய்கைகளுக்குஅளவுமுண்டோ? மன்மதனுந்தன்னாலாகியமட்டும் மலர்க்கணை யேவி அலுத்தான். இந்திரகுமாரனானவன், இயமனையுதைத்த பாதத்தையும், புலித்தோலாடையையும்,

திருநீற்றுப்பொலிவையும், அறல்போல் அமைந்த சடைமீது பிரணவரீதியாகக் கொன்றைமலரணிந்த திருவுருவமேயன்றி வேறொருபொருளையுங் கருதாமல், வச்சிரத்தம்பம் போல்நின்றான். மன்மதனும் புறங்கொடுத்தேகினான். தெய்வமெல்லியர்கள் தங்களாலானமட்டும் மயக்கியுஞ் சித்திபெற்றிலர். இக்கொடுமைகளையெல்லாங்கண்ணுற்ற வெய்யவனும் அத்தமனகிரியிற் புக்கான். அரம்பையர்களும் தமது கருமங் கைகூடாவகைகண்டு நாணத்துடன் சென்று இந்திரனுக்குமுறையிட்டனர்.

தனது மகனின் தவப் பெருமையை நினைந்து ஆனந்தங்கொண்ட இந்திரன், ஓர் விருத்தவேதிய வடிவங்கொண்டு இந்திரநீலத்திலுள்ள பன்னகசாலையையடைந்து தவஞ்செய்யும் வள்ளலைக் கண்டான். பின்வருமாறு பேசத் தொடங்கினான். தவமுதியோய்! உன்னைப்பார்க்கில் ஓர் அரசிளங்குமரன் போல் தோற்றுகின்றாய். இன்னும் வானவில்லைப் போன்ற வில்லும், அம்பறாத்தூணியும், மார்பிற்சட்டையும் காணுதலால், நீ கருதிய கருமமும் அரசுரிமையே ஆதுமென யூகிக்கின்றேன். ஆதலால் நீ கருதித்தவஞ்செய்யும் காரியமியாது? என்றான். அருச்சுனனும் அன்பு மீதூரக் கூறுகின்றான். முற்றத்துறந்த முனிபுங்கவ! உமையொருபாகத்தண்ணல் வெளிப்பட்டுத் திருவருள்புரியும் வரையும் யானிவ்வருந்தவம் புரிகின்றேன் என்றான். புன்னகை பூத்தவிந்திரனும், மகனே! நான்மறைகளும், முனிவர்களும் தேடிக்காணாத கடவுளை நீ காணவேண்டித் தவஞ்செய்தல் இலகுவன்று. மெய்வருந்துவதேயன்றி ஆம்பயன் ஒன்றுமில்லையென்றான். தன் மனக்கிடைக்கைக்கு மாறாகிய கொடுமொழிகளைக் கேட்டவில்லி முனிவெய்தினான். இருஷி புங்கவ! யான் நினைத்தகருமங் கைகூடினாலன்றி ஆவிபோகுமட்டும் தவத்தைக் கைவிடேன் என்றான். மகனின் மனப்பான்மையையும், தவத்திற்றூய்மையையும் கண்ட இந்திரனவன் தனது சொந்த வடிவம் அமைந்தான். பேறினிபிதன்மேலுண்டோ? என்று கருதிய மகனை முன்னிலைப்படுத்தினன். பற்பல ஆசீர்வாதங்களைக்கூறினன். மகனே! பசுபதியானவர் உனது தவத்தை மெச்சி வெளிப்பட்டு வந்து பாசுபதாஸ்திரந்தருதல் திண்ணம். அதுமட்டுந் தவஞ்செய்குவையென்று மறைந்தேகினன்.

பசுபதியும் அருச்சுனனது தவத்தை நன்குணர்ந்தார். இடப்பாகத்திருக்கும் தேவியுடன் வேட்டுவ வடிவ மெய்தினர். பண்ணவரனைவரும் பரிசனராயினர். அம்புடன் வில்லுமணிபெறத் தாங்கினர். இவ்வற்புதத் திருவிளையாட்டைக் குறித்து நூலாசிரியராகிய வில்லியும் தமது விருத்தக்கருவை விளக்கித்தந்த செய்யுளொன்றைத் தருகின்றாம்

"ஓரேனந்தனைத் தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப்
போரேனந்தனைத் தேடிக்கணங்களுடன் புறப்பட்டான் புனங்களெல்லாஞ்
சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாங் குழவியையுஞ் செங்கையேந்திப்
பாரேனை யுலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத் தன்பதிபின்வந்தான்"

அச்சமயம் மூகன் என்னுமசுரனொருவன் சத்துராதிகளின் ஏவல் கேட்டுப் பன்றியுருவமைந்து பார்த்தனின் தவத்தையழிக்க விரைந்தேகினன். இதனைக்கண்ட வருச்சுனனும், தோளின்மீது சாத்தியுள்ள இந்திர தனுவனைய தன் வில்லை வளைத்து நாணேற்றி யம்பொன்றழுத்தினன். வேட்டுவ வடிவங்கொண்டு வந்த பசுபதியானவர் இதற்கு முன்னெய்தனரென்று கண்டோர் கருதும்படி பன்றியின் இடப்பக்கத்தில் எய்தனர். தவவேடருடன் வனவேடரும் எய்த இரு கணைகளினாலும் பன்றி வீழ்ந்திறந்தது. அத்தருண மிறந்த பன்றியைத் தேடினனோ வென்று யாவருமதிசயிக்கும்படி, யாறுகள், சோலைகள் எல்லாம் அலைந்து வந்த வனவேடரானவர் தவவேடனை முன்னிலையாக்கி ஓ தவசி! யான் முறையாக எய்த அம்பினால் வீழ்ந்த பன்றியை நீயும் வலியவன்போற் கணையுருவியதும் ஆண்மையோ? முறையோ? ஏன் இத்தகாத செயலைச் செய்தனை? என்று பெரும்பூசல் விளைத்தனர். அருந்தவனும் அருந்துயரெய்தத் தகுந்த அம்மொழி கேட்டவுடன் ஓ வேடா! யானோ தவஞ்செய்பவன். உண்பதும் சருகுடன் கனிகளாகும். நீயோ வனவேடன். உன்பக்கமோ பாரியும் படையும். வீழ்ந்திருக்கும் பன்றியோ உன்குடும்பத்திற்கும், பரிசனங்களுக்கும் போதிய வுணவாகும். அதனைத் தூக்கிக் கொண்டுபோய் உன் வயிறார உண்பதே நலம். அதுவன்றி என்னோடு வெற்றாரவாரஞ் செய்வையேல் வீண்பழியே வரும். இதோ என்கையிலிருக்கும் வில்லைப்பார். இதிலிருந்து புறப்படுங் கணைகளானவை உனது பரிசனர் புறங்கொடுப்ப உன்றலையையும் சிந்தச்செய்யுமென்றான். இதனைக்கேட்ட வனவேடரும் நாணற்றவனே! அந்தப் பன்றியோ உன்னைக் கொல்லும் வேகத்தோடு வந்ததென்று நீ பயந்தனையோ? சித்த சுத்தியுடனின்று தவஞ்செய்வோர்கள் தாங் கருதவேண்டிய முதற்பொருளையேயன்றி வேறொன்றைக் கருதுவார்களோ? உயிர் போகினும் கருதார்களே. உன்னைப் பார்க்கில் பசுத்தோல் போர்த்துப் புலிப்பாச்ச லிடுவோர்கள் போன்றுள்ளாய். நீஎன்ன அந்தணனோ? அன்றி அரசனோ?

வணிகனோ? தங்கள் வடிவத்தை மறைத்துத்தவஞ் செய்யும் நிசாசரர் குலத்தவனோ? தேவகுலத்தவனோ? நிறைந்த மதி போன்ற உனது வடிவந்தேய்ந்து ஐந்தழலோம்பி நிற்கின்றனை! உனக்கு உற்ற குறையென்ன? எனலும், காண்டீபன் தனது விருத்தாந்தத்தை முறையாகக் கூறினான். கேட்டவன் மெய் விதிர்ப்பெய்தி இளவலே! உன் மாட்டமைந்த குற்றங்களோ பலவாகும். துருபதனைத் தேர்க்காலுடன் கட்டிக் குருதக்கிணை கொடுத்தும், எம்குலவேடனொருவனை விரலை வெட்டியும், முனிவன் மொழிக்காகப் பிறைமுகக் கணையேவிப் பலரைக் கொன்றும், காண்டாவனம் எரிந்தபோது பலவுயிர்களையு மழிவுசெய்தும், குன்றுகள்தோறும் சமராடியுந் திரிந்தனையென்று யானறிவேன். அந்தப்புகழ் காரணமாகவும் வீராதி வீரனாகிய என்னை மதியாது பராக்கிரமம் பேசுகின்றனை! நீயோ மற்போர், புயவலி, வில்வலி மிக்குடையை. அன்றி விஜயனென்னும் பெயரும் பூண்டனை. யானோவுன்னை விடமாட்டேன். என்னுடன் மற்போர்புரிய வா என்றனர். வில்லியுமந்தச் சொன்முடியுமுன்னர்க் குன்ற வில்லியின் மீது ஓர் அம்பழுத்தினன். வனவேடர் ஓர் அம்பால் மாற்றினர். பின் தாமுமிருகணைகளைத் தொட்டனர். அக்கணைகள் தவவேடன் மார்பிலும் தோளிலுந் தைத்தன. காளையும் பின் மூன்று கணைகளைச் செலுத்த அக்கணைகள் பீலியுடன் பொருந்திய முடி, மார்பு, வாகுவலயங்களிற் படுமுன்னர் அவைகள் பலதுண்டுகளாகும்படி மாரருன் போன்ற வேடுவர் கணை தொட்டனர். கிரீடியும் பின்னொரு சரந்தூண்டினன். அதவோ முடியும், பிறையும், கங்கையுங் குலையச்செய்தது. இதனைக்கண்ட இருள் அனைய வடிவுடைய வேடுவர்களெல்லோரும் ஒளி அனைய வடிவுடைய ஒண்தவன்மேற் சமர் கூவினர். வேடுவதலைவனும் அவர்களைக் கையமர்த்தி தவசி! உனது வில்வலிமையன்றோ வலிமை! இதோ வருகின்ற கணைகளைக் காண்! என்று மேருவில் வளைத்தகையால் மேலொரு கணையுந் தொட்டார். இப்படி யிருவரும் விற்போர் புரிந்து வனவேடனுக்குத் தவவேடன் நாணினன். வனவேடரும்பல வசைமொழிகள் கூறினர். சீற்றமும் மேன்மேல் எழுந்தது. தவவேடனும் தன்கை வில்லால் அடித்தான். அவ் அடியானது விண்ணவர்முதல் பண்ணவர்மீதும், மற்றுஞ் சராசரங்கள் மீதும் பட்டது. அச்சமயம் இரு வீரர்களும் மற்போர் புரியலாயினர். அது பொழுது வனவேடர் வில்விசயனாகிய அருச்சுனனைத் தங் காலினாலெற்றி மேலெறிந்தனர். அருச்சுனன் தன்னை மேல் நோக்கி எற்றியவர் இறைவனே யென்பது அறியாமையினால் பின்னும் போர்வலியுடன் வந்து நின்றான். அந்தச்சமயம் அருச்

சுனன் கண்கள் களிப்படையத்தக்க ஒரு சோதி வடிவமானது தோற்றியது.

“ வெய்ய கணநாதர் கணதேவர் விபுதாதியர் விருஞ்சி சிவயோகியருஞ்
செய்ய சுடரோனள கையாதிபதி கின்னரர்கள் சித்தர் பலசாரணர் மணிப்
பையரவினுடிபுரு கூதனிவர்சூழ்தரப் பச்சைமயில் பாதியுடனே
துய்யவிடை மீதொரு செஞ்சுடரெழுந்தது தொழுந்த கையதாகுமளவே”

அந்த அருமைத் திருவுருவத்தைக்கண்ட காண்டீபனானவன் தன் தவ வலிமையை நினைந்துருகினான். கூத்தாடித் தோள்புடைத்தான். கொந்தளித்தெழுகின்ற கடல்போன்று பரவசமெய்திப் பின்னொருவாறு தெளிந்து இருகரங்களையுந் தலைமேற் குவித்துத் தோத்தரித்து:

“ பையராவணி மணிப்பவள மேனியாய்
செய்யவாய் மரகதச் செல்வி பாகனே
யையனே சேவடி யடைந்தவர்க்கெலா
மெய்யனே யெங்குமாய் விளங்குஞ் சோதியே”

என்று இத்தகைய ஆர்வம் பொருந்திய மொழிகளைக்கூறி அப்பனே! என் அன்பே வடிவமாயமைந்த தருமரைத் தமையனாகவும், ஆருயிர்த் துணையாயுள்ள பரம்பொருளை நண்பனாகவுங் கொண்ட பெருமை அடியேற்கன்றி இப்பூவுலகில் வேறு யார்க்குளது, என்று பணிவோடு கூறிய மைந்தனை மன்னும் கட்டித்தழுவி முத்தமிட்டுச் சில நன்மொழிகளைக் கூறி மனதைத் தேற்றினர். பின் வில்லியை விளித்து மகனே! உன்கருத்து யாது? என்றார். இறை நிறைவில் அழுந்திய வில்லி அடிபணிந்து என் தவப்பயனே! தந்தையுந் தாயுமாய்ச் சராசரங்களுமாய் நிற்கின்ற தயாபரனே! அடியேற்குத் தேவரீரின் திருப்பெயர் புனைந்த “பாசுபதம்” என்னும் அம்பைத் தந்தருள வேண்டுமென்று இரந்து கூறினான். இறைவனும் இறைவியுடன் மனமகிழ்ந்து அம்பையும் அதின் உபகரணங்களையு மீந்தருளினர். பின்பு பூதாதிபர்கள் புடைசூழ, உமையவள் பின்றொடர, கைலைமலையிலமைந்த தமது திருக்கோவிலிற் புக்கனர். இச்சம்பவங்களையறிந்த தேவராசனும் தனது பரிசனங்களுடன் வந்து மகனைக் கட்டித்தழுவி முத்தமிட்டு ஆசீர்வதித்தனன். வில்லியானவன் தனது தந்தையின் பாதங்களில் விழுந்து வணங்கினான். இந்திரன் மகனை நோக்கி எனது அருமை மகனே:

“ எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்”

என்னும் முதுமொழிக்கிணங்க முனிவர்களும், தேவர்களும், அரசர்களும் வியக்கத் தகுந்த அளப்பரிய ஆர்வத்தோடு

அருந்தவமாற்றிய உன்னை மகனாகப் பெற்ற எனது தவமன்றோ மெய்த்தவம் என்று பலவாறு வியந்து தனது தேரின் மேலேற்றிக் கொண்டு தன் மாளிகையைச் சென்றடைந்தான்.

இதனைக்கண்ட வானரமகளிர்கள் எண்வகை மங்கலங்களுடன் எதிர்ந்து போற்றினர். அச்சமயம் இந்திரன் பட்டத்துத் தேவியாகிய இந்திராணியானவள், தன் மகனின் தவப் பெருமையை அறிந்தாள். மகனைச் சென்று கண்டு இன்பமுறப் புல்லினாள். அருச்சுனன் தாயைத் தலையாரக் கும்பிட்டான். தேவதுந்துபி முதலாக அப்பட்டினத்திற்குரிய முழக்கொலிகளும் மிக்கது. கற்பக தருவும் ஆனந்த மிகுதியால் விசயன் சென்னியிற் செம்மலர் சூட்டியது. இக்கருமங்களை அறிந்த பரிதியங் தேவனும் பாரிருள் பாச்சினன். சந்திர கிரணம் வீசியது. அப்பொழுது ஆங்குள்ள பெண்களுள் ஒருத்தி மயக்க உணர்வினால் ஆடையாபரணங்களை அழகுறப்பூண்டு அருச்சுனன் முன்னிலையை யடைந்தாள். தனக்குச் சிற்றின்ப நுகர்ச்சி தரும்படி வேண்டினாள். அருச்சுனன் அவளைத் தாய்மையாகப் பாவித்து வந்தனை புரிந்தான். சகிக்க முடியாத துயரத்தையுடைய மங்கையானவள் ஆண்டகையே! நடு இரவில் நீர் ஆண்மையை மறந்து தாய்மையை நாட்டிய காரணத்தால், ஆணும் பெண்ணுமல்லாது பேடியாகப் போகக் கடவை என்று சாபமிட்டாள். விசயனும் அவ்விழிந்த வடிவத்தை யேற்று மனம் வருந்தி, நாணம் மிகுந்து தன்னுடம்பு முழுவதையும் துகிலினால் மூடிக்கொண்டு படுத்திருந்தான். இராக்காலம் கழிந்தது. சூரியன் கிழக்குத் திசையில் உதித்தான். சீரியர் காலைக்கடனை முடித்தனர். தெய்வேந்திரனானவன் மனம் நிறைந்த சந்தோஷத்துடன் தனது பரிசனர்கள் புடைசூழ அத்தாணி மண்டபம் எய்தியிருந்தான். தனது மகனாகிய விசயனை அங்கேயழைத்து வரும்படி தூதனுப்பினான். காண்டீபனானவன் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்பதனை நன்குணர்ந்து இந்திரனைச் சென்றடைந்தான். நிகழ்ந்தனவெல்லாம் முறையாகக் கூறினன். இந்திரன் அவலக் கவலைக் கடலுள் அமிழ்ந்தினன். தேவர்களுடன் சென்று தேவியைச் சாபவிமோசனம் வேண்டினன். தேவியும் விடைகொடுத்தாள். அருச்சுனனானவன் பேடிவடிவம் நீங்கிப் பெருமைவாய்ந்த இராசவடிவமெய்தி இனிதமர்ந்தான். அப்பால் இந்திரனின் பகைஞர்களாகிய நிவாத கவசர், காலகேயர் என்னுமிருதிறத்து வீரர்களையும் போரிலெதிர்த்து அழித்து, வெற்றிவாகை சூடி, இந்திரன் முதலாம் இமையவர் வாழ்த்த, தன் திருநகர் பெறத் தரணியை எய்தினன்.

3-ம் பாடம்

தருமர் அறவுரையுஞ் சூழ்வினையும்.

உலககாரணராகிய நாராயணமூர்த்தி இப்பூவுலகில், எம் பரதமாகண்டத்தின் வடபாலில், துவாரகாபுரியில் கிருஷ்ணர் என்னும் பெயரும்பெற்று இனிது வீற்றிருந்தார். தீயோர்களைச் செறுத்து நீக்கியும், நல்லோர்களை மதித்துக் காத்தும், பூபாரந் தீர்க்கும் புண்ணியனாயினிது வாழுநாளில், பாண்டு மைந்தர் தருமர் முதலைவருந் தங்கட்குத் துரியோதனனாதியர்களால் நேர்ந்த பெருந்துயரைக் குறித்து அவ்வறமுதல் வருடனாலோசிக்கலாயினர்.

அரசர் தருமம்.

மலர்தலையுலகிற் குயிரெனச் சிறந்து விளங்கும் அரசராயினோர், தங்கீழ்வாழும் குடிகட்குந் தமக்கும் வேற்று நாட்டரசர்களாலுந் தாயத்தாராலு மிடுக்கண் நேர்ந்துழி, அறப்போர், மறப்போர் என்பவைகளுள் யாதேனு மொன்றைக் கையாடல் முறையாகும். அங்ஙனங் கையாளுமுன்னர்ச் சேட்புலத் தரசர்க்கு, அல்லது தாயத்தார்க்கு, அறநெறி பிறழாமல் ஓர் ஒற்றன் மூலம் தமது படைவலியும், போர்க்கெழுங் காரணமும் நன்குணர்த்துவித்து, மாற்றான் நிலைகண்டபின்பே போர்தொடங்கல் பண்டை நாளரசர் மரபாகும். இக்கருத்தை யுணர்த்துவான் போந்த ஆசிரியர் தெய்வப் புலமைத்திருவள்ளுவ நாயனாரும் தமது தமிழ்மறையிடத்து அரசவியலில் தூது என்னுந் தலைப்பின் கீழ்ப் பத்து வெண்பாக்களினால் தூது என்பதன் நுண் பொருளையும், அதற்குரியவதிகாரிகள் இன்னாரென்பதையும், தூதுக்கும் இறைமாட்சிக்குமிடையில் இத்தகைய உளப்பாட்டுத் தன்மையுள தென்பதையும, தூது சொல்லவேண்டிய காலத்தையும், இடத்தையுந் நுனித்துக்காட்டியமை, பன்மொழி வல்லபுலவர்களுக்கும் பெருவியப்பைத்தருவதாகும். "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கிறை யென்று வைக்கப்படும்," என்பதும் உய்த்துணரப்படும்.

இத்தகைய அரசர்க்கமைந்த அறப்பெருநெறியைக் காப்பாற்றியவரும், தருமத்துக்குத் தூண்போன்றவருமாகிய முரசக்கொடியோனானவர், தருமமே வடிவாய்த் தமக்குத்தாமே நிகராய் உலகம் முழுவதையுங் காக்குங் கருணைக் கடலாயுள்ள கிருஷ்ண மூர்த்தியையும் உடனிருத்தித் தாமும் தம்பிமார் நால்வரும் பாஞ்சாலியுமொருங்கு கூடி நின்று வணக்கத்துடன் பின்வருமாறு சொல்லுகின்றார்.

முறையீடு

யாதவகுலப்பிரபுவே! எப்புரோகிதராகும் உலூக முனிவரை அரவக்கொடியோனிடம் யாம் தூதனுப்பினோம். அக்கொடியவனும் எமது நாட்டைத் தரமறுத்துப் பெரிய தந்தையாராகிய திருதராட்டிரனுடனாலோசித்தான். சஞ்சய முனிவெனுந் தமது புரோகிதரை எம்மாட்டுய்த்தான். அம் முனீந்திரர் எங்களனைவர்க்கும் ஞான உபன்னியாசஞ் செய்தார். யாமும் அதற்கொருப்பட்டிலம். எதிர்த்துப் போர் முனைந்து சத்துருக்களைச் சங்கரித்தேனும், நாம் இராச்சியபரிபாலனஞ் செய்வது நிச்சயம் என மறுத்தோம். இதனையுணர்ந்த துரியோதனனும் போர் முகத்தில் எம்மிலும் மேலாகிய பராக்கிரமந் தனக்கேயுளதென்றான். அவனது வீரமொழியாகிய விடத்தை நன்குணர்ந்தும் அதற்கேற்ப மருத்துவத்தை நாடாது வாழாவிருத்தல் நலமாமோ? இவ்வின்னல்களைத் தேவரீர் அறிந்திலீரோ? என்று பின்னும் மனம் வருந்தி "அருஞ்சமரம் புரியும்வகையவருரைத்தாரானாலும், பெருஞ்சமரம் விளைக்குமது கடனன்றோ?" என்றும், துரியோதனாதியர் சூதாட்டத்திற் சகுனியுடன் கூடிச்செய்த அடாச்செய்கையையும், அரக்குமாளிகையில் விளைத்த துன்பத்தையும், பாஞ்சாலியின் காதல்காரணமாகப் பல்லோர் குழுமிய பேரவையில் துகிலுரிந்தமையும் "நன்றல்லதன்றே மறப்பது நன்று" என்ற தெய்வமொழிக்கிணங்க முற்றும் மறந்தவர்களாகி யிருக்கின்றோம். என்று பணிவுடன் கூறின தருமரின் கருணைக்கு இலக்குமுண்டோ? அதுவே அறவுரையாகும்.

உண்மை வினாவுதல்.

இரகுகுல திலகமாகிய கேசவன் தருமரை நோக்கிப் பாண்டு மைந்த! நும்நாடோ! மருதநிலச் செறிவுமிக்குள்ளது. ஆங்கு வசிப்பவர்கள் பெரும்பான்மையும் உழவர்களே! அவர்களே கார், கூதிர் முதலிய பருவங்களை அறிந்தவர்கள். அவர்கள் பயிரிடும் பழனங்களில் வரால் மீன்கள் என்றும் விளையாடும்.

வளப்புமுளது. அந்த வளநாடு பெறக்கருத்தோ? அல்லது காட்டினது இயற்கையை உங்கட்கு யாம் சொல்லுவது மிகையாகும். ஆங்குப்பல வனவிலங்குகள் சஞ்சரிக்கும். நிலத்தின் இயற்கையானது ஒவ்வொரு பருவத்திலும் மாறுதலடையும். தனக்குக் குறித்த நிலமில்லாத பாலை வளப்பங்களோ மிகுந்து விளங்கும். "முல்லையுங் குறிஞ்சியும் முறைமைதிரிந்து பாலையென்பதோர் படிவங் கொள்ளுங்காலை" என்பதும் ஆன்றோர் வாக்கு. பாம்புகளும் ஆங்குவதியும். கொலைமையே தொழிலாகவுடைய வேடரும் ஆங்கு வசிப்பர். ஆதலால் அளப்பரிய துன்பம் மிகுந்த காட்டிற் சென்று வசித்தல் கருத்தோ? அல்லது இருபக்கத்து வீரர்களும் அறைகூவிக் கடுஞ்சமர் புரியாநிற்ப; கண்ணுற்றோர்கள் இவர்களுள் யார் மாட்டு விசையை செல்வளோ? என்று ஐயுறத் தகுந்ததும், கண்ணுற்றோர் செவியுற்றோர் அஞ்சுகின்றதுமாகிய போர்புரிதல் கருத்தோ? இவைகளுள் நும் மனக்கிடைக்கை யாது என்றனர்.

தூது வேண்டல்.

அறமே செயலாகக்கொண்ட தருமரானவர் கிருஷ்ணரின் கேள்விகளை நன்கு ஆலோசித்தனர். துரியோதனாதியர் மீது கருணைகொண்டனர். "சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை யாந்துணையுங் காப்ப ரறிவுடையோர்" என்னும் பெருமொழியை மனத்துட் கொண்டனர். தமது முன்னிலையிலிருந்த கேசவ மூர்த்தியை விளித்து, எனது ஆன்மாவை யொத்த அறப்பெரு வள்ளியோய்! வரைக்காட்டிற் பெருங்காற்றடிப்பதினால் ஒன்றோடொன்று உரோஞ்சா நிற்கும். அனலெனு மண்ணனு மாங்கெழுவன. எழவே காடுமெரியும். அதுபோல ஒருகுலத்தில் ஒருகுடியிற் பிறந்த நாமும் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர்புரிவதிலும், உயிர் விடுகை நன்று. ஆதலால் புழுமுதற்கடவுளகிய தேவரீர் எல்லோர்மீதும் கொண்ட அன்புகாரணமாகவே எழுந்தருளுக. புன்மதியினனாகிய சுயோதனன் பேரவையை நண்ணுக. ஆங்கன் சகுனி முதலியோர்களும் பாங்கிருப்பர். அதுவே யேற்றசமயமாகும். அப்பொழுது அறந்தேடலானது மிக மிக அருமை யென்பதையும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவற்றினாற்றீமையே சப்பவிக்கும் என்பதையும் உணர்த்துதிர். வெண்மை யென்னுங் குணத்தினாலுண்டாகு மிழிதகைமையானது ஒண்மை யென்னுந் தம்மைத்தாமே மதிக்குந் தீங்கையு முண்டாக்கு மென்குதிர். "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் பேணாமை

பேதை தொழில்'' என்றபடி உத்தமராயினோர் நாணிக்கழிக்கற்பாலது பழிபாவங்களென்குதிர். நாடியறியற்பாலது கருமங்களிற் செய்வன தவிர்வன வென்குதிர். பேணவேண்டியது குடிப்பிறப்பு, கல்வி, உயர்வு, ஒழுக்கம் முதலியன வென்குதிர். குரவ! மேற்கூறிய அறநெறிகளை இனிது உணர்த்திய பின் இருதிற வேந்தர்களும் ஒருங்குகூடியிருந்து மருதநில வளப்பம் மாண்பு பெற்றோங்கும் குருநாட்டில், ஒத்த உரிமையும், ஒத்த நலனும், ஒத்தபருவமும் ஒருங்குறத்துய்த்து இனிதுவாழவேண்டி அடிகள் தூது செல்லுதிர் என்றனர்.

உசாவியறிதல்

இன்னவாகிய அறமொழிகளையெல்லாந் திருச் செவி சாத்தியருளிய பாண்டவ சகாயனும் பாண்டவரை விளித்து, நீங்கள் அரவக்கொடியோனுடன் சூதாட்டத்திற் றோற்றவந்நேரம் அவன் குறித்த விரத மொழி தவறாது கொடுங்கானஞ் சென்றீர்கள். ஏற்ற காலத்து அஞ்ஞாதவாதமுங் கழித்தீர்கள். அங்ஙனஞ் செயற்கருஞ் செய்கையைச் செய்த ஞான்றும் பாதகனாகிய சுயோதனன் உங்கள் அரசுரிமையைத் தருவதற்கு மறுத்தனன். அன்னவனுக்கு நல்லறிவுண்டாக்குதலே தகுதி. "ஊறுகாட்டினர்க்கல்லது லோபரீவரோ?'' என்பதன்றோ முதுமொழி. நீவிர் கண்டோர் கேட்டோர் அஞ்சத்தக்க ஒரு போர்முனையை நிறுவுதிர். அவனுடன் அவனுறவினருங் கூடி அப்போர்முனையில் நண்ணுவர். அதுசமயம் போர் தொடங்குதிர். மாற்றார் உயிரைக் கூற்றுணச் செய்குதிர். அங்ஙனஞ் செய்வீர்களேல், இராச்சிய பரிபாலனத்தை நெறிதவறாது நடத்துதல் திண்ணம் என்றனர்.

'எவ்வாறெனில் காமம், வெகுளி, மயக்கம் என்னுங் குற்றங்களொருசிறிதுமில்லாதவரும், காத்தலாகிய பெரிய தொழிலையுடையவருமாகிய எம் பெருந்தகையார்க்கு நூற்றுவர் தோற்பதும், ஐவர் வெல்வதும், எல்லாம் ஆடலின் வசத்ததேயாகும்.' கிருஷ்ணர் கூறியவற்றை வெகு கவனமாகக் கேட்ட தருமரானவர் அறிவுடைய மக்களுந் துணிவுடன் காக்க முடியாத தருமத்தைக் காத்து நிறுத்தும் வலியுடைமையினால், அழல்வாய் மெழுகுபோல மனம்பதைத்தனர். கிருஷ்ணரை முகம்நோக்கினர். அண்ணலே! வில்முதலாம் படைகளைப் பயிற்றிய வாசிரியர்களையும், எமதுரிமைச் சுற்றத்தினரையும், கன்னன் முதலாம் வீரர்களையும், யாங் கொல்லில் அழகோ? கொலையையே முதலாகக்கொண்டு கடல்சூழ் உலகம் முழுவதையும் யாமே தனியரசு புரிவதினும், வஞ்சக மனத்தராகிய எமது பெரிய தந்தையார் சஞ்சய முனியிடங் கூறி

விடுத்த கட்டுரைப்படி தவக்கோலந் தாங்கலே தகுதியாகும். அவ்வாறொழுகுங்கால் காட்டிலுள்ள சருகு, கனி, கிழங்கு முதலாம் பொருட்களையுண்டு எவ்வுயிர்க்குந் தீங்கின்றி இனிது வாழ்தலே நலம் என்றனர். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட் பேறல்ல பிற'' என்றபடி குடியுங் குலமுங் குணனு நலனு மொருங்கமைந்த தரும வேந்தரானவர் அளப்பரிய விழுப்பம் மிக்க இப்பேருரையைக் கூறினரெனில், மாயவன் மனப்பான்மை யெவ்வாறாகும். என்னே இவனது தண்ணளி! மேலும் மேலும் அறக்கருணையையே யறைகின்றனன் என்று கருதிப் பின்னுஞ் சூழ்ச்சிசெய்து, தருமரை நோக்கினர். மனமகிழ்வெய்தினர். யுதிஷ்டிர! நீர் உதித்த சத்திரியகுலத்துக்குரிய தொழில்களில் போரும் ஒன்றல்லவோ? அதற்குப் பயந்து காடுறைதலை விரும்புதல் அழகோ? நுங்குலத்தினர் தம்மையெதிர்த்தாரை அடக்கலேயன்றி யொறுக்கில் அரசு நிலைபெறுமோ? அதனால் ஆண்மையுமென்னாகும்? நீர் அதற்குப் பின்னிடில், தீரா வசையொன்று உண்டாகுமன்றோ? இன்னும் முன்கூறிய வன்சினமும் பொய்க்குமே என்றனர். இதனைக்கேட்ட தருமர், மனம்வருந்தினர். சிறிதுநேரம் ஆலோசித்தனர். என்னே!! விதியின் வலிமை. யாம் எவ்வளவு தருமநெறியுன்னினும் முன்னிற்பது ஊழே! "ஊழையு முப்பக்கங்காண்ப ருலைவின்றித் தாழாதுஞற்றுபவர்'' என்பதன்றோ பிரமாணம். இதற்கு நேர்மாறாகவே "ஊழ்வினையுருத்து வந்தூட்டுமென்பதும்'' என்றும் ஒன்றுண்டோ? இன்னும் பலப்பல ஆலோசிப்பதிற் பயனென்னை? எப்படியுங் கிருஷ்ணரைத் தூதனுப்புதலே தகுதி என்று நிச்சயித்துத் தம்முன்னிலையிலிருந்த பெரியோரை முகம்நோக்கினர். பூபாரந்தீர்க்கும் புண்ணியனே! தேவரீர் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யவன்றோ இவ்வடிவமெடுத்துளீர்! மாமனாகிய கஞ்சனானவன் அனுப்பிய குவலாயபீடமென்னும் யானையையும் கொன்றீர்! பத்திரனையுங் கொன்றீர்! இன்னும் எத்தனை திருவிளையாடல்களைச் செய்ய நிச்சயித்துளீரோ? என்பதை அறியுமாற்றல் எமக்கே இல்லை! சுவாமி! இன்னுங் காலந் தாழ்த்தல் கூடாது. தூது சென்று அரவக் கொடியோன் அவைக்களம் நண்ணுதிர். இருதிறத்து வேந்தர்களும் என்றும் இன்புற்றிருக்கத்தக்கதாய பாகத்தையே முதன்மையாக வேண்டுதிர். அதனை மறுப்பனேல், ஐந்து ஊர் வேண்டுதல் தக்கது. அதுவுங் கூடாதெனின், ஐந்து வீடெனினும் பெறுக. அதனையும் மறுக்கில், அதிக துயரை உண்டாக்கும் போர்த்தொழிலையே பெற்றுத் திரும்புதிர் என்றார். இவற்றையெல்லாங் கேட்டுப் பக்கலில் நின்ற வீராதிவீரனாகிய வீமசேனனானவன் கோபமென்னுங் கொடுங்கனல் கொந்தளிப்ப

எழுந்தான். வசுதேவனை வணங்கினான். பெரியோய்! இம்மாயிரு ஞாலமெல்லாம் ஒருங்குபூக்கும் உந்திக் கமலரே! அடியேன் கூறுவனவற்றைத் திருச்செவி சாத்தியருளுதிர். முன்னும் பாதகனாகிய துரியோதனன், எங்கட்குச் செய்த பலப்பல தீங்குகளை அவ்வப்போது காத்த கருணையும் நும்மதே. பிறர்க்கின்னல் விளையாப் பெருந்தகையாகும் எம் முன்தோன்றலானவர் சொல்லும் வலியிழந்த புன்மொழிகட்கு என்செய்வேம் எனவிரங்கித் தருமரை முன்னிலையாக்கினான். குருகுலந் தழைக்கவந்த கொற்றவ! சூதாட்டத்தின்யாம் தோற்ற அச்சமயம் எம் சமுகத்திலேயே மானபங்கமடைந்த பாஞ்சாலியானவள் முறையிட்டபொழுதும் கொடியிடையாய் அஞ்சன்மின்! எனத் தேற்றினீர். அதுகாரணமாக நமக்கேயன்றி நாம் பிறந்த மரபிற்கும் இவ்வுலகுள்ளளவும் நீங்காத வசையை நிறுவினோம். கடுஞ்சுரம நீங்கி அஞ்ஞாத வாசமுங் கழித்தேம். இனியேனும் மாற்றாரை வெல்லலைக்குறித்துப் போர் தொடங்கில், தருமநெறி பேசலழகோ? ஐயையோ! அரவுயர்த்தோன் எதிர்மறையாகச் செய்த தீமையிலும், முரசுயர்த்தோய்! உமது உடன்பாடாகிய தீமை சாலப்பெரியது. எந்தையே! பருந்தைத் தொடர்ந்த நிழலைப்போன்று உம்மையே பின்தொடரும் எங்களையும் வனவாசஞ் செய்யவிடுத்த கண்கெட்டவன் மகன் ஆளும் முழு உலகத்தையும் நீரே ஒரு குடைக்கீழ் ஆள, இன்றே தருகுவன். நூற்றுவரை ஒருங்குகூட்டி வானுலகேற்றுவேன் என்று வீரமொழி கூறியபின், கிருஷ்ணரை முகம்நோக்கிச் சுவாமீ! எமது தமையனாரானவர் கொடிய போரையும், பாஞ்சாலியின் கூந்தலையும், தம்பிமார் முன்கூறிய சபதத்தையும் ஓரேவினை முடிபுகொண்டு முடித்தனர். இதுமட்டோ? கடவுளாகிய சிவபெருமானும் நீருமறியப் பண்டுதொட்டுள்ள எங்குலப் பெருமையையும் முடித்தார். ஈது ஆண்மையோ! அறனோ! துரியோதனன், கன்னன் முதலாம் வீரர்கள் எதிர்ப்படும் சமர்க்களத்தில் அவர்கள் உடலங்களை இவ்விரு துண்டுகளாக்கியபின் அரசுரிமை பெறுதலன்றி, அண்ணர் கூறிய அறவுரையும் அரசாளுமோ? தூது சென்று இரப்பதும் ஆண்மையோ வென்றனன்.

இதனைக் கேட்ட தருமர் கையமர்த்தி என்றும் வீரவாழ்க்கையையே விரும்பி மனங்கழிக்குந் தம்பியே! "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை" என்பதன்றோ முதுமொழி! ஒருமரபில், ஒரு குடியில், எம்மோடுடன் பிறந்தாருடன் நிலையற்ற இராச்சியத்திற்காகப் பொருது இருதிறத்தேமும் மாய்வதேயன்றி நலனுமுண்டோ? யாமனைவரும் ஒருங்குகூடி வாழ்தலன்றோ வின்பம் பயக்கும். இளவலே! அந்நாளில் எமது தம்பிமாராகும்

நூற்றுவரும் அறியற்பாலனவற்றை அறியாமையினாலே கூறியனவெல்லாம் கேட்போரால் அவமதிக்கத்தக்கதன்றோ? பிறரால் வந்தெய்துவதன்றோ அவமானம். கையானது கண்மலரிற்படின், அக்கையையுடனே வெட்டியெறிபவர்களும் உளரோ? என்று இகழ்கடிந்தபுகழே ஆபரணமாகிய தருமர் கூறினார். இதனைக்கேட்ட வீமனுந் தமையனை நோக்கினன். அண்ணாவே! நீர் துளபமணி மார்பனும், தேவர்க்கும் அரியவரும், முனிவர்களும், நான்மறைகளும் இன்னுந் தேடிக்காணாத பெருமையையும் உடைய நாராயணமூர்த்தியை மென்பதந் நோவத்தூதனுப்பல் நன்றன்று. இவரோ சுத்த சாத்விக மூர்த்தி. அவனோ காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கட்டும் தாயகமாயுள்ளவன். இன்னும் அழுக்காறனது ஊற்றெடுப்பதற்கு உயர்ந்தமலையனைய மனநிலையுடையான். இன்னாச் சொல்லுண்டாவதற்கு வேறுமிடமுண்டோவெனில் இன்னாது என்பான். ஆதலால் யாம் அரசாள்தல் காரணமாகப் பெரியோரைப் பிழைபடுத்தல் அழகன்று. தங்களிளவலாகிய தமியேனை விடுத்தலேநலம். என்கையிலுள்ள பெரிய தண்டாயுதத்தால், என்புயவலியும், இந்திரகுமாரன காண்டீபவலியும், நகுல சகாதேவர்களின் போர்வலியும், குறித்த நாராயண மூர்த்தியானவர் எமக்குறுதுணையாகிய பெருமையையும், திரௌபதி விரித்த கூந்தலின் சுருளையும், ஒருங்குகூட்டி முடித்துக் காட்டுவன். இத்தகைப் பெருமையானது கையில் நெல்லிபோலிருப்பக் கொடியவன் குடைக்கீழ் உயிர்வாழ்தலும் நலனோ? என்று கோபாவேசத்துடன் கூறக்கேட்ட நீலமேனியனும் அருளுமன்பும் மீதூரநோக்கி வலிமிகுத்த வீரனே! உயர்குலத்திற் பிறந்து தலைசிறந்து விளங்கும் அறிஞர்கள் நீதியையே கூறினும், மூத்தோன் கூற்றை மறக்கமாட்டார்கள் அவ்வண்ணமே நீயும் வெஞ்சினந் தணிக வென்றனர்.

இஃதிவ்வாறாக, மேகவாகனன் மதலையெழுந்து கண்ணனையும் தருமரையும் முறையாக வணங்கிப் பெரியோர்களே! கொடியோனாகிய சுயோதனன் எமக்குப் பற்பல துன்பங்களையுண்டாக்கினான். யாமும் குலப்பெருமையையும் தருமத்தையுங் கருதிப் பொறுத்தேம். இனிமேலும் பொறுமையையே நாட்டுகில் பகைமைகாரணமாக வந்த சபதங்கள் கைகூடாது. பாஞ்சாலியும் அவிழ்த்த கூந்தலை முடியாள. அவ்வாறாயின் எங்கள் நிலைமைதானென்னாகும். பெருமையிற் சிறந்த அரசரேறே! என் காண்டீபத்திலிருந்து புறப்படும் அம்புகளானவை தேவர்களெனினும், அசுரர்களெனினும் கொல்வது நிட்சயம். இவ்வலிமையை நன்குணர்ந்தும், முனிவர்கட்குங் காத்தற்றொழிற்குட்பட்ட அதிஸ்டான தேவர்களாகிய சங்கரீடணன், பிரத்தியும

ணன், அனரத்தன் என்னும் மூவர்க்கும் முதல்வராகிய முழுமுதல்வரைத் தீயோனிடந் தூதனுப்பி யாமே எமது நாட்டை யிரப்பது அழகோ? உத்தமக்கற்புடைய பாஞ்சாலியை, வேத்தவையில் நிறுத்திக் கீழ்மக்களுந் நாணத்தகுந்த இழி தொழிலையும் முழுமகன் செய்வித்த சமயத்தும், அவள் விம்மியன்றோ நின்றனள். நெடியோய்! கரியோய்! நிருமலா! எனவலறியதை யாங்கள் கண்ணாரக் கண்டனமே. இன்னும் நடைப்பிணங்கள் போன்று வாழாவிருப்பின் என்னாதும். என்மனக் கருத்தின்படி கிருஷ்ணர் தூது சென்று அண்ணர் கூறியவைகள் பலவற்றைக்கூறினும் "அறிவில்லார்க்குரைப்பவர் அவரிலும் பேதையர்" என்றபடி அவனோகேளான். உவர் நிலத்திட்டநெல் நற்பயனளிக்காததுபோலவும், பாம்புக்கு அமிழ்த மூட்டினும் நஞ்சையே கக்குவதுபோலவும் ஆவதே முடிபு எனக்கூறிய காண்டீபனைப் பதுமநாபன் கையமர்த்தினன். அச்சமயம் நகுலனெழுந்து கிருஷ்ணரையும் தருமரையும் வணங்கிக் கூறுகின்றான். பெரியோர்களே! வலிமிகுந்த ஐவரும் முன்னிழந்துபோன இராச்சியத்தைத் திரும்பப் பெறுவார்களென்ற உறுதிமொழியும் பொய்த்ததோ? அரசதருமத்திலே ஆண்மையென்பதும் மிக மதிக்கப்படத்தக்கதன்றோ? "தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு" என்னும் பொய்யாமொழிக்கு என் செய்வோம். எமது, பெருமைவாய்ந்த கிருஷ்ணரானவர், நந்தகோபன் திருமகனாயிருப்பினும், இந்திரனேவலினாலே கல் மழை பொழிந்தஞான்று, கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்துத்தம்மைச் சரண்புக்க பசுநிரைகளைக் காத்தவரன்றோ? இவர்தான் தூதுபோகினுமென்! துரியோதனனுமரசுரிமை கொடுப்பனோ? ஆகையாலிச் சம்புத்தீவத்திலுள்ள மற்றைய அரசர்கள் நகையாடாமற் போர்க்கெழுவதே தகுதி. அதுவன்றோ அவன் படைவலியும் எம்படைவலியும் அறியத்தகுந்த சமயம். முன்னொருகாலந் தேவரம்பையாகிய உருப்பசியை அவுணர்கள் கவர்ந்து செல்லும்போது அவள் கணவனாகிய இந்திரனுக்குதவிபுரிந்து வலிமையினாற் சிறைமீட்டவரும் எங்குல முதல்வராகிய புரூரவாவன்றோ? இன்னும் பாஞ்சாலிக்கு மானபங்கமுண்டாக்கியமை பொறுக்குந் தரத்ததோ? பன்னிருவருடம் நாமனைவரும் பட்டபாட்டை யுன்னினன்றோ அத்தகைய மூர்க்கன் மற்றொருவருடைய நல்லுபதேசத்திற்குடன்படல் எங்ஙனம் என்றான். இதுகேட்ட நாராயணன் கையமர்த்தி யருகிருந்த சகாதேவனைப்பார்த்து அறிவிற்சிறந்த உத்தமனே! எல்லார் மனப்பான்மையுமறிந்தனம். பெரியோர் புகழும் மெய்யுணர்ச்சியும் வீரமுமுடைய உனது கருத்துயாதாகும் என்றனர்.

சகாதேவன் மனமொழிமெய்களால் வணங்கி ஆதிமூர்த்தியே! தேவரீர் மனப்பான்மைக்கிசையத் தூதுபோகிலென், ஒழியிலென், நூற்றுவர் தலைவன் அரசு கொடுப்பிலென், தடுப்பிலென், திரௌபதி கூந்தல் முடிப்பிலென், விடுப்பிலென் இப்பாரதமானது ஈற்றிலென்னவாகுமென்பதை அடியேனாற் சொல்லுந்தரத்ததோ? என்று பின்னுங்கூறுவான். வண்டுளாய் முடியோனே! பூதனையென்பவளை முலைப்பாலுடன் உயிரையுமுண்டனை. மருதமரமும் சகடமும் விழவுதைத்தாய்! முல்லை நிலத்தார் மகிழ்வுடன் வளர்த்த நெடுமாலே! தேவரீரின் திருவிளையாடல் முழுவதையும் ஐவரில் யானேயறிவேன். ஆதலின் திருவுள்ளக்கருத்து எதுவோ? அதுபோலாகட்டும் என்றான். திருமாலுந் திகைத்தனர். என்னே!! இவன் மனப்பான்மை! பகையையே சாதிக்கின்ற மற்றையோர்களின் கூற்றுக்கு மாறாக இவன் கூறுகின்றானே என்று கருதி அவனையழைத்து ஓர் மறைவிடத்திற்கொண்டு சென்று வேந்தே! இப்பாரத யுத்தமானது நடவாது தடுப்பதற்குரிய வுபாயம் என்னையெனலும், தொழுதகை தலைமேற்கொண்ட சகாதேவனானவன், கூறுகின்றான். ஐய! இப்பாரதப் போரையுண்டாக்கி எல்லோரையுமழித்துப் பூபாரந் தீர்க்கவன்றோ இவ்வடிவமெடுத்துளீர். ஆகையாலிதைத் தடுப்பதற்குத் தேவரீருக்கு மிக மேலாகிய வலிமையுண்டு. இன்னும் கன்னன் அரசுரிமை பெறப் பார்த்தனைக்கொன்று, பாஞ்சாலியின் குடும்யை அறுத்து விலங்கிட்டு, மூவரில் ஒருவராகிய உம்மையும் நான் கட்டுவனேல், பாரதப் போர் நிகழா என்ற சொல் முடியுமுன் மாயவனும் உவகைபூத்த உள்ளத்துடன் அன்பனே! முற்கூறியன ஒருவாறு முடியினும் என்னை உன்னால் எப்படிக் கட்டமுடியும் என்றனர். அரசனும் குரவ! உமது திருவுருவப் பெருமையை நீரே உணரமாட்டீர். ஒவ்வோர் திருவுருவங்களையுங் காட்டுகில் யானும்மை அசையாமற் கட்டுவேனென்றான். பாண்டவசகாயனும் அன்பில் மேம்பட்ட அடியானது மனவலிமையை உணருமாறு கட்டுதி என்று தமது பதினாறாயிரம் வடிவத்தையுங் காட்டினர். அன்பனுமொவ்வொன்றாக;

"நீ தேவனென்றறிந்து நெஞ்சாற் றனைக் கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயாய் முன்னின்றான்
பூதேவருங் கனகப் பூங்கா நிழல்வைகு
மாதேவருந் தேடிக்காணா மலரடியோ(ன்) னைக் கட்டினன்.

மாயனுங்கட்டுண்டான். தூயோனே! அன்பாகிய கயிற்றினாலென்னைப் பிணித்தமை மிக நன்று. இனி விடுக என்றனர்.

சகாதேவனும் ஆருயிர்த்தலைவரே இக்கொடிய பாரதப்போரில் வந்தடைந்த ஐவரையும் கடைக்கண் நோக்கியருளுதல் வேண்டுமென்றான். மாயனுமுடன்பட்டு அன்பனே! எங்களிருவருக்குமிடையில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியானது பிறரெவருமறியவொண்ணாதது என்றார். இருவரும் பாண்டவரவையம் நண்ணினர். ஆங்கு மனமுங் குழலுமொருங்குசோர விழித்துநின்ற பாஞ்சாலியைக் கிருஷ்ணர் விளித்தனர். மங்கை நல்லாய்! இளையவனுந்தூது செல்லலே தக்கதென்றனன். தருமன் கருத்துமிதுவாகும். ஒருகுடியிற் பிறந்தோர் ஒருவரையொருவர் எதிர்த்துப்போர் புரிதலழகன்று. ஒன்று கூடிவாழ்தலே மகிமை. "பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணேயுள்" என்பதன்றோ முதுமொழி. உன் கருத்துயாதாகும் என்றனர். இதனைக்கேட்ட பாஞ்சாலியும் ஏறுகேட்ட அரவமாயினள். கிருஷ்ணரின் மலர்ப்பதங்களை விழுந்து கும்பிட்டாள். வரியானது சென்று அழகு வேண்டத்தக்க வனப்புமிக்க கண்கள் நீரருகநின்றாள். மலர்மணஞ் சிறிதுமறியாத கூந்தலுஞ் சோர்ந்தது. சுவாமீ! பிரகலாதனையாட்கொளற்காகத் தூணிடத்தே நரசிம்மமாகத் தோன்றினீர்! முதலைவாயிலகப்பட்ட யானையொன்று ஆதிமூலமேயென்று கூப்பிட நீலமலையென வாங்கெழுந்தருளினீர்! அண்ணலே! குருடன் மகனாகிய துச்சாதனன் என் கூந்தலைப் பிடித்திழுத்து, வேந்தவையிலிட்டுச் சீலையையும் உரிந்ததைப் பாண்டவருங்கண்டு கொன்னே காலம் போக்குகின்றனர். அச்சமயத்தும் அடியாளது மானத்தைக் காத்தருளியதுந் தேவரீரே. இவர்கள் அக்கொடியவனிடம் ஐந்து ஊர்களை இரந்து வாங்கிக்கொண்டு, சமாதானமுற்றிருப்பின், அடியாள் விரித்த கூந்தல் முடிப்பதெக்காலம் என்று புலம்பாநிற்ப, அயலில் நின்ற சாத்தகியானவன் வலியோனாகிய வீமன் கையிற் றண்டும், அருச்சுனன் கையிற் காண்டீபமும், இவள் கூந்தலில் மாசுமிருப்ப, இன்னும் பகைவரையிரத்தல் தகுதியோ? சராசந்தனுக்குப்பயந்து துவாரகையைக் கைவிட்ட கிருஷ்ணரினதுந் தருமரதும் மேன்மையோ இவ்வாறிரத்தல் என்றான். இச்செய்திகளையெல்லா மோதாதுணர்ந்த கிருஷ்ணர் திரௌபதியை முன்னிலையாக்கி அரசியே! யான் தூது சென்று திரும்பியபின் உன் கூந்தலை நானே முடிப்பேன். பகைவரின் அந்தப்புரத்து மறைந்து இருக்கும் பன்னியர்களது மலர்க்கூந்தல்களன்றோ விரிந்துவிளங்கும். மங்கை நல்லாய்! பகைவர்களினுடலமாகிய வயலை உழுகின்ற வாட்படையென்னுங் கொழுவையுடைய அபிமன்னுவானவன் நீதி தவறியொழுகும் மாற்றார்குலத்தையும் நின்கூந்தலையும் முடியாது விடுவனோ? என்று தமதுகைமலராற் றிரௌபதியின் கண்மலரைத்துடைத்து அருட்கண் சாத்தினர்.

"துன்று பிணியோர் துறந்தோ ரடங்காதோர்
கன்று சினமனத்தோர் கல்லா தவரிளையோ
ரொன்று முறைமை யுணரா தவர் மகளி
ரென்று மிவர் மந்தணத்தி னெய்தப் பெறாதாரே"

எனத்தருமர் கூறி மறுபடியும் எழுந்தருளும்படி வேண்டினர். கிருஷ்ணருமெழுந்தனர். தேரிலேறினர். சங்கமியம்பின. சதுரங்க சேனையுஞ்சூழ்ந்தன. இயற்கை திரிந்துமாறுகின்ற பாலைநிலத்தைக் கடந்தனர். முல்லைநிலத்து யாறுகளையும், மலைகளையுங்கண்டார். மருதநிலத்து மள்ளர் மகளிர்கள் பாடும் வள்ளைப்பாட்டொலியையுங் கடந்தார். விரைந்துசென்றனர். அழகிய கோபுரங்களும் மதில்களும் உயர்ந்துவிளங்கும் துரியோதனனது அரசமாபுரத்தை யண்மினர். கண்கொளாச் சிறப்பைக்கண்டனர்.

தூதுவர்கள் கண்ணனினழகிய செலவைக்கண்டனர். மன்னவைபுக்குவணங்கி மேவலர்க்கரியே! முன்னோர் ஞான்று அனுமானின்வாலினால் இலங்கா தகனமுண்டாக்குவித்த கிருஷ்ணர் இன்று பாண்டவதூதனாகி எல்லைப்புறத்தை நண்ணினர் என்றனர். துரியோதனன் மகிழ்ந்து கேட்டான். அரசமுறையை உன்னினான். மங்கலவணிகளை வேண்டியவிடங்களிலமைப்பித்தான். நாற்படை முழக்குடன் வருகின்ற பெரியாரை எதிர்கொளச் செல்லுஞ்சமயத்துச் சகுனியுமறிந்தனன். என்னே!! பாவம், தனது துர்மதியையன்றோ ஊட்டினன். "வினைவிளை காலமாதலின் யாவதுஞ் சினையலர் வேம்பன்றேரானாகி" என்று பிற்றைஞான்றுப்புலவருங் கூறினரே. ஊழ்வலியாரைத்தான் விட்டது. அரசர்க்கரசனே! உனது மனநிலைமைக்கு முழுவதும் மாறாகிய ஒரு தூதுவனை மரியாதையுடன் எதிர்கொள்ளின், அதுயாதாகும். ஆண்மையன்றோ கெடும் என்றனன். துரியோதனனும் அதுதக்கதென்றான். இறுமாப்புடன் அரியணையிலிருந்தான். "நாணாமை நாடாமை நாரின்மையாதொன்றும் பேணாமை பேதைதொழில்" என்ற முதுமொழியை மெய்ப்பித்தான். அச்சமயம் வீட்டுமன், துரோணன், அசுவத்தாமன், விதுரன், கிருபன் முதலிய வரசர்களும், மற்றைய சிற்றரசர்களும், இரண்டு யோசனை தூரவெல்லையில் கிருஷ்ணமூர்த்தியைச் சென்றுவணங்கினர். கிருபையும் பெற்றனர். கிருஷ்ணரும் பட்டினத்திற்புகுந்து விதுரனது திருமகள்வாசப் பெருமனையை நண்ணி முற்றமுடிந்த மணித்தவிசில் வீற்றிருந்தனர். விதுரனும் மனம்மகிழ்ந்தான். நாரணன் என்னுந் தெய்வப்பெருமையைப் பலவாறுன்னினான். உவகைக் கடலிலமிழ்ந்தினான்.

"முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ

சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி யென்றான்."

பின் கிருஷ்ணரும் மற்றையோர்களும் மாலைக்கடனைச்செவ்விதாக முடித்தனர். விதுரனளிக்கப்பெற்ற அறுசுவை தொடர்ந்த நால்வகையுண்டிகளையும் மகிழ்வுடனுண்டார்கள். பரிமளதாம்பூலமருந்தினர். அனந்த சயன மெனும்படியாகிய ஒருபடுக்கையை விதுரனுதவினன். நாராயணனுந் துயின்றான். மற்றையோர்களும் ஏற்ற வேற்ற படுக்கைகளிலுறங்கினர். மறுநாட்காலை நித்திரைவிட்டெழுந்து அனுட்டானங்களைச் செய்துமுடித்துத் துரியோதனனது அத்தாணிமண்டபத்தை நோக்கினர். அரசனும், முப்பத்தாறுயிரம் அரசர்களும், பதினொரு அக்குரோணி சேனைகளும், வீட்டுமன், துரோணன் முதலியோர் புடைசூழச் சந்திரனை விண்மீன்கள் சூழ்ந்துவிளங்கிய தன்மைபோன்று மணியாசனத்திருந்தான். இளங்கன்னியர்கள் எண்வகை மங்கலங்களையும் ஏந்தினர். அந்தணர்களும், வித்துவான்களும் அணிபெறவிருந்தனர். கிருஷ்ணருந் தோன்றினர். அரசனுமங்குள்ளார்களை நோக்கிப் பாண்டவ சகாயனாகவருகின்றவிடையனை மதியாதீர்களென்றான். வீட்டுமன், துரோணன், அசுவத்தாமன், விதுரன் முதலியோர்கள் வணங்க, சகுனிமனமெரிய, எதிரிலுள்ளாரிட்ட பீடத்திருந்தருளினார். துரியோதனன் முகங்கொடாது கூறுகின்றான். ஐயா கோபாலரே! நீர் நேற்றுப்பகல் இப்பட்டினம் வந்து எனதுமனையிருக்க விதுரன்மனையை யடைந்த காரணம் என்னை என்றான். கிருஷ்ணர் புன்மகிழ்வுற்று அரசரேறே!

'என்னி னின்னிலொரு பேத மில்லையிது வென்னி னின்னிலது
வென்னினு, மின்னின் முன்னிலகு விறனெ டும்படை விதுரன் வந்
தெதிர் விளம்பினு, னுன்னி லின்னமுள தொன்றுபஞ்சவ ருரைக்க வந்த
தொரு தூதன்யா, னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன் வெறுக்க
வெண்ணுவது நீதியோ?"

என்று பின்னுஞ் சிலநீதிமொழிகளைக் கூறுகின்றார். அரசரேறே! சூட்சித்துணையாயிருந்து அரசரைக் கெடுப்பினும், குருமொழிமறுப்பினும் செய்ந்நன்றிமறப்பினும் ஒருவர்மனையிலுண்டவர்கள் பின்அவர்க்குமாறாகப் பொருவரேல் சூரியனுள்ளளவு காலமும் நிரயத்திலிருந்து வருந்துவார்கள் என்றனர். அரசனும் சிரித்தான். கோபாலரே! நீர் தூதாகவந்தகாரணம் யாதென்றான். அச்சமயம் "அன்புடைமையான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு" என்னும் பெருந்தகைமைகளொருங்கமைந்த தூதாகிய நாராயணனும், "நூலாரு ணூல்வல்லனாகுதல் வேலாருள் வென்றிவினையுரைப்பான் பண்பு" என்னும் பெருவனப்பமையக் கூறுகின்றார். குருகுலவேந்தே! நின் கிளைஞர்களாகிய பாண்டவர்கள் சூதுகாரணமாக இழந்துபோன அரசுரிமையைப் பின் பெறுங்காலமுங் கொன்னே கழிகின்றது. அச்சமயங் கூறிய உறுதிமொழிப்படி வனவாசமும், அஞ்ஞாதவாசமுங் கழித்தனர். ஆதலால், பெருமை விளங்க அரசு செலுத்துகின்ற இராசாதிராசனாகிய உமக்கு என்போல்வார் கூறுவது மிகையெனினும், உலகவழக்கத்திற்கு ஒக்கத் தூதுரைத்தல் நன்றென மதித்தேம். வேந்தே! இதுகாரணமாக என்மீது சினவற்க. அவர்களது தாயபாகத்தை நண்புரிமையுடன் கொடுத்தலே தகுதி. அங்ஙனமெனில் உமது சத்தியநெறியின் பெருமையும் யாவராலும் புகழ்ந்து பாராட்டப்பெறும் என்றனர். இதனைக்கேட்ட துரியோதனன் சீற்றம் மிக்கான். வாசுதேவனை விளித்தான். பாண்டவர்கள் சூது போரிற்றோற்ற ஞான்றன்றோ அரசுரிமையை இழந்தனர். இப்போது உமது சூழ்ச்சியினால் அதனையபகரிக்க நினைத்தல் மிகநன்றெனினும் நான் அவர்களினும் வலிகுறைந்தவனன்றோ? அன்னவர்கள் காடுறைதலே தகுதி! நீர்தான் வெறுப்பினும், இங்கேயுள்ள அரசர்கள் திகைப்பினும், எனது சத்தியவாக்குத் தவறியமையையறிந்து விண்ணவர் சிரிப்பினும், பாண்டவர் தான் படையெடுப்பினும் ஒரு ஈ இருக்குமிடமேனும், அவர்கட்குக் கொடேன் என்னும் மொழியை ஏறனைய அரவத்துடன் கூறினன். இதனைக்கேட்ட திருமால் அரசரேறே! அவர்கள் பாகத்தைக் கொடாவிடின், அரைவாசியையாவது கொடுப்பதன்றோவழகு எனலும், பாதகன் அதனையும்மறுக்க, ஐந்துவீடேனுங் கொடுக்கச்சம்மதமில்லையோவென்றனர். அரசனும புன்னகை செய்தான். கோபாலரே! பாண்டவர்கட்கு அரசிற்பாதிதான் கொடுக்கவேண்டுமோ? அன்றி ஐந்து நகரெனினும், ஐந்து ஊரெனினும் எற்றிற்கு! நான் காட்டைக்கொடுப்ப அகமகிழ்ந்து பன்னிருவருடகாலங் கழித்தனர். பின் நாட்டிலும் ஓராண்டு மறைந்துதிரிந்தனர். அவர்கட்கு ஒரு வீடுதான் கொடுப்பினும் மெச்சுவார்கள்தானே! ஆதலால் நீர் அவர்கட்காகக் கேட்பதை விடுதலன்றோ நலம் என்றான். அதனைக்கேட்ட கிருஷ்ணரும் தமக்குண்டாகிய உவகையை அரசனுக்கு மறைத்தனர். பிறர்க்குத் தலைசாயாப் பெருந்தகையே! தந்தையாகிய சந்தனுவானவர், கொண்ட காதலினால் சிறியதாயினது மைந்தர்களிருவருக்கு மிந்நிலவுரிமையையும், அரசுரிமையையும் கொடுத்த வீட்டுமரும் நுமது மரபினரே. அஃதங்ஙனமாகப் பழைய உரிமைப்பாட்டை யுடையபாண்டவர்களுக்கு உரியபாகமானது ஒருவாறு தவறினும் ஐந்து பட்டினங்களையேனு முதவுவதன்றோ பெருமை! அதனையும் மறுப்பின் உமது அரசியல்தான் என்னாகும். கொற்றவ! நீங்களி

ருதிறத்தீருமுதித்த மரபும் ஒன்றே! அதற்கிணங்கவன்றோ அரசுபுரிவதுஅழகு. உரிமையுஞ் சமத்துவமானது தானே! “நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக் குற்றமுமாங்கே தரும்.” என்னுங் குறிப்பமையப் பரிகாசமாகக் கூறினர். துரியோதனனுங் கிருஷ்ணரின் கூற்றை நன்குணர்ந்தான். கண்கள் சிவந்தன. கோபமாகிய கடலும் பொங்கியெழச் சிரித்தான். தூதரை முகம் நோக்கினன். ஐய! இவ்வுலகானது அரவினுக்கொருதலைப்பாரமன்றோ? இதனை யாளவேண்டியவர்களும் வீரர்களன்றோ? மிக இலகுவாகியமுறையிற்றாயத் தொடர்பினாற் பெறுவது மிக அருமையேயாகும். யானோ மனமுவந்து கொடுக்க மாட்டேன். போர்முகத்துப் பெறுதலேதகுதி என்று கூறிய அரசனைக் கிருஷ்ணர் பின்னும் விளித்து; அரசே! “கூழுங் குடியு மொருங்கிழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யுமரசு” என்பது பெரியோர்வாக்கு. நீயுங் குடியுடன கெடுதற்கோ வெற்றாரவார மொழிகளைக் கூறுகின்றனை? நண்பும் நொதுமலும் பொருந்தி வழிவழியாகக் கூடிவாழ்வெய்துதலை அவாவென்னும் பாவியானவன் தடுக்கின்றனனோ? அங்ஙனமாயின் இக்குருசேத்திரத்திற்றானே பாண்டுமைந்தர்களுடன் போர்புரிதற்காயத்தமென்று கைகொடுமென்றனர். துரியோதனனும் நகைத்தான். பக்கலிலுள்ள தூணிலறைந்தான். ஏ! புன்மதி நிரம்பிய தூதனே! நீயோ இழிந்த பிறப்பினன். கோக்காத்தலைத் தொழிலாகக் கொண்ட இடையர்களுடன் ஆயர்பாடியிலலைந்தனை! அன்றி ஆய்ச்சியர்களின் வெண்ணையையும் திருடினை! அதுகாரணமாக உரலிலுங் கட்டுண்டனை! இவ்விழி தகைமைகளையெல்லாம் மறந்தனை! ஆகையினாற்றானே அரசர்களின் உயர்ச்சிபெற்ற குருகுல வேந்தர்களின் மெய்ம்மையையும், யாதொருகுறைவுமில்லாத எனது பராக்கிரமத்தையுமறியாது அரசசபையில் இவ்விழிமொழிகளைக் கூறினை! நன்று!! நன்று!! மிகநன்று!! உனது சூழ்சியன்றோ சூழ்ச்சி! ஐவர் சண்டை செய்யவரின் யான் சரண்புகுவேனோ? இயல்பாகவே சிங்க சர்ச்சனைக்குப்பயந்து உயிர்வாழும் மதயானைகள் பல கூடிப்போருக்கெழின், சிங்கமும் சரண்புகுமோ? அதுபோலவே பாண்டவர்க்குயான் அஞ்சுவனென்றோ நீ கொடுக்கச் சொன்னனை! இதுவென்ன விந்தை! வெகு அதிசயமாகவிருக்கின்றதே! பாண்டவர்கள் சூதாட்டத்திற்றோற்ற சமயம் அவர்கள் பட்டத்தரசியாகும் பாஞ்சாலியைக் குடுமிபற்றி யீர்த்ததும், துகிலுரிந்ததும் அவர்கள் முன்னிலையிலோ? மறைவிலோ? இதனையுடனிருந்து கண்டவர்களுள் நீயும் ஒருவனோ? அன்றோ? துளிநீரும், இடுசோறும் மகிழ்ந்துண்டுயிர்வாழும் பாவிகளும் புயவலி கூறுகின்றனர்களோ? இவர்களுக்குத் தாயரும் இருவர்களாம்! தந்தையும் ஐவராம்! பெண்ணும் பாஞ்

சாலி ஒருத்திதானும்! என்னையுந் தங்களிலொருவனாக மதித்து இச்சகம் பேசுகின்றார்களாம்! இதுவன்றோ அதிசயம்! என்று பற்பல கொடுமொழிகளைக் கூறினன். கிருஷ்ணருங்கேட்டனர். மனமகிழ்பூத்தனர். பாண்டவர்கருத்து நலனெய்துமென மதித்தனர். “கற்றுக் கணஞ்சான்செலச் சொல்லிக் காலத்தாற்றக் கதறிவதாந்தூது” என்பது தமிழ் மறையாதலின், நீதிநூற்கல்வியையுங் காலத்தாற் பிறிதொன்றாக முடிக்கவேண்டுதலின், தக்கதறிதலுமாகிய முற்றமுடிந்த இலக்கணங்களை யோதாதுணர்ந்தவர் இத்தூதராகையால் “உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு மின்னாச் சொனோற்பாரிற்பின்” என்றபடி துரியோதனனது கொடுஞ்சொல்லின வன்மையையறியாதவர் போன்று விதுரனது வீட்டிற்குத் திரும்பவும் சென்றனர்.

துரியோதனனுந் தனது பொங்கிய சினத்தைப் புன்மதிக்கிந்தனன். என்செய்வான். மற்றையவரசர்க்கு விதுரனைச் சுட்டிக் காட்டினன்.

“கரிந்து மாலைசருகாகவும்புதிய கமல வாண்முகம் வெயர்க்கவுந்
திருந்து கண்ணிணைசி வக்கவுங்கொடிய செய்ய வாயிதழ் துடிக்கவு,
மிருந்த பேரவையி னெடிதுயிர்த்திடுமி ராசரா சனவ னுக்கிவன்,
விருந்து செய்தவற வென்கொ லென்றரச ரெதிர்வி துரனை விளம்புவான்”

வேந்தர்களே! யிவன்மதியிருந்தவாறென்னை? பகைவர்களரசை வலிமையினாற் கவரட்டும் என்பதோ? இராசாதிராசனாகிய எனது உண்டியை மறுத்த தூதனுக்கு, மனம்மகிழத் தனதுண்டியை ஊட்டினன். என் தந்தையுடன கூடிப்பிறந்ததையும் மறந்தான். இன்றளவும் என் சோற்றையே உண்கிறான். என்மீது காட்டுமன்புக்குப் பதிலாகத் தீமையையே செய்கிறான். எனது பகைவருள் இவனன்றோ உட்பகைவன். இதனையன்றோ பெரியோர் நச்சுப்பகை என்றனர். “புறநட்டகம் வேர்ப்பார் நச்சுப்பகையை வெளியிட்டு வேருதல்வேண்டும்.” இவன் பொதுமகளிரையன்றோ நிகர்க்கின்றான். பொதுமகளின் புதல்வனாதலின், இன்று அத்தூதனுடன் உறவுகொண்டனன். என்னேயதிசயம்! இவன் மடமையை என்சொல்வேம். அன்னையின் குணத்தையே இவனுங் கொண்டனன் என்றான். விதுரனும் இச்சங்கதியை நன்கு அறிந்தான். கோபமும் பொங்கியெழுந்தது. துரியோதனனை முன்னிலைப்படுத்தினான். அரசனே! உன் மதி மிக நன்று. “தேரான்றெளிவுந் தெளிந்தான் கணையுறவுந் தீராவிடும்பை தரும்” என்பதை நீயின்னுமுணராமையே ஆச்சரியம். நீ வசைகூறிய நாவிலிருந்து இரத்தமொழுகவும், மற்றைய அங்கங்களெல்லாம்

நடுநடுங்கவும், உன் சிரத்தை எடுப்பதன்றோ முறையாகும். அதனையும் பொறுத்தனம். குருகுலத்துள்ளானொருவன் தனது மகனின் உயிரையுண்டானென்று யாவரும் எள்ளி நகையாடுவார்களென்றே தவிர்த்தேன். எந்த வெந்தவுலகமும் புகழுங் கிருஷ்ணரன்றோ? பாண்டவ தூதராய் வந்துளார் யான் கருதியது அவரது பழைமையையும் பெருமையையுமே! அந்த உண்மையை நீ அறியாய்! என்னையும் நகைத்தாய்! நான் உனக்கு மாறாகிய செயலைச்செய்து தருமம், புகழ், ஆண்மை ஒருங்தடைய பாண்டவர்க்குதவி புரியின், முடியுடை வேந்தர்களு மென்னையிகழ்வார்களோ? நான் இரண்டு வாக்கு ஒருபோதுங் கூறேன். இனிவரும் போரிலொரு போதும் வில்லெடேன். என்செயலை நீ காணும்படி இதோ காட்டுகின்றேனென்றான். தனது வில்லை இருதுண்டுகளாக வெட்டினான். கண்ணுற்றார் அஞ்சினர். அரசர்கள் ஆச்சரியமுற்றனர். அந்தோ!! இந்த வில்லானது முன்னொருகாலம் சிவபெருமானாற் கொடுக்கப்பட்ட பினாகமுந் திருமாலினாற் கொடுக்கப்பெற்ற சாரங்கமுமல்லவோ! இனிமேல் வில்லாண்மை மிக்க காண்டீபன் வந்து எதிர்ப்பின், அவனுக்கு இணையாக வேறு வீரருமுண்டோவென அதிசயிப்பத் தனதில்லம்நோக்கினான். அச்சமயம் அறிவான் முதிர்ந்த பாட்டனாகிய வீட்டுமன் இச்செய்திகளைக் கண்ணுற்றனன். என்னேயிவன் மதியெனப் பலவாறு நொந்தனன். துரியோதனனை விளித்தனன். துன்மதி மைந்த! நீ விதுரனது வில்லினாற்றலையறியாய். பகையுற்றுழிச் சோனாமேகம்போன்று வருகின்ற அம்புகளையெல்லாந் தடுக்கத்தக்க வில்லாண்மை மிக்க வீரர்கள் விதுரனைப்போல் யாருளர்? அவனது வீரத்தையறியாது, கொன்னே குற்றங்கூறினையே. இவ்வாறாகிய தன்மையையுடைய நீ பகைவரை வெல்வது எங்ஙனம்? இவ்வருமையான அரசைப் பாண்டவர்களன்றோ ஆளப்போகின்றார்கள்! இராசாதிராசனென மதித்த நின்புகழ் முழுவதும் இன்றோடழிந்தன என்று அன்பு காரணமாகச் சில மொழிகளைக் கூறினான். துரியோதனனுங் கேட்டு மனங்கொதித்தான். வீட்டுமரை நோக்கினான். எனது பெரிய பிதாவே! வீரர்களினருமை போரிலன்றோ வறியலாகும். விதுரனன்றி வில்லாண்மைமிக்க வீரர்கள் வெறொருவருமில்லையோ? வலியிழந்த பாண்டவர்களை யெதிர்த்துச் சமர்புரிய அதிக தீரத்தன்மை வாய்ந்த வீரர்களும் வேண்டுமோ? அங்கநாட்டரசனாகிய கன்னனின் போர்வலியைத் தாங்களின்னுமறியவில்லைப்போலும். பாண்டவர்களெதிர்ப்பின் சேனாசமுகத்துடனழித்துப் பரணிபாடுவிக்கத்தக்க வீரனுமவனன்றோ? நீர் இவனோடிருந்து இவனாலூட்டியவமுதமுண்டு, உயிர்வாழுகின்றீர்! அவ்வாறாக, இவனை யாராவது பகைக்கின், அவர்

களது புகழைக் கூறுவது அழகாமோ? இவ்வுலகிலுள்ளவரசர்கள் தானொருங்கு கூடிவரினும் என்னோடு பொரவிடுதிர். கடவுளாகிய சிவபெருமானேயெனது அயபுக்கு அஞ்சுவரெனின்

"நீயிருக்கநெடு விற்கை யாசிரிய னவனிருக் கநிகரற்றவன்
சேயிருக்கவிறன் மன்ன ரிப்படிதி ரண்டிருக் கவெதிர் சென்றுநீள்,
வேயிருக்குமிதழிடைய னுக்குநல்வி ருந்துசெய்தவன் வெறுக்கிலென்,
போயிருக்கிலென்மு றிக்கிலென்சிலைமலைந்துநம் மொடெவர்போர்செய்வார்

என்றான். அச்சமயம் கன்னனானவனெழுந்து வீட்டுமரை நோக்கினான். பெரியோய்! போர்முனையிலெதிர்த்து வருமருச்சுனனது ஆவிகவர்தற்கன்றோ யானிருக்கின்றேன. அதனையறிந்துந் தாங்களிடையனுக்கஞ்சுவதேனோ? கஞ்சனானவன் வஞ்சனையினாலனுப்பிய மல்லரிநவரும் விளாமரமும் பசுக்கன்றுமாக வந்தபோழ்து, கன்றைப்பிடித்து விளாவிழும்படியெறிந்த கள்வனதானே படுகளத்திற் றேர்செலுத்துபவன். செலுத்தினும் என்வலிமையை அறிதற்கு இடம் படுகளமோ? அன்றோ? தேவர்கள் பொரவரினும் ஓரம்பினாலழித்தல் திண்ணம். யான் கடுஞ்சமரில் நாகாஸ்திரத்தைச் செலுத்தினால் அருச்சுனனுமுயிருடன் திரும்புவானோ? ஆகையினால் எனக்கு நிகராகவும். வீரர்களுளரோவென்று கொடையினாற் கற்பகதருவும் நாணும் வள்ளலாகிய கன்னன் கூறினன். தெளிந்த அறிவினையுடைய வீட்டுமருங் கேட்டனர். புன்னகை பூத்தனர். கன்னனை முன்னிலையாக்கினர். மகனே! நிவாதகவசர் காலகேயரென்னுமசுரர்களைச் சூரியன்முன்பட்ட விருள்போல வோட்டெடுப்பப் பொருது, தேவர்களது அரசுரிமையைப் பண்டுபோலக் கொடுத்துதவிய உத்தண்ட கெம்பீரனாகிய அருச்சுனனுக்கு நீ நிகரோ? வெண்ணிறச் சந்திரனுக்குக் கருநிறச் சந்திரனுவமையாமோ? என்றனர். இதனைக்கேட்ட கன்னனுங் கன்றியமனத்துடன் வீட்டுமரை நோக்கினான். ஓ பாட்டனாரே! என்திறம் பேசவும் வேண்டுமோவென்ற சொல்லிறுக்குமுன்னர் வீட்டுமரும், அரசனே! போருண்டாகும்போழ்து அப்போர்முனையிலன்றோ வீரம் விளங்கும். யானுங் காண்பேன் என்று கூறிச்சென்றனர். வேந்தர்பிரானும் மற்றைய வரசர்களுக்கு விடைகொடுத்தான். அதன்பின்னர், விதுரன் மாளிகையிலிருந்த கிருஷ்ணரானவர் விதுரனை முன்னிலைப்படுத்தி வீரனே! இப்பூவுலகில் விற்களிரண்டேயுளதென்று யாவரும் வியப்பனவற்றுள் ஒன்றை, யாது கருதி முரித்தனையென்றார். விதுரனும் வணங்கிச் சொல்லுகிறான் சுவாமீ! அரசராயினர் தமது

இறைமைக்குரிய உபாயங்களைத் தாங்களே யறிந்திருத்தல் வேண்டும். அன்றி அமைச்சர்களெடுத்துரைப்பதைக் கேளாதவர்களையும், கெடுவதனை நினையாதவர்களையும் இருப்பின் அவர்கட்காகப் போர்முனை சென்று இறப்பது குற்றமெனப் பெரியோர் கூறுநிற்பர். "அற்பராவார்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோ" என்பதன்றோ பெருமொழி!

"சிறியரே மதிக்குமிந்தச் செல்வம்வந்துற்ற ஞான்று
வறியபுன் செருக்கு மூடிவாயுளார் மூகராவர்,
பறியணி செவியுளாரும், பயிறரு செவிடராவர்,
குறிபெறு கண்ணுளாருங் குருடராய் முடிவரன்றே"

என்றதுபோன்று ஒன்றையும் மதியார்கள். பெரியோர்கள் தானும் நினைக்கவுங் காணவும் முடியாத தேவரீரிவ்விடம் வந்தகாரணத்தையருளெனவும் நினைத்திலன். சுற்றத்தைக் கூடிவாழ்தலைப் பெருமையெனவும் அறிந்திலன். சுவாமீ! இவன் கூறியனவோ மிகவுமிழிமையான சொற்களாகும். ஆதலினாலேதான யானும் வில்லைவெட்டினேனென்றான். இங்ஙனங்கூறிய விதுரனைக் கிருஷ்ணர் பின்னும் நோக்கினர். வீரனே! துரியோதனன் சமர்க்களம் புகுந்து இறக்குஞ்சமயம் நீ கூடநில்லாதொழிவையேல் உனதன்புமிக்க பாண்டவர்கள் எவ்வகை நலனும் ஒருங்குதுய்ப்பார்கள். நெய்யுடனடுக்கிய விறகிற்குங் காற்றினுதவிவேண்டியதுபோல உனதுதவியுந் துரியோதனனுக்கவசியம் வேண்டற்பாலது. உனது வில்லானது வெட்டப்பட்டபொழுதே துரியோதனனும் படையுமழிகைதிண்ணம். பெரியோர்கள் வகுத்த அறநூலின் நுண்பொருளை நன்குணர்ந்த விதுரனே! துரியோதனன கூறிய வசைமொழிகளைப் பொறுத்தநின் பெருமைக்கு இலக்குமுண்டோ? என்றவ்விடம் விட்டகன்றனர். கன்னனைப் பெற்றதாயாகுங் குந்தியானவளிருக்கும் மாளிகையையடைந்தார். சந்திரவிம்பம்போன்று மலர்ந்த முகத்தையுடைய குந்தியும் வாசுதேவரையெதிரேற்றனள். வந்தனையும்புரிந்தாள். சூற்கொண்ட மேகத்தைக்கண்டு சலாபியைவிரித்தாடும் மயிலை நிகர்த்தாள். அடியாள் வசிக்குமிச்சிறுகுடிலில், தேவரீர்வருதற்கு என்னதவஞ்செய்தேனோ வெனவியந்தாள். காட்டில் வசிக்கும் மக்களனைவரையும் ஒருங்குகண்ட மகிழ்ச்சியையும் எய்தினாள். துளபமணிமார்பன் திருமுகத்தைப்பார்த்தாள். தேவரீர் இப்பட்டினத்திற்கெழுந்தருளிய காரணம் யாதாகுமென்றாள். கிருஷ்ணருங் கூறுகின்றார். தேவியே! உனது மக்களினேவற்படிக்குத் தாயபாகம்பெறும்

தூதனாகவே யான் இவ்விடம் வந்தேன். துரியோதனனும் தென்திசைக்கோமானும் நாணும்படி போர்செய்வேனென்று கூறினன். எப்படியும் நாளைக்குப் போர் தொடங்கல் நிச்சயம் என்றார். இதனைக்கேட்ட குந்தியானவள் மனம்வருந்தினள். கிருஷ்ணரின் முகத்தை நோக்கிச் சுவாமீ! நாளைக்கு நடைபெறும் போரில் மரிய்வதுந் தவிர்வதும் யார்என்பதை அடியாளறியக் கூறுநிர் என்றாள். மாயவனும் குந்தியின் வாட்டத்தைத் தமது சாதுரியத்தினால் மாற்றினன். மங்கை நல்லாய்! உனது பெருமை உனக்கே விளங்காது! நீ இளமைப்பருவத்திற் கன்னிகாமாடத்திலிருந்தனை. ஆங்கோர் முனிவர் தோற்றி ஐந்து மந்திரங்களையுபதேசித்தனர். அம்மந்திரவலியாற் சூரியனை வரவழைத்தனை. சூரியனுமுடனே தோன்றினன். அச்சணமே யோராண்மகவுதித்தது. அம்மகவை யாருங் காணிற் கற்புக்கேதமாமென்று பேழையிலிட்டு யாற்றிலீந்தாய். அந்தயாறும் அக்குழந்தையைக் கங்காநதியிடம் சேர்த்தது. அதனைத்தேர்ப்பாகன் கண்டு ஆர்வமிகுதியினாலெடுத்து மகன்போலப் பேணிவளர்த்தான். அச்சமயம் சூரியனேவலினாலே அக்குழந்தைக்குக் கன்னன் என்னும் பெயருமிட்டான். அக்கன்னனது படைவலிமுதலியவற்றைத் துரியோதனன் அறிந்து பட்டமுஞ் சூட்டினன். வேண்டிய உரிமைகளையுமுதவினன். அக்கன்னனுடன் எதிர்நின்று சமர்புரியும் வீரர் ஒருவருமில்லை. அவனே உனது இளையமகனாகிய அருச்சுனனுடன் போர் புரிவன். அருச்சுனனைத் தனது தம்பியென்னு முரிமைப்பாட்டையும் அறியான். ஆதலால் அக்கன்னனாகிய வீரனிடத்து நீ இச்சணமே செல்குவை உனதுரிமைப்பாட்டை முறைமையாகக் கூறி அவனைப் போருக்கெழாவண்ணஞ் செய்தலே தகுதி. அதன்பின் உன் மகனை நோக்கி யுனது தம்பியர்கள் ஐவருந் தற்றேவல்புரிய நீயே தனியரசு செலுத்தலாமெனக் கூறுதலும் நலம். அங்ஙனங் கூறுங்கால் கற்பகதருவும் நாணுங் கொடையையுடைய கன்னன் மறுப்பன். மறுப்பின் 'காண்டாவனத்திலிருந்தெழுந்து போன பாம்பின் நுண்பொருளையவன் அம்பாகவைத்திருக்கிறான்' அருச்சுனனோடு பொருங்காலம் அந்த நாகபாணத்தை யிரண்டாமுறை யுபயோகிக்காது ஒருவரம் வேண்டுவை என்று மாமனாகிய மாமாயன் கூறினான். கேட்டகுந்தியு மதிசயமுற்றாள். சுவாமீ! அக்கன்னனானவன் எனது மகனென்பதை முன்னந் தேவரீரறியத்தரின் யானிப்பாரதப்போரெழவிடமாட்டேன். பெரியோய்! இருதிறத்தினரு முயிர்விடுகைக்கேதுவாய பல முறைகளையுண்டாக்கினீர். அதுமட்டோ? கன்னனையின்றுதானே யெனதுமதலையெனவுங் கூறினீர். ஐயனே! ஒன்றை நினைத்தொன்றைச்

செய்கின்றீரே! ஆகா பூபாரந் தீர்க்கும் புண்ணியனே! யான் கன்னனுடைய நாகாஸ்திரத்தைத் தடுப்பின் அருச்சுனனினம் பிறைற் கன்னனிறந்தொழிவன். தடுக்காவிடின் அருச்சுனனிறந்து படுவன். ஐயையோ! இக்கொடுமைக்கு என்செய்வேனென்று இரங்கினாள். பலவகையான வளப்பங்கள் மிகுந்த குந்திதேசத்தரசன் மகளாகிய குந்தியின் துயரை, ஆயர்பாடியில் வெண்ணெயுந் தயிருங் களவாடிய கண்ணனாகிய கள்ளனும் மாற்றினான். மீண்டுங் குந்தியை விளித்தான். மங்கை நல்லாய்! பாண்டவர்களின் நிலைமையோ ஐந்தலை நாகமனையது. ஒருவரையொருவர் விட்டகலாத ஐவருமிறத்தல் விருப்பமோ? அல்லது கன்னன் மாத்திரமிறத்தல் விருப்பமோ?

"ஐவர்க்கு மோருயிரே ஐந்துறுப்பு மாதலால்,
ஐவருஞ்சாகை யழகியதோ?—வைவே,
லொருவனுமேசாகை யழகன்றோ வென்றான்
திருமகள் சேர் மார்பன் சிறந்து"

ஆதலினம்பை விலக்கலே யழகென்று தேற்றினர். மீண்டும் விதுரன் மனையை நண்ணினர்.

துரியோதனனமைச்சியல்

அரசர்க்குரிய உறுப்புக்களாறனுள்ளும் அமைச்சானது இன்றியமையாததாதலால், ஆட்சித்திறனறிந்த அமைச்சர்களுடன், எக்கருமங்களையு முசாவுதல் மரபென்பதை முன்னருங் குறிப்பிட்டேம். "பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தாற் பொருத்தலும், வல்லதமைச்சு" என்பதும் பிரமாணமாதலின் துரியோதன மகாராசனானவன்றனது தந்தை, தம்பியர்கள், கன்னன், சகுனி முதலாஞ் சுற்றத்தவர்கள், தெளிபொருளுணர்ச்சியுங் கூரியமதியுமுடைய மந்திரிமார் ஆகியவர்களை ஒருங்குகூட்டி ஒரு தனிமண்டபஞ் சேர்ந்தான். பின் ஆங்குள்ளவர்களை மகிழ்வுடன் விளித்தான். பெரியோர்களே! பாண்டவர்கள் சூதிற் றோற்றுக் காட்டையடைந்தனரன்றோ? அவர்களை மீட்டும் நாட்டைவேண்டும்படி மூட்டிய கிருஷ்ணன் தனித்து இங்கு தூதனாக வந்துள்ளனன். நாமிப்போ அதற்குச் செய்யத்தக்கது யாது என்றனன். தந்தையாகிய திருதராட்டிரன் கூறுகின்றான்; மகனே! புலியானது வலையிலகப்படின் வேடர்

கள் விடமாட்டார்கள். அதுபோல நாமுங் கையிலகப்பட்டவனை விடுதல் நலமன்று. இந்நள்ளிரவு விடியுமுன் கிருஷ்ணனைச் சேனைகள் புடைசூழச் சென்று கொல்வதே தக்கது என்றான். குருடன் சொல்லியவற்றிற்கு விகர்ணனும் சிரித்தான். ஆங்கிருந்தவர்களை முகம் நோக்கினான். தூதர்களைக் கொல்வது அரசர்க்கு மரபன்று; ஆதலின் இது தப்பபிப்பிராயமென்றான். பின்னுந் தமையனை நோக்கினான். வேந்தர் வேந்தே! மூத்தோர், சிறுவர், வேதாத்தியயனர், பிணியாளர், தோத்திரிப்போர், மகளிர், தூதராகுமிவர்களைக் கோறல் பெரியபாவம். அங்ஙனஞ் செய்வோரிம்மையிற் பழியையும் துன்பத்தையும் எய்துவர். மறுமையில் நீங்கா நிரயத்தையுமடைவர் இதற்கு உதாரணமாக முன்னொருகாலத்தில் இராசாதிராசனாகிய சூரபன்மனின் அத்தாணிமண்டபத்தை வீரவாகு என்னுங் குமாரசுவாமி தூதர் சென்றடைந்தார். அரசனுக்கிணையாகவுமிருந்தனர். வேண்டியவைகளை முறையாகக் கூறினர். ஈற்றில் 'எந்தை நெடுவேலினியுனைத் தடிதறிண்ணம்'' எனவொரு கட்டுரை பகர்ந்தனர். சூரபன்மன் மைந்தர்பலரையுங் கொன்றனர். வீரமகேந்திரத்தையுமழித்தனர். அச்சமயத்திலும் அரசனானவன் 'தூதரைக் கோறல் பாவம்' என்று தருமநூல் முறையையுமாராய்ந்து வறிதேயிருந்தான். இதுமட்டோ? பின்னோர் ஞான்று இராமசுவாமியின் தூதராகிய அனுமானும் தமது வாலினால் இலங்கையையெரியூட்டியழிக்கக் கண்டும் அரசனாகிய இராவணனின் தம்பி விபூஷணனானவன் "மாதரைக் கொலைசெய்தார்களுளரென வரினும் வந்த தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்" என்றனன். ஆதலால் பெரியோர்களே! தூதுவந்த ஒருவனைக் கொல்ல நினைப்பது பெரியபாவமாகும். அன்றி, பகைவராயினுந் தன் வீடுவந்தவர்களைக் கொல்ல நினைப்பதும் ஆண்மையாகுமோ? யாம் எத்தகைய உபாயங்களைச் செய்யினுங் கிருஷ்ணனோ இந்நள்ளிரவிலகப்படவும் மாட்டான் என்றனன். இந்நல்லுரையானது துரியோதனன் மனதுக்கினிய தம்பியாகிய துச்சாதனன் செவியில் தீயிலிட்ட வேலென நுழைந்தது. தமையனை நோக்கினன். அரசரேறே! மந்திராலோசனைச் சபைக்கு வயதிற்குறைந்த இவனை ஏன் அழைத்தீர்கள். உலகியலானது மிகப்பாண்டித்திய மடைந்தவர்களுக்கும் நிரம்பிய வயதில்லாதவர்கட்கும் ஒருபோதும் விளங்காது. ஆதலால் எனது அபிப்பிராயப்படி தேர்வீரர் முதலியோர் சூழ்ந்து நிற்ப, விதுரனது மாளிகையில்விட்டே தீக்கொளுவின் எமது உட்பகைஞனாகிய விதுரனுடன் கிருஷ்ணனும் ஒருங்கழிதல் நிச்சயம் என்றான். அச்சமயங் கன்னன் எழுந்தான். சபையோர்களே! சூரியப்பிரகாசத்தின் முன்னிருள் நிற்காவே! இவனைக்கொல்ல எனது

ஒரு அம்பே போதுமானது. இந்நள்ளிருளே இதற்கு ஏற்ற தருணமாகும் என்றான். அச்சமயம் சகுனி யெழுந்தான். பொங்கிய சீற்றமுந் தங்கிய வஞ்சமும் மூள நின்றான். சபையோர்களே! கிருஷ்ணன் நாளைப் பாண்டவரைக்கூடின், உரித்தாக வந்தூட்டு மூழ்வினைபோன்று போரில் எம்மை வெல்லவிடான். ஆகையால் தூதரைக் கொல்லுவதாண்மைக்கு மாறாகமெனினும் இவனைக் கொல்லாமற் கொல்லல் அன்றோ தகுதி! அங்ஙனமெனிற் பொறிக்கிடங்கொன்றமைத்து, அதன்மீது அழகிய பீடமிட்டு, கிருஷ்ணனை இருத்தி, வீழ்த்திக்கொல்வதே தக்கதென்றான். அரசனுந் தன்மனதுக்கினிய மந்திரமெட்டியவுடனே "புதியது கண்டபோது விடுவரோ புதுமை பார்ப்போர்" என்றபடி அழகிதுவேயென்று ஆனந்தித்து மந்திராலோசனையை நிறைவுசெய்தனன்.

கிருஷ்ணனைக் கொல்ல வழிதேடுகை

மந்திராலோசனையும் முடிவெய்தியது. அரசனும் உவகையெய்தினான். நிலவறையைக் கருத்தமைய வகுப்பித்தான். ஆங்குப் போர்வீரர்கள் நிறுவப்பட்டனர். மல்லரும் பப்பரர்களும் இருமருங்காக நிறுவப்பட்டனர். பல படைவீரர்களுமவ்வாறே. பின் அந்த நிலவறையை மூங்கிற் பிளம்புகளினால் மூடச்செய்தான். அதன்மீது குலமணிகளழுத்திய பீடத்தையிடுவித்தான். மேற்கட்டியின்மீது மலர்மாலையினால் அணிபெற அலங்கரிப்பித்தான். சித்த சுத்தியையுடைய மெய்யடியாரது உள்ளக் கமலத்தை மலர்த்துந் துளாய் முடியோனைத் தனது ஆசனத்திருத்திக்கொல்லவுன்னினான்.

இச்சங்கதியையறிந்த கதிரவனும் பொல்லாங்குக் கொதுங்கியவன்போன்று கீழ்த்திசையை மெல்ல நண்ணினான். தாமரை மலர்களும் மலர்ந்தன. சிற்றரசர்களுங் கடந்த இரவு கண்விழித்த அரச அவையை நண்ணினர். ஆதிசேடனின் துயில்நீத்த கண்ணனும் காலைக்கடன் கழித்தனன். அச்சமயம் துரியோதனனது தூதர் சிலர் மன்னனேவலின்படி நண்ணினர். நெஞ்சார வணங்கினர். தோத்திரமும் புரிந்தார். அரசன் கட்டளையைக் கூறினர். கிருஷ்ணரும் இனிது எழுந்து சென்றனர். அத்தாணி மண்டபம் அடைந்தார். பாம்பெனுங் கொடியுடன் நஞ்செனும் மனமுடையோனும் அமருகவென்றான். மலர்ந்த முகமுடைய மாயனுமிருந்தான். ஆங்கிருந்து நெறுநெறுவெனுந் தொனியுண்டாயது. கிடங்கினுட் கொடுசென்றது. அரசன் சூழ்ச்சியை அச்சமயமேயறிய நேர்ந்தது. பாதலத்திலடியும் வான்முகட்டில்

முடியுமுற நின்ற வடிவங் காணப்பட்டது. இமையவர், நாகர் யாரும் அஞ்சினர். உலகம் பதைத்தது. மல்லர்களோ மாய்ந்தனர் இடியினாலுயிரிழந்த நாகம்போன்று குழியிலுள்ளார் யாவருமுயிர் துறந்தனர். அன்னவருள் தலையறுபட்டோர் மேருவையும், உரம் பிளவுண்டோர் குமரன் வேல்பட்டகிரவுஞ்ச கிரியையுமொத்தனர். சில மள்ளர்கள் இராமசுவாமியின் காலிலகப்பட்ட துந்துபியின் எலும்பானது மலைவடிவமெய்திய தன்மையையொத்தனர். காலிலகப்பட்ட சிலர் அகத்தியமுனிவர்கையி லகப்பட்ட விந்தமலையெனப் பாதலம்புக்கனர். எதிரிலகப்பட்டார் சிலர் எற்றுண்டமையாற் பாற்கடல் கடைந்தஞான்று மந்தரமாகிய மத்துச் சுழன்ற தன்மைபோன்று சுழன்றனர். இவ்வற்புதங்களையெல்லாங் கண்ட துரியோதனன் மனக்கவலை, வந்தனை, முகமன் ஆகியவைகள் ஒன்றையுங் கையாண்டிலன். அச்சமயங் கிருஷ்ணரும் துரியோதனனை முன்னிலையாக்கினர். மதிகெட்ட மன்னவ! உனது துர்மதியினால் என்னைக் கொல்லச்செய்த சூழ்ச்சி மிக நன்று. இனி யான் விரைந்து சென்று நீயும் நின்குலமுமழியும்படி போரை மூட்டுவன். பாண்டவர்களின் சபதவாக்கியத்தை நிறைவெய்தவிப்பன். போரிற் படையெடுக்க மாட்டேனென்ற உண்மைமொழியையும் நிறைவுசெய்வேன். இதுவேயுனைக் கொல்லாதுவிட்ட காரணமென வறிகுதியென்று ஆங்குநின்றகல, மற்றைய வேந்தர்களனைவரும் பின்தொடரமங்களங்கூறி நிறுத்திக் கன்னனுடனொருவசனங் கூறுகின்றார். அங்கர்பதி வேந்தே! சந்திரகுலம் விளங்கவன்றோ பாண்டவர்கள் தோற்றினர். அவர்களோ உனக்கு இளைஞர்கள் என்று கன்னனின் உற்பவத்தைத் தவறாது ஆர்வமுறக் கூறினார். அரசனே! இன்னுமதிகங் கூறல் மிகையாகும். உனது தம்பிமார்களுடன் கூடிலன்றோ இன்பவாழ்வெய்தலாகும் என்பதனைக் கேட்ட கன்னனுஞ் சுவாமீ! ஆயர்பாடியில் நந்தகோபர் திருமகனாகவுதித்துப் பற்பல அற்புதங்களைச் செய்தும், துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யவந்த தெய்வமே! நான் இன்றே எனது பிறப்பை உணர்ந்தேன். ஆயினும் அன்பு காரணமாக என் தம்பியர்களிடஞ் செல்லின் உலகம் நகையாடுமே! இக்குழந்தை யாவருடையதென எவருமறியமுடியாத என்னை அரசனாக்கியவனும் இத்துரியோதனனன்றோ? அதுமட்டோ? சிறப்புஞ் செல்வமுஞ் சீர்மையுந் தந்தனன். இப்பொழுது இருபாலார்க்கும் போர்நிகழுமெனவறிந்த யான் பாண்டவரைச் சென்றடையின் செய்நன்றிமறந்தவனாவேனே! "எந்நன்றிகொன்றார்க்குமுய்வுண்டா முய்வில்லைச் செய்ந்நன்றிகொன்ற மகற்கு" எனபதன்றோ பிரமாணம் என்றான். கிருஷ்ணருங் கன்னனைவிட்டகன்றனர். அசுவத்தாமனை அழைத்தனர். முருகனையொத்த வில்லாண்மையுடைய துரோணாசாரியன் மகனே! நாளையுண்டா

கும் போருக்கு நீயே சாட்சியாகுவை. உனது ஆண்மைக்கோ
எல்லையில்லை. துரியோதனன் போர்முனையில் உன்னை மன்றாடினும்,
நீ மறப்பையேல் ஐவரும் உய்குவர். அவர்கட்கு உன்னிடத்து
மிகுந்த அன்புமுண்டாகும் என்று ஆணரியனையவனுக்குச் சொல்
லித் தமது கைவிரலிலுள்ள கணையாளியை நழுவச்செய்தனர்.
வீரனுமுடனேயெடுத்து வண்டுறையலங்கற் சென்னிவானவன்
கையிலீந்தான். மாயனுமதனை வாங்காது வீர! அகன்ற விண்ணி
னிடத்தே சூரியனைப் பரிவேடஞ் சூழ்ந்தமை காண்கின்றிலையோ
வெனலும், வீரனும் மோதிரக் கையுடன் நோக்கினன். சபையி
லுள்ளோரனைவருங் கண்டனர். வெகு ஆச்சரியமுற்றனர். அசு
வத்தாமாவையன்றோ இம்மன்னவையினின்றுங் கிருஷ்ணர் பிரித்
தனர். அவனோ சத்தியஞ்செய்து கொடுத்தனன் என்றார்கள்.
துரியோதனனும் அதனையறிந்தான். கோபாக்கினியுங் கொழுந்து
விட்டெரிந்தது இனி அசுவத்தாமனினுறவு நன்மைபயக்குமோ
வென்றான். இச்சம்பவங்களையெல்லாம் அசுவத்தாமா செவிமடுத்
தனன். மனமுமுடைந்தான். கிருஷ்ணரினகன்ற சூழ்ச்சியை
நினைந்து நினைந்துருகினன். தமது சூழ்ச்சி மிகப் பலிதமெய்திய
மையைக் கிருஷ்ணர் நினைந்து சந்தோஷமெய்தி, விதுரன் மாளிகை
யையடைந்து இந்திரனை நினைத்தார். இந்திரனுஞ் சமுகமாயினன்.
வந்தனைபுரிந்து நின்றான். தூயோனுங் கைவலோனமைத்த
யானைத்தந்தக் சட்டிலிலமரச்செய்தான். தேவராசனே! இனி
மேல் வரும் போரை நீயறிகுவையன்றோ? உனது மகன் அருச்
சுனனுக்கு மாறுகப் பொருபவனுங் கன்னனே! அக்கன்ன
னுக்கு ஒரு பாம்பானது அஸ்திரமாகவமைந்தமை புதிதன்று.
அப்பாணத்தினால், கன்னன் உன் மகனாகிய காண்டீபனைக் கொல்
லின், பூமி முழுவதுந் துரியோதனனுக்கேயாகும். பாண்டவர்க
ளோ இறந்து படுவர். முன்செய்த சபதமொழியனைத்தும் வீணா
கும். அதனால் வசையன்றோ உண்டாகும். அவ்வடுவெல்லாம் உன்
னையே சாரும். கன்னனாகிய வீரனிடத்துப் போர்முனையிலணியத்
தக்க கவசம், கனககுண்டலம் என இரு பெரும்பொருட்களுள.
இவற்றின் பலத்தினாலந்தவீரன் கற்பகாலம்வரை போரினும்
இறக்கமாட்டான். வானரக்கொடியோனன்றோ விறப்பான். சுற்
றத்தாரும் வருந்துவர். சகோதரர் இரங்கி மாள்வர். பெற்ற
பிதாவாதலின் உனக்கு இவ்வுண்மையைச் சொல்லுகின்றேன்.
கன்னனின் பெருமையோ வளப்பரியது. புல்லறிவாளர்கட்கும்,
பண்டிதர்கட்கும், வேதியர்கட்கும், யாசகர்கட்கும், வறிஞர்கட்
குந் துறவிகட்கும், புகமன்சொல்வோர் சொல்லாதோர்கட்கும்,
சமையக் கணக்கர்கட்கும், சாமானியர்கட்கும் வேண்டிய முறை
களை நன்குகண்டு அரிய தானங்களைக் கொடுக்கின்றான். நீ உன்
மகனுக்குதவிபுரிய விரும்பின் நான் ஒரு உபாயங் கூறுகின்றேன்.

அதாவது ஓர் முனிவடிவங்கொள்ளுதி! புலவர்களினழகிய பா
மாலையையணிந்த தானகரனாகிய கன்னன்மனை செல்லுதி! சென்ற
விடத்து வேண்டியன வினவுவான். அச்சமயம், அன்பனே!
உனது கவசகுண்டலமிரண்டையும் தருவையோ என்பீரேல், ஒரு
போதும் மறுக்காது வணக்கத்துடன் தருகுவன். பெறுவையேல்
அருச்சுனனை எவரும் போரில் வெல்லமாட்டார்கள். முதல் வள்ள
லும் வீரனுமாகிய கன்னனுமிறப்பான் என்றனர். இந்திரனதற்
குடன்பட்டு முனிவர்வேடங்கொண்டான். கன்னன்மனையைநண்ணி
னான். நரைதிரை மூப்புடன் கைக்கோலுந் தாங்கிய கிழவடிவத்
தைக் கன்னன் கண்டான். முனிவரடிகளில் விழுந்து வணங்கினான்.
முற்றத்துறந்த முனிபுங்கவ! தேவரீரித் தள்ளாப்பருவத்தச் சிறி
யேனையு மொருபொருளென மதித்தோ விண்டெழுந்தருளினீர்!
எனலும், முனிவனும் அரசே! எனது தள்ளாப்பருவமே யிவ்வளவு
அகாலமான நேரத்திலும் இவ்விடத்திற்கு வருவித்தது என்றார்.
அரசனும் அதிசயித்தான். தபோநிதியே! அடியேனிடத்துள்
ளன யாவற்றைக் கேட்பினும், உவப்புடன் தருவதற்குச் சித்த
முடையேன். காலந்தாழ்க்காதீர் என்று பணிவுடன் கூறினான்.
இந்திரனும் அது உண்மைதானோ வேந்த எனலும், அரசனும்
சுவாமீ! யாமதனை மறுப்பின், உற்றபோரிற் புறங்கொடுக்குமரசர்
களின் கதியையன்றோ அடைவேனென்றான். முனிவனும் உமது
கவசகுண்டலங்களையே யான் விரும்புகின்றேனென்ற சொல்
முடியமுன்னே கன்னனுந் தந்தேன் பெறுகவென்றான். அத்தரு
ணம் ஆகாயவாணியானது அரசனே! மாயனென் ஏவலால் முனிவடி
வாகியவன் இந்திரனே. நீ கொடாதே என்று ஒலித்தது. அத
னையும் மதிக்காது கொடுத்தான். தேவ துந்துபி முழங்கியது.
வானவர் மலராகிய மழையைத் தூர்த்தனர். இந்திரனோ விருத்த
வேதியவடிவம் நீங்கினன். மனமகிழ்வெய்திய பெருவள்ளலாய
கன்னனுக்கு ஒரு வேற்படையையீய்ந்தான். மன்ன! இதனை
யருச்சுனன்மீது விடாதே! மிககவலியுடைய கடோற்கசன்மீது
விடுப்பின், இது அவனைத் தவறாது கொல்லும் பான்மையது
என்றான். உரிய மந்திர மொழியையுமுபதேசித்தான். அழியாப்
புகழ்மிக்க கன்னனை ஆசீர்வதித்து நிறுத்திக் கிருஷ்ணரைச்
சென்றடைந்தனன். நிகழ்ந்தனவெல்லாங் கூறலுங் கிருஷ்ணருங்
கன்னமகாராசனின் வள்ளற்றன்மையை வியந்து கூறி இந்திர
னையனுப்பினர். பின் தனது மாமியாராகுங் குந்தியானவள்
வைகும்மாளிகையைச் சென்றடைந்தார். மாயவனைக்கண்ட குந்தி
யானவள் கலங்கல் நீரனைய மனத்துடனிருப்பினும் வேண்டிய
வழிபாடாற்றினள். அச்சமயந் தாங்கருதிய கருமங்களை ஒருங்கு
சேரமுடிக்குந் தகைமையும் நோக்கமுடையாராதலின், குந்தியை
முன்னிலையாக்கிக் கூறுகின்றார். தேவியே! யாம் முன்பேசிய

கருமத்தை நிறைவுபடுத்துகில் இந்தச்சணமன்றோ கன்னன் மாளிகையை நண்ணுதல் நலம் என்றார். உடனே குந்திதேவியுமெழுந்து தன் கால்சிவப்பநடந்து அரண்மனைவாயில் காப்போருக்குணர்த்தினள். அவர்களரசனுக்குணர்த்த அனுமதியுடனுள்ளே புக்காள். தாயின் வருகையைக்கண்டு இயல்பாகிய உத்தம குணத்திற்குரிய முறைதவறாது தாயெனமதிப்பவரினும் மேலாகிய வந்தனை வழிபாடுகளை யாற்றினான். உயர்ந்த ஆசனத்திருக்கச்செய்தான். சந்திர கிரணத்தைக்கண்ட சமுத்திரமானது திரைகளை வெகு விரைவாகக் கொழிப்பதுபோன்று ஆனந்தத்தினாற் குமிறும்மனத்தையுடையனாயினன். தாயே! வயாவருந்தமுறப் பெற்றதாயைப்போன்று, அடியேனது இச்சிறுமனையை நண்ண எத்தவம் முயன்றேனோ வென்றான். பற்பல விழுமிய மொழிகளையும் புகன்று அன்னாய் ஈண்டுவந்த காரணத்தைக் கூறுதிர் என்று பணிவுடன் கேட்டான். மகனின் பெருமையையும் வள்ளற்றன்மையையும், பெரியோர் மதிப்பையும் நன்குணர்ந்த தாயானவள், ஈன்ற பொழுதிலும் மனம்மகிழ்ந்து, என தருமைமகனே! யானே உன்னைப்பெற்ற தாயென்றாள். பின் துருவாசமுனிவர் வந்ததுதொடக்கம் ஆற்றிலிட்டமையீறாகச் சொல்லினள். கன்னனுங் கேட்டான், மனமகிழ்ச்சி யெய்தினான். இதுவுங் கிருஷ்ணரின் உபாயமெனக் கருதினான். தாயே! நீர் என்னை உண்மையாகப் பெற்றிருப்பினும் நான் நம்பமாட்டேன். பொருளாசையினாற் பேயின் முறையைக் கைக்கொண்ட சிலர், தனித்தனிவந்து யானே யுன்னைப்பெற்ற தாயென்றனர். நானுந் தேவர்களுதவிய துகிலொன்றினால், அவர்களை மூடி என்புருவமாக்கியிருக்கிறேன். அவ்வண்ணந் துகிலினால் மூடப்பெற்றுத் தகாதன செய்து படாதன படுதலழகல்லவே யென்றான். குந்தியானவள் உவகையெய்தி மகனே! அந்தத் துகிலை நீ என் கையிற்றந்து ஐயத்தை மாற்றுவதன்றோவழகு! என்றனள். கன்னனுந் துகிலையீந்தான். குந்தி விரைந்துவாங்கி உண்மையையுணர்த்தும் துகிலே! யான் பொய்த்தாயெனில் என்னையும் முனிகவென்று தனதுடம்பு முழுவதும் போர்த்தாள். தானே யுண்மையாகப் பெற்றதாயென்பதை யுறுதிப்படுத்தினள். தனது முலைகளிலிருந்து பாலெனுமமிழ்தைச் சொரிந்தாள். கன்னனைக் கட்டித்தழுவி முத்தமிட்டாள். எனது அருமை மகனே! அந்நாளில் உன்னைப் பாலுஞ் சோறும் பரிந்தூட்டும் பாக்கியம் பெறுப்பாவியாயினனே! யெனத் தேம்பினள். “பெறுமவற்றுள் யாமறிவதில்லையறிவறிந்த மக்கட் பேறல்ல பிற” என்னும் வேதப் பெருமையை நைந்து நைந்துருகினாள். ஐயையோ!! யாழோ,

குழலோ, நின்னமிழ்தனைய மழலைமொழியோவென வார்வம்மிக்குறுதும் பருவத்தையிழந்த பாவியாயினனே!

பொங்கு முலைப் பாலூட்டிப் பூந்தடங்கண் மையெழுதி
மங்கையர் பா ராட்ட வளராதே—யெங்குநின்
பானுறு மின்சொற் பவளவன்ன வாய் முத்தை
யானாரப் பெற்றிலேனங்கு.

என்று பலப்பல ஆர்வம்மிக்க மொழிகளைக் கூறி, என தருமைக் கண்மணியே! உன் தம்பிமாரைவரும முறைமுறை யேவல்கேட்பவும், மற்றைய சிற்றரசர்கள் பராக்குக் கூறவும், ஆண்மையுடன் செல்வம் பிரகாசிப்பச் செங்கோல் செலுத்திக் குருகுலத்தார்க்குக் குலமணியாகி வாழ்தலே தகுதியென்றாள். வள்ளலுமதிசயித்தான். என தருமைத் தாயே! அந்நாளிலடியேனை நொந்துபெற்றதுண்மையெனினும், மகவுரிமையின்மையினாலோ? அன்றி வடு வருமென்று அஞ்சியோ? புறக்கணித்தனை! துரியோதனனோ அன்றுதொட்டின்றுவரையு முயிர்த்துணையெனக் கருதி மணிமகுடமுஞ் சூட்டி, உடனிருந்துண்டு, பிறர்மதிக்கு முயர்ச்சியையும், மகிழ்ச்சியையுந் தந்தனன். அதுமட்டோ? ஒருநாள் யான் அவன் பட்டத்துத் தேவியாகிய பானுமதியுடன் தனியிடத்தில் விளையாட்டயர்ந்தேன். அச்சமயம் அந்த இராணியின் மேகலாபரண மணிகள் உதிர்ந்தன. யானதனாலெய்திய தளர்ச்சியை அந்த அரசனன்றோ நீக்கினான்.

“பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டிம்மணிக் கென்புகுந்த தென்னாமல் – நன்மணியைக்
கோக்கோ பொறுக்கவோ என்றானுக் கென்னுயிரைப்
போக்கா தொழிவேனோ புக்கு”

என்று பல நன்றியறிதலைக்கொண்ட மொழிகளைப் புகன்றான். தாயை அன்புருகத் தழுவினான். என தருமைத் தாயே! நீர் ஈண்டெழுந்தருளிய காரணம் யாது? கூறுதிர் என்றான். குந்தியும் மகனைக் கட்டித்தழுவிக் கைமலராற் கண்மலரின் நீரைத் துடைத்தாள். மகனே! நாளைக்கு வரும் போரில் அருச்சுனன் உன்னோடு சமர்புரிவன். அததருணம் உனது நாகபாசத்தை யிரண்டாம்முறை அவன்மீது விடாதே! பின்னுமிளைய பாண்டவர்களைக் கொல்லாது விடுவாயாகவென்றிரு வரங்களையும் வேண்டினள். வரையின்றி யாவர்க்குங் கொடுக்கும் வள்ளன்மைமிக்க கன்னனும் மனமகிழ்ச்சியெய்தினான். தாயை வணங்கினான். அன்னாய்!

யாவர்க்கும் வந்து கூடுவது சூழ்வினையேயன்றி வேறுமுளதோ? நீர் கேட்ட வரத்தை யான் மனமாரத் தந்தேன் கொள்ளுதிர்; என்றான். பின் தாயைநோக்கி நீரும் அடியேனுக் கிருவரங்களுதவுதிர்! அதாவது, யான் போர்முனையி லருச்சுனனுடைய அம்பினாலிறப்பின், நீர் அப்படுகளத்தில் வந்து மற்றையவரசர் அறிய எனக்கு முலைப்பாலூட்டி உமது மகனென்பதை விளக்க வேண்டும். மர்றையது, இப்பாரதப்போர் முடியும்வரையும் யான் உமது மூத்தமகனென்பதை என் தம்பிமாரைவருமறியச் சொல்லாதிருக்கவேண்டும், ஏனெனில், அவர்கள் யானுமது மூத்த பிள்ளையென்பதையுணரின், இராச்சியத்தை எனக்கே தருகுவர். யானுந் துரியோதனனுக்கே கொடுப்பன். இதுவே மிக நன்றாக வுய்த்துணரற்பாலதொன்றாகும் என்றான். தாயும் நீர்த்தாரை மார்புக மகனைக் கட்டிமுத்தமிட்டு விடைபெற்றுக் கண்ணனை நண்ணினள். கண்ணனே தமது கருதிய கருமங் கைகூடியதென்று மகிழ்ந்தான். குந்தியிடம் விடைபெற்றான், தேரிலேறினான். மற்றைய அரசர்கட்கு மனுமதியீய்ந்தான். பாண்டவரிருக்கை நண்ணினான்.

4ம் பாடம்.

நப்பசலையார்.

இம்மெல்லியலார் பெபர் மாறோக்கத்து நப்பசலையார் எனவும் வழங்காநிற்கும்.

இவர் செந்தமிழ்ப் பாண்டிநாட்டிலுள்ள கொற்கையம்பதியென்னும் நகரைச் சூழ்ந்த மாறோக்கம் என்னும் ஊரிலுள்ளவராதலின் இப்பெயர் பெற்றனர். "மணிமிடை பொன்னின் மாமை சாயவென், அணிநலஞ் சிதைக்கும் ஆர்பசலை." எனப் பசலையின் இயல்பைச் சிறப்படையச் செப்பியமையால் இவர் 'பசலையார்' என்னும் பெயரைப் பெற்றனர். நக்கீரர், நப்பூதனார், நத்தத்தனார் என ஆண்பாலார்க்கேயன்றி, நச்செள்ளையார் நக்கண்ணையார் எனப் பெண்பாலார்க்குங் கூட்டி வழங்கப்பட்ட சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல்லாகிய 'ந' என்பது கூட்டி 'நப்பசலையார்' என்று அழைக்கப்பட்டனர். இவரது ஊரிற்றானே 'மாறோக்கத்துக் காமக்கண்ணி நப்பாலத்தனார்' என்னும் புலவர் பெருந்தகையும் இருந்தனர்போலும்.

இவர் இயற்றியனவாக நற்றிணையில் ஒரு செய்யுளும், புறநானூற்றில் ஏழு செய்யுள்களும் காணப்படுகின்றன. இச்செய்யுட்களெல்லாம் சிற்றாடியானது உருவத்தாற் பெரியமலையின் உருவத்தைத் தன்னுளடக்கிக் காட்டல்போல் பல அரும் பெரும் பொருள்களைத் தம்முள் அடக்கிக் காட்டுகின்றன. இக்காரணத்தினால், இவர் செந்தமிழ்ப் பாண்டிநாட்டினராயினும் பிற நாடுகளிலும் சஞ்சரித்தவரென்பதும், பெண்பாலாரின் மனநிலையை ஆடவரிலும் பார்க்க நன்கு உணர்ந்து பாடவல்லாரென்பதும் புரவலர்களைப்பாடிப் பரிசில்பெறப் புறப்பட்டகாலம் பேரிளம்பெண்பருவத்துக்கு மேற்பட்ட காலமே யென்பதும், பிறவும் அறியக்கிடக்கின்றன.

"வரால் மென்றினைப் புலவுக்குரல் மாந்திச்
சாரல் வரைய கிளையுடன் குழீஇ
வளியெறி வயிரில் கிளிவிளி பயிற்றும்
நளியிருஞ் சிலம்பின் நன்மலை நாடன்
புணரிற் புணருமார் எழிலே, பிரியின்
மணிமிடை பொன்னின் மாமை சாயவென்
அணிநலஞ் சிதைக்கும் ஆர் பசலை யதனால்

அசுணங் கொல்பவர் கைபோல் நன்றும்
இன்பமுந் துன்பமும் உடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே"

என்னும் இதுவே நற்றிணையில் இவர் பாடிய செய்யுளாகும். இஃது தலைமகள் கூற்றாகும். இதன் பொருள் மலைச்சாரலி லுள்ள தம் கிளைகளோடுகூடி, மெல்லிய தினையின் மணம்மிக்க கதிரைக்கொய்து தின்று, சாற்றால் ஒலிஎழும்புங் குழல் ஒலி போல ஒன்றையொன்று அழைத்து மகிழுங் கிளிகள் நிறைந்த, நெருங்கிய பக்கமலையையுடைய நல்லமலை நாடனாகிய தலைவன் வந்து என்னோடு சேர்ந்திருப்பின் எனக்கு நல்ல அழகு உண் டாகும். அவன் என்னைப்பிரியின், நிலமணியிடையிட்ட பொன் போல, எனது மெய்யின் அழகுகெடப் பசலைதோன்றி என் நலங்குலைக்கும். ஆதலால், குளிர்ச்சிபொருந்திய நறுமணத்தை யுடைய மாலைகளையணிந்த என் காதலன்மார்பு அசுணமாவினைக் கொல்பவர் கைபோல இன்பமுந் துன்பமும் உள்ளதாய் இருக் கின்றது என்பது. அசுணமா என்னும் விலங்கைக் கொல்ல விரும்புவோர் முதலில் அதனை யாழிசை கேட்பித்துப் பின்னர் பறைமுழக்கத்தை எழுப்பிக் கொல்வர். அவர் கையகத்தே அவ்விலங்கிற்கு இன்பமுந் துன்பமும் இருப்பதுபோல, உட னுறைகாலத்து இன்பத்தையும், பிரிந்துறைகாலத்துத் துன்பத் தையும் தருகின்ற தலைவனமார்பை உரைக்கப்பட்டிருக்கின்றது. இச்செய்யுளிலுள்ள அழகிய அகப்பொருட் கருத்துக்களில் 'புணரிற் புணருமார் எழிலே பிரியின் அணிநலஞ் சிதைக்குமார் பசலை' என்பது சாலச் சிறப்புடைத்து.

இச்செந்தமிழ்ச் செல்வியார் புறநானூற்றிற் பாடிய பாடல் களில் மூன்றுசோழன் குள முற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவ னைப்பற்றியன. ஒன்று மலையமான் திருமுடிக்காரியைப் பற்றியது. இரண்டு செய்யுட்கள், இன்னாரைப்பற்றிப் பாடியதென அறியப் படாதவை. இவையெல்லாம் சொன்னலப், பொருள் நலங்களு டன் மிளிர்வன.

இவர் ஒருமுறை பாவேந்தர் தங்களைக் காத்த பார்வேந் தனும், பல்லிசை நிறைந்த நல்லிசைப் புலவனும், ஆண்மையும், வீரமும், அழகும் படைத்தவனும், போர்செய்வதில் அதிக விருப்பமுடையவனும் ஆகியசோழன் குள முற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனிடம் சென்றார். வளவனும் இம்மெல்லியலாரை நகைமுகத்துடன் இன்சொற்கூறி, வரவேற்று உபசரித்தான். உடனே இம்மெல்லியற் புலவரும் அவ்வளவனின் வீரத்தைப் புகழ்ந்து பின்வருங் கருத்தமைந்த ஒருபாடலைப் பாடினர்.

'புறவுற்ற துயரத்தைப் போக்கிய வேள்! வேல் தாங்கிய சினம்மிக்க சோழர் மரபிலுதித்த அரசே! நெடுந்தகாய்! முத லைகள் செருக்குடன் வாழும் இழிந்த இடத்தினையுடைய அழ கினையும், நடுச்சாமத்தில் ஊர்காவலரது விளக்கு நிழலைக்கவரும் கொடிய மாறுபாடுடைய முதலைகள் வாழும் நீர்மிக்க மடுவையும், செம்புபோன்ற மதிலையுமுடைய தலைமை வாய்ந்த பழைய ஊரின் கண்ணே கச்சணிந்த யானையையுடைய அரசு உண்டு. ஆகையால் அவற்றை நல்லனவென்று பாராது, நஞ்சையுடைய வெண்பற் கள் தங்கிய கோபம்மிக்க ஐந்தலைநாகம் புக்கதாக, வானத்தில் தீப்பிறக்குமாறு பெரியதொரு மலைமுழைபிலே இடியேறுபொரு தாற்போல அமரகத்து அழிதல் வல்லையாய் இருந்தனை!

இச்செய்யுளில் ஐந்தலை நாகத்திற்குப் பகையரசை ஒப்பிட் டும், இடியேற்றிற்கு வளவனை ஒப்பிட்டும் கூறப்பட்டிருத்தலும், புறவின் துயரந்தீர்த்த குடியிற் பிறந்தாயாயினும் இவற்றை நல்ல வென்று பாராது அழித்தல் வல்லையாயிருந்தாய் என, அவன் மறத்தினை வியந்து கூறப்பட்டிருத்தலும் உற்றறிதற் கேதுவாகும். இதனைக்கேட்ட வளவன் இவரது புலமையை மிகவும் வியந்து பாராட்டுவானாயினன்.

அரசனின் வியப்பைக்கண்டு மனம்மகிழ்ந்த புலவர் பெருமாட் டியும் சிலகாலம் அவ்வளவனுடனுறைந்து அவனுடைய கொடை, வீரம், முறைசெய்தல் முதலியவற்றை நன்குணர்ந்தவராதலின் மிகுந்த மகிழ்ச்சியினராய்

"புறவின் அல்லல் சொல்லியக் கறையடி
யானை வான்மருப்பு எறிந்த வெண்கடைக்
கோல்நிறை துலாஅம் புக்கோன் மருக!
ஈதல் நின்புகழு மன்றே; சார்தல்
ஒன்னார் உட்கும் துன்னரும் கடுந்திறல்

தூங்கெயில் எறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்
அடுதல் நின் புகழுமன்றே; கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற்று ஆதலின் அதனால்

முறைமை நின்புகழும் அன்றே; மறமிக்கு
எழுசமங் கடந்து எழுவுறழ் திணிதோள்
கண்ணார் கண்ணிக் கலிமான் வளவ!
யாங்கனம் மொழிகோ? யானே! ஓங்கிய
வரையளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு

இயமஞ் சுட்டிய எம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடாவஞ்சி வாட்டும் நின்
பீடுகெழு நோன்றாள் பாடுங் காலே-'

என்னுஞ் செய்யுளை இயற்றினர். இச்செய்யுளினுற் பண்டைக் காலத்து வழங்கிய துலாக்கோலின் அமைப்பும், சோழர் குல முன்னோன் ஒருவன் தூங்கெயில் மூன்றையும் அழித்தான் என்பதும், உறையூரில் அறங்கூறவையமொன்று இருந்தது என்பதும், இமையமலையின் சிகரமானது அளவிடற்கரியது என்பதும், அதனிடத்துப் பொற்சிகரம் இருந்ததென்பதும், அதனிடத்திற் சேர அரசர்கள் தம் வெற்றிக்கறிகுறியாக கொடியாகிய வில்லைப் பொறித்திருந்தனர் என்பதும், சிபிவேந்தனின் செயற்கரிய செயலும், கிள்ளிவளவன். கருவூரைக் கைப்பற்றி இமயத்திற் புலியைப் பொறித்தான் என்பதும பிறவும் அறியப்படுகின்றன. இன்னும், இந்நல்லிசைப்புலமை மெல்லியலார் தம் பரந்த அறிவையும் நுண்மாண் நுழை புலமையையும் அறிந்து இன்புறுவதற்கு "விலங்குதோட் செம்பியன் சிற்றம் விறல் விசும்பின் தூங்கும் எயிலுந் தொலைத்தது" என்னும் பழமொழியாலும், "தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காணம்மானே" என்னும் சிலப்பதிகார அடியாலும், தூங்கெயில் எறிந்தவன் சோழர்குல முன்னோருள் ஒருவனே என்பதை நன்கு அறியலாகும். இஃதிங்ஙனமாக.

சில ஆண்டுகள் கழிய வளவனனவன், குளமுற்றத்தில் இறந்துபட்டனன். அச்செய்தியை இந்நல்லிசைப்புலமை மெல்லியலார் அறிந்தனர். அங்குச்சென்று பலவாறு புலம்பிப் 'பொன்னால் ஆகிய மாலையையும் நெருங்கிய போரில் எதிர்நின்று வெல்லும் படையினையும், திண்ணிய தோளையும் உடைய கிள்ளி வளவனைக் கைக்கொண்ட கூற்றானது தன் மனத்தினுள்ளே கறுவுகொண்டிருக்கும் எனினும், வெளிப்படநின்று வெகுண்டிருக்குமெனினும், உற்றுநின்று கையொடு மெய்தீண்டி உயிர் வாங்கத் துணிந்திருக்கும் எனினும் அது உயிருடன் வாழ்வு பெற்றிருத்தல் முடியாதகருமம் ஆகும். பின் என்னையெனில், பாடுவாரைப்போலத் தோன்றிக் கைகளினுற் றொழுது வாழ்த்தி இரந்து உயிர்கொண்டது என்பதே ஏற்புடைத்தாகும், எனுங் கருத்து அமைந்ததும், ஓதுவார் கேட்பார் உளத்தை வருந்தச் செய்வதுமாகிய செய்யுளை

"செற்றன்றாயினும் செறிந்தன்றாயினும்
உற்றன்று ஆயினும் உய்வின்று மாதோ

பாடுநர் போலக் கைதொழுதேத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டோள் வளவற் கொண்ட கூற்றே"

என்று கையறுநிலையாகப் பாடினர். வளவனின் பெருவீரமும், இரந்தவர்களுக்கு உயிரையும் கொடுக்கும் பெருந்தகைமையும், இம்மெல்லியலார் தாம வளவன் மீது கொண்ட நன்றியறிதலும் அன்பின்திறனும் பிறவும் யாவரும் தெள்ளிதில் அறியக் கூறினர்.

பின்னர் இம்மெல்லியலாரானவர் பெண்ணை யாற்றங் கரையில் இருந்த சிற்றூர் ஒன்றில் தலைவனும், கபிலர் முதலாம் முத்தமிழ்த்துறையின் முற்றப்போகிய முது புலவர்களாற் புகழ்ந்து பாடப்பெற்றவனும், புலவர்களின் பெருமையை நன்கு பாராட்டி அவர்கட்குத் தன்னிடமுள்ள எவ்வகைப் பொருளையும் பகுத்துக் கொடுத்தவள்ளலும் ஆகிய மலையமான் திருமுடிக்காரியிடம் சென்றனர். சென்ற மெல்லியலாரும் அரசனை விளித்து, பகைவரது யானையின் முகப்பட்டத்திலுள்ள பொன்னைக்கொண்டு, பாணர்களது தலையில் பொற்றாமரை மலரைச் சூட்டிய, சிறந்த தலைமையினையும், புறங்கொடாத மேற்கோளினையுமுடைய பெரியோன் மரபிலுள்ளாய்! இராப்பொழுது தங்கி நித்திரை செய்தாலன்ன செறிந்த இருளையுடைய சிறு காட்டையும், பறையொலி போலும் ஒலி தங்கிய அருவியையுமுடைய முள்ளூர்க்கு வேந்தே! முட்போன்ற நச்சுப் பற்களையுடைய பாம்புகளைக் கொல்லும் இடியேறுபோல முரசு எழுந்து முழங்க, தலைமை சிறந்த யானைகளோடு பொருதலைக் குறித்து வரும்வேந்தர்கள் போர்க்களத்தில் அழியப் பெரும் போர்செய்து பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றங்கரையிலுள்ள நாட்டையுடையோனே! யாம் ஆற்றல் இல்லாதவராயிலும் இயன்றளவு நின் புகழைப் பாடுவோமெனின் புலனழுக்கற்ற அந்தணாளராய கபிலர் பெருமனே! எம்போல்வார் பாடமுடியாது நின் இசை முழுவதனையும் அளந்து பாடியுள்ளனர். சேரர்க்குரிய பொன்தரு நாவாய் மேல் கடலிற் போனபின்பு பிற நாவாய்கள் போக வியலாதவாறுபோல யாமும் அப்புலவர் பெருந்தகை பாடியபின்பு பாடும் புலமை குறைந்திருக்கின்றோம். எனினும், எம்முடைய வறுமை துரப்ப நினது இசை பிடர் பிடித்துந்தவந்து உனது வண்மையைப் புகழக்கருதி இயன்றளவு பாடுகின்றோம். (எனது பாடலையும் ஏற்றுக்கொள்வாயாக) என்னுங்கருத்தமைந்த:

"ஒன்னார் யானை ஓடைப் பொன்கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை யுரவோன் மருக!
வல்லேம் அல்லேம் ஆயினும் வல்லே
நின்வயிற் கிளக்குவம் ஆயிற் கங்குல்
துயில்மடிந் தன்ன தூங்கிருள் இறும்பிற்
பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந!
தெறலரு மரபிநின் கிளையொடும் பொலிய
நிலமிசைப் பிறந்த மக்கட்கெல்லாம்
புலனழுக் கற்ற அந்தணாளன்
இரந்துசெல் மாக்கட்கு இனியிடன் இன்றிப்
பரந்திசை நிற்கப் பாடினன் அதற்கொண்டு
சின மிகுதானை வானவன் குடகடற்
பொலந் தருநாவாய் ஓட்டிய அவ்வழிப்
பிறர்கலஞ் செல்கா தனையேம் அத்தை
இன்மை தீரப்ப இசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தனம் யாமே, முள்ளெயிற்
றரா வெறியுருமின் றூர செழுந்தியம்ப
அண்ணல் யானையொடு வேந்து களத்தொழிய
அருஞ்சமந் ததையத் தாக்கி நன்று
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே"

என்னுந் தூக்கினைச் சொல்லினர். இச்செய்யுளிற் கபிலரைப் புகழ்ந்து கூறிய அடிகளும், அவர் பாடலுக்குப் பொலந்தரு நாவாயையும், மற்றைய புலவர்களின் பாடலுக்குப் பிறகலத்தையும் ஒப்பிட்டுக் கூறிய அடிகளும் உய்த்துணரற் பாலன.

இச்செய்யுளிலுள்ள "நிலமிசைப்பரந்த.........

பரந்திசை: நிற்கப் பாடினன்" என்னும் அடிகளாலும், இப் புலவர் பெருமாட்டியினது வேறொரு செய்யுளிற் காணப்படும் "பொய்யா நாவிற் கபிலன் பாடிய, மையணி நெடுவரை" என்னும் அடிகளாலும், இவர் கபிலர் பெருமானிடம் கொண்டிருந்த பெரு மதிப்பு வெள்ளிடை மலையென விளங்கக்கிடக்கின்றது.

இவ்வாறு மலையமானைப் புகழ்ந்துபாடி, அவனால் உபசரிக் கப்பெற்று அவன் நாட்டில் சிலநாள் வதிந்தனர். பின்னர் தம்மூர்க்குச் சென்றுறைந்தார். மறுமுறையும் அவ்வேந்தனைக் காணவேண்டி அவனூருக்குச் சென்றனர். அச்சமயம் அவ் வேந்தன் இறந்து பட்டமையை அறிந்து மனம் நைந்தார். அவ்வ ரசன் மகனாகிய சோழிய ஏனாதி திருக்கண்ணன் அரசியல் முறைமையில் தலைமை பூண்டிருந்தான். திருக்கண்ணனே!! சோழனின் படைத்தலைவனாயிருந்து அந்நாளில் சோழநாட்டில் நிகழ்ந்த பெரும்போர்களில் சோழர்க்குத் துணைசெய்து புகழும் படைத்தவன். ஏனாதி என்னும் சிறப்புப்பட்டமும் பெற்றவன். இவற்றையெல்லாம் நன்கு அறிந்த பெரும்புலமைச் செல்வியார் அவனைப் புகழ்ந்து, பிறரை வருத்தும் அசுரர் செய்மைக்கண் விளங்கும் ஞாயிற்றினைக் கொண்டுபோய் ஒழிக்க அதனால் உல கத்துள்ளார்கள் கண்களை இருள் மறைத்தது. அத்துன்பத்தை நீக்க வலிமை மிகுந்த அஞ்சன வண்ணனாகிய திருமால் அஞ்ஞா யிற்றைக் கொண்டுவந்து, எங்கும பரவிய இருள் அழிய, ஆகா யத்தில் நிறுத்தியவாறுபோலப் பகையரசர்களோடு போர்செய்து தோற்றுப்போனதால் தம் மன்னனை இழந்து வருந்தும் துன்பக் காலத்து, முரசு முழங்கும் கோயிலகத்தும் பெரிய காவிரியையு டைய சோணாட்டகத்தும் பரவிய பெருந்துயர் கெடும் வண்ணம், பிறரால் காண்டற்கரிய இடத்திலிருந்த சோழனது திங்கள் போன்ற வெண்குடையைப் பொய்யாத நாவினையுடைய கபிலரால் புகழ்ந்து பாடப்பட்ட முள்ளூர் மலையின் உச்சியில் தோற்று வித்து, அக்குடையை நிலைபெறுவித்த புகழ்பெற்ற தலைவனே! மலைக்குகையில் வாழும் புலியை எழுதிய கொடியையும், வண்டு படு கண்ணியையும், பெரும் புகழையுமுடைய முனனோனாகிய நின் தந்தை இவ்வுலகில் செய்த நல்லறத்தின் பயனைத் தேவ ருலகில் நுகரவேண்டிப் போயினன். அதனால் துன்பமுற்றோர்க் கெல்லாம் இன்பம் பெருக்குமாறு நீ தோற்றினை. நின் தோற்றம் மலையொடியக், காடுதீப்பற்ற, நீர்நிலைகள் வற்றி வறள, கோடை நீடிய பசுமழையற்ற காலத்தில் நிலங்குழியப் பெருமழை பொழிந் தது போலாகும் என்னுங் கருத்தமைந்த ஒரு தொடையலை உரைத்தனர்.

இச்செய்யுளில் திருக்கண்ணன் முள்ளூர்மலைமேல் சோழர் குடையைப்பிடித்தமை அஞ்சனவண்ணனாகிய திருக்கண்ணன் ஆகாயத்தில் ஞாயிற்றை உயர்த்தியதற்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருப்பது நன்னயஞ் செறிந்து மிளிர்கின்றது.

"அணங்குடை அவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள் கண் கெடுத்த பருதிஞாலத்து
இடும்பை கொள்பருவரல் தீரக்கடுந் திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு."

என்னும் அடிகளில் உள்ள கதையானது, எப்புராணத்திலுள்ள தென யூகித்தல் அறிஞர்கடன்.

"ஈண்டுச் செய்வினை ஆண்டுச் சென்று ணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன்-"

என்னும் இச்செய்யுளடிகளால் இப்புலவர் வைதிகமதத்தினர் என்பது அறியக்கிடக்கின்றது.

இன்னாரைப்பற்றிப் பாடப்பட்டன என்பது அறியப்படாத செய்யுட்கள் இரண்டில் ஒன்று 'ஆனந்தப்பையுள்' என்னுந் துறைபற்றியது. அதில்

"மண்ணுறு மழித்தலைத் தெண்ணீர் வாரத்
தொன்று தாமுடுத்த வம்பகைத்தெரியல்
சிறிவெள் ஆம்பல் அல்லி யுண்ணும்
கழிகல மகளிர்"

என்று விதவைகளது துயர்நிலை சிறப்பாகக்கூறப்பட்டிருக்கின்றது. மற்றது "கடைநிலை' என்னுந்துறைபற்றியது. அதில் அக்காலத்துத் தமிழகத்தில் காணப்பட்ட அதி மெல்லிய ஆடை ஒன்றைப்பற்றியும்: வியந்து உரைக்கப்பட்டிருக்கின்றது.

"கான்கெழு நாடன் கடுந்தேர் அவியன் என
ஒருவனை யுடையேன் மன்னே யானே"

என்னும் இவர் கூற்றினல் அவியன் என்னும் பெயருடைய தலைவனைப் புகழ்ந்து பாடி அவனால் உபசரிக்கப்பட்டவர் என்பது அறியக்கிடக்கின்றது.

இன்னும்

"அருள் (அவியன்) எவன்பரிகோ வெள்ளியது நிலையே"

என இவர் கூறியிருத்தலால் இவருக்குச் சோதிட நூலறிவும் உண்டு எனலாம். என்னை? அவியன் தன் நிலைமைதுன்றுன். ஆகையால் சுக்கிரன் வற்கடத்தை உண்டாக்கத்தக்கதாகத் தெற்கினின்றுலும், அன்றேல் வேறெங்குநின்றுலும், அதன் நிலைமைக்கு யான் சிறிதும் வருந்தேன் என்பதைக் கருத்தமைத்துக் கூறினர்.

வீரரின் வீரத்தையும், வள்ளல்களின் வண்மையையும், காவலரது சிறந்த குணங்களையும், புலவர்களின் புலமையையும் தெள்ளூற்றதீந்தமிழில் வடித்தெடுத்துக் கூறிய, பல்லிசை கொள்புலமை நிறைந்த இம்மெல்லியலார் காலத்தில் கோவூர்கிழார், செங்கண்ணனுர், ஆவூர் முலங்கிழார், பெருந்தலைச் சாத்தனுர், ஆடுதுறை மாசாத்தனுர், ஐயூர் முடவனுர் முதலிய புலவர்கள்பலர்

இமிழ் கடல் வேலித்தமிழகத்தில் இருந்தனர் என்பது பழந் தமிழ்த் தொகை நூல்களால் அறியக்கிடக்கின்றது. இவர்காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகும்.

---

5 ம் பாடம்

ஆறுமுகநாவலர்

'வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாஞ் சமயஞ்சாரு
மூழ்பெற லரிதுசால வுயர் சிவஞானத்தாலே
போழிள மதியினனைப் போற்றுவார் அருள்பெற்றுரே

சித் 2 ம் சூத் 61 ம் செ.

என்னுமருமைத் திருவாய் மொழிக்கு இயைய மேலாகிய அறவொழுக்கம் பூண்டவரும்

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

என்கின்ற தேவர் திருவாக்கை நல்வினைவாகக் கொண்டவரும் இவரே ஆறுமுக நாவலர். இவரது அரிய திருச்சரிதையை முறையாக எழுதுவதானது, இந்நாகரீக உலகிற்கு ஏற்றமோவெனில், இன்றியமையாதது. உள்ளத்தை உள்ளவாறு ஓர்ந்து உணர்வார்க்கு மிகவும் முதன்மையை உண்டாக்குமென்பதற்கு ஐயமில்லை.

அழகாலும் அறிவொழுக்கங்களாலும் மிகச்சிறந்து நாக நாடென யாவராலும் புகழப்படுவது வட இலங்கையாகும். அங்கு வசிப்பவர்களும் தமிழ்மக்களேயாவர். இவர்கள் அரசுரிமையானது கி. பி. பதினாறுவது நூற்றாண்டளவில் விலகியது. ஒல்லாந்த அரசு நிலைபெற்றது. குறித்த ஒல்லாந்தர் நாகரீகமே மிகுந்து சைவத் தமிழ்மக்களை இருந்த இடமுந்தெரியாது மறையுமாறு மிகவுந்துன்புறுத்தியது. இவ்வற்புதத்தைக் கூர்ந்து நோக்கிய தமிழ்ப்பழங்குடிகள் நெஞ்சம் புழுங்கினர். வேந்தன் ஆணையை மறுத்து ஓர் இறையேனும் உயிர் வாழமுடியாது துன்பமெய்தினர். தங்கள் சாதி சமையத்துக்குரிய ஒழுக்கங்களை அகத்தே மறவாதும் புறத்தேயதிகாரிகள் கட்டளையைச் சிரமேற்கொண்டும் நடிக்கலாயினர்.

அங்ஙனம் நிகழும் நாளில், வேண்டுவார் வேண்டுவதைக் கொடுத்துக் காக்கும் கருணைக் கடலானவர், பண்டொருகாற் சமணிருள் நீக்க வாகீச வள்ளலாரைத் தோற்றுவித்தருளியமை போலவே எமது அருமைக்குருமணியாகிய அறப்பெரு வள்ளலாரையுந் தோற்றுவித்தருளினார். அவ்வருமையை, ஆசிரியரவர்கள்பாற் கற்றுத்தேறிய மாணவர்கள் பலருள்ளும் பிற்றைநாட் பெரும் புகழ் படைத்த சுவாமி அம்பலவாண நாவலரவர்கள் பாடிய சற்குருமணிமாலை 141வது செய்யுளில்,

எந்நாட்டினுமுயர் தென்னாடு செய்தவிருந்தவத்தாற்
பொன்னாட்டினு முயரீழ நாட்டினிற் புரியு நல்லூர்
ரிந்நாட்டிருப்பவை வீடியைந்தோ வெனையென்று கொள்வை
கொன்னாட்டு மாறுமுக நாவல சற்குருமணியே"

என்னும் பாவின் பெருமையே வற்புறுத்தா நிற்கும்.

மேற்குறித்த ஒல்லாந்தவரசினர் கொடுங்கோண்மை தலையெடுக்கலாயிற்று. குடிகளிடத்து ஒருநாளைக்கு ஒரு காளைக்கன்று உணவுக்காகக் கொடுபடல் வேண்டுமென்று கட்டளையிட்டனர். குடிகளானவர் வேந்தனாணையை மீறி நடப்பார்களேல், அளப்பரிய தண்டமுண்டாகும். உடன்படின், மேலாகிய கொலைப்பாதகமுண்டாகும். இஃது அன்றி இயல்பாகிய தமது அறவொழுக்கங்குன்றும். தம்பின்னோர்களுக்கும் பெருந்தீமையைப் பயக்கும். எப்படியும் கீழ்மக்களது கொடுங்கோன்மையினின்றும் விலகுதலே தகுதியென்று கருதினார்கள்.

இவர்களுள் ஞானப்பிரகாசத்தால் ஞானப்பிரகாசமெனத் தம்பெயரை நாட்டியவரும், கார்காத்த வேளாண்குலதிலகருமாகிய ஒருபெரியாருளர். இவர் நல்லோர்புகழ் நல்லூர் என்னுந் திருப்பதியிலுள்ளவர். அறவொழுக்கம் பூண்ட அந்தணாளர். கொற்றவன் கோலின் கொடுமையினால் தாம்வாழுந்திருப்பதியினின்றும் விலகினர். ஆடப்பதஞ்சலியாரன்று தொழ அம்பலத்தேயாடப் பதஞ்சலியாத அழகர் திருநாமமே பெயராகக் கொண்ட தில்லையம்பதியை நண்ணிவசிப்பாராயினர். இவரது கான்முளையாகுங் கந்தப்பிள்ளைக்கு அரிய திருமகவாய்ச் சுத்த சாலிவாகன சகாப்தம் 4745 க்குச் சரியான சித்திரபானுவாண்டு மார்கழித்திங்கள் ஐந்தாம் நாளில்,

'தொல்லருளின் துளிததும்ப, தொன்மை நூல்களுஞ்சிறக்க,
நல்லறிஞர் மனஞ்சிறக்க, நாவல்லோர் நாப்புடைக்க,
பல்வளனும் பழம்பொருளும் பழம்பதியிற் பான்மைபெற,
நல்லருளென்றெல்லோரும் நாவார வாழ்த்தையிட'.

ஓர் தவச்சிறுவர் உதித்தனர்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற." என்றும்,
"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்" என்றும்
"மகன் றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை
என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"

என்னும் நொய்தினும் நொய்ய இவ்வருமைத் திருப்பாக்களுக்கேற்ப, மகப்பெற்றாரென்பதே சாலச் சிறப்புடைத்து.

உதித்த அப்பிள்ளைக்கு, தாய் தந்தையர்கள் உரிய பருவத்திலே செய்ய வேண்டிய சமையச் சடங்குகளை முறையாகச் செய்து முடித்தனர். "ஐயாண்டளவில் மையேடு கைபிடி" என்னும் பிரமாணப்படி அக்காலத்து மிகப் புகழ்பெற்றோருங் கியவரும் ஆசிரியத் தன்மைக்குத் தானோரணியாயுள்ளவருமாகிய சுப்பிரமணியரென்னும் ஆசிரியரிடம் கல்விபயிலவைத்தனர். முந்தை நல்வினையானது பிடர் பிடித்துந்த அறிவேயுருவமாயமைந்த எம்பெருந்தவச் செல்வர் வாக்குண்டாம் முதலிய நீதி வெண்பாக்களும், கணித நூன் முறைகளும், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களுங் கற்றனர். பின்னர் நைடதம், பாரதம், கந்தபுராணம், மறைசையந்தாதி, நன்னூல் ஆகியவைகட்குஉரையுங் கேட்கலாயினர்.

"ஒரு குறி கேட்போனிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபாடிலனே."

"முக்காற் கேட்பின் முறைபறிந்துரைக்கும்" என்னும் சூத்திரங்களை மான இரண்டாம்முறை கேட்டலாகிய கைகோளை யறவொழித்தார்.

'வினாதல் வினாபவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்"

என்னும் முறையை யனுசரித்தனர். தம்மோடொத்த மாணாக்கர்களுடன் வினாவிடை பகர்தலுக்குப் பதிலாகத் தாமொரு முறை கேட்டுத் தெளிவுபடுத்திய பாடத்தை மற்றைய மாணாக்கர்களுக்குப் படிப்பித்தலையே மேன்மையாகக் கொண்டனர். தம்மைப் போலவே ஏனைய மாணவர்களும் மனத்தூய்மையுடையவர்களாயும் பிறர்க்குதவி புரிதலே கண்ணுங் கருத்துமுடையவர்களாயும் வாழவேண்டுமென்னும் பேரவாவுடையவர். ஏற்ற வேற்ற காலங்களில் வேண்டிய சற்போதனைகளைச் செய்தலே தமக்கு அக்காலச்கடமைகளாகக் கொண்டொழுகுவாராயினர்.

இவ்வாறு கற்கும் காலத்தில் தம்மோடொத்த மாணவர்கள்
பலருள்ளும் இடையிடையே நேரும் வாதப் பிரதிவாதங்கட்கு
தாம் ஏகதேச நியாய முறையில் நில்லாது உள்ளத்தை யுள்ள
வாறே கூறுகின்ற உண்மையையும் நிலைநிறுத்தினர்.

இவரது கல்வித்திறமையையும் இடையறுவூக்கத்தையும்
பிறர்க்குப் போதிக்கும் வன்மையையும் தமைபனுராகும் தியா
கராசரென்னுங் குணக்கடலார் அறிந்தனர். வண்டடைந்த மல
ரிடத்துத் தேன் வறுமைகண்டு வேறுமலர் தேடியடைவதைத்
தாமுங் கருதினர். அக்காலத்துப் பெரும் புலமையெய்திய ஆசி
ரியர் வேலாயுதரென்னும் பெருந்தகைபார் மாட்டுப்பல பெருநூல்
களைப் பாடங்கேட்க ஒப்பிக்கப்பட்டனர். ஆங்குச் சின்னாட் பயின்
றபின் அரசபாஷையாகிய ஆங்கிலமும் பயிலவேண்டியது இன்றி
யமையாதது என்று கருதினர். அக்காலத்து ஆங்கிலபாடசாலை
யமைத்துக் காபித்த பீற்றர்பேர்சிவல் என்னுமாசிரியனுக்கனுக்
கராய்க் கற்றனர் எம்மநந்தவக் கொழுந்தனையார் ஆங்கில
மானது அரசமொழியாயும், அக்காலம் மிகமேலாய உத்தியோக
முறையைத் தாங்கியிருப்பதாயும் அமையினும், மெய்மையையும்
மேன்மையையுந் தரத்தச்கது தண்டமிழ்மொழியேயென்றுணர்ந்
தனர். மேன்மைதங்கிய ஆசிரியர்கள் சரவணமுத்து, சேனாதிரா
யர், என்னுமிருவர்களிடம் சென்று, நன்னூற் காண்டிகை,
விருத்தி, இரகுவம்சம், சிந்தாமணி முதலிய ஐம்பெருங் காவி
யங்கள, திருக்கோவையார், திருக்குறள், தொல்காப்பியமாகிய
அறத்துறை நிரம்பிய புலத்துறை நூல்களையும், யாவருமிணை
யில்லையென்று சொல்லும்படியாக நுண் மாண்ணுழை புலமிக்குக்
கற்றனர். பின்னர் சிவபுராணங்கள் பலவற்றையும், ஆலயங்களிற்
பிரசங்கஞ் செய்யலாயினர். இவரது ஆண்டிளமையையும் அறி
விற் பெருமையையும் பீற்றர் பாதிரியாரென்லுந் துரைமகனார்
நன்கு அறிந்தனர். தமது பாடசாலையிலிருந்து ஆங்கிலமும்
தமிழும் ஒருங்கு கற்பிற்கும்படி வேண்டினர். பொருளை விரும்
பாது சிலகாலங் கற்பிக்கலாயினர். இது சமயம் வயது பத்தொன்
பதாகும். பாதிரியாரும் பெருமகிழ்ச்சி பூத்து, கிறிஸ்து மத
நூலாகிய பைபிளைத்தமிழில் மொழிபெயர்த்துத் தருகவென்
றனர். அறிஞர்கள் போற்றத்தகுந்த வனப்புக்களமையப் பெயர்த்
துக்கொடுத்தனர்.

பிற மொழிகளிலுள்ள நுண்பொருள்களைத் தண்டமிழில்
ஐயந்திரிபற வமைத்துப் பல்லோராலும் போற்றவைத்தல் இலகு
வான காரியமன்று. இதுவே சைவசித்தாந்த சாத்திரங்களையும்
தேவாரமாதித் திருமுறைகளையும், பல வடமொழி நூல்களையுங்
செவ்விதினுய்ந்து பிறர்க்குபதேசிக்கும் பெருஞ் செல்வமும

மைந்த காலமாகும். இச்சம்பவங்கள் நிகழ்ந்தகாலத்து வயது
இருபத்திரண்டாகும். இவ்விளமைச் செவ்வியை நன்கறிந்த பாதி
ரியார் இவரைச் சென்னைக்கு அழைத்துக்கொண்டு போயினர்.
பைபிளின் தமிழ்மொழி பெயர்ப்பை அழுத்தகஞ் செய்ய முயற்
சித்தனர். வடவிலங்கையிற் பல்லோராலும் போற்றத்தகுந்த
விற்பன்னர்கள் இதுவரையும்வெளிவராமையாலும், மொழிபெயர்ப்பு
என்பது மிக அரிய பெரிய தொழிலாதலானும், இவ்விளசிற் பெரி
யாரால் இச்செய்கை இனிது நிறைதல் ஐயத்துக்கிடனாகும் என்று
அங்குள்ளார்கூறினர். தெள்ளுதமிழ் வல்லோர் பலர் குழுமிய பேர
வையில் தமது மொழிபெயர்ப்பு நூலை வாசித்து ஐயம், பதச்சேதம்
மொழிவேற்றுமை ஆகிய இன்னின்னவை காரணமாக உண்டா
கும் வினாக்களுக்குத்தக்க விடை பகருவரேல் எல்லோரும் மன
மகிழ்ந்து அச்சுவாகனமேற்றுதும், அன்றேல் விள்ளத்தகும்
என்றனர். இவ்வதிசயத்தைக்கேட்ட பாதிரியார் மனம் நைந்த
னர். இளநாவலர் ஒருவாறு ஆங்கில பாஷையில் உள்ளவற்
றைத் தண்டமிழில் மொழிபெயர்ப்பினும் பல்லோர் குழுமிய
பேரவையில் பெருமொழி வல்லபுலவர்கள் வினாவும் வினாக்க
ளுக்குத்தக்க விடை பகர்வரோவென வருந்தினர். இதனைக்
கண்ட அறிஞர் பெருந்தகை ஐயா! எனது மொழிபெயர்ப்பை
யிட்டு மனங் கவலற்க. எத்துறையினும், எக்கலையினும் நுண்
மாண்ணுழை புலமிக்க அறிஞர்களாயினும், அவர்கள் கேள்விக்
குத் தக்க விடைபகர்வல் என்றனர். பாதிரியாரும் மனமகிழ்ந்
தார். புலத்துறை முற்றிய மகாலிங்கையரைக் கூயினர். புலவ
ரேறே! இம்மொழி பெயர்ப்பு நூலைத்தாங்கள் நுண்ணிதினுய்ந்து
துணி பொருள் தருக வென்றனர். ஐயரவர்கள் குறித்த நூலைத்
தம் உள்ளச் சல்லடையிலிட்டு அரித்து ஒன்றொன்றாக வாய்ந்த
னர். இதுவே தகுந்ததென்றனர். இவ்வண்ணம் எக்காலமும்
அழுத்தகஞ் செய்தலே ஏற்கும் எனவும் கூறினர். இச்செய்
தியையறிந்த சென்னைமாநகர்ச் செழுந்தமிழ் வல்லோர் யாவரும்
முன்னர் இல்லாத உவகை கொண்டனர். ஈழத்து வடபாகத்துச்
செழுந்தமிழ் வழக்கானது தெள்ளிதினோங்கு மென்றனர். இத
னைக்கேட்ட நாவலரும் பாதிரியாரும், நூலை அச்சேற்றி மனங்
களிப்ப விழிகளிப்ப மாண்புறு தென்னிலங்கை நகர் மகிழ்ந்து
சேர்ந்தனர்.

இஃதிவ்வாறாக, தம்மோடுடன் கற்றாரிருவர் மறுமதம்புக்க
தறிந்து, அடிகள் மனம் வருந்தித்தக்க அறிவுரைகளைப் போதித்
துத் தடுத்தனர். இதனைக்கண்ட பாதிரியார் உள்ளம் தகதக
வென்று கொதித்து, புலவர் பெருந்தகையோடு சமயப்போர்
தொடங்கினர். நாவலரும் அதற்கு விடையாக, அது என் கடன்,

நும்கடன் நும்பணி செய்தலாகும் என்று துணிவுடன் கூறினர். இனி யான் நும் பணியினின்றும் அகல்வன் என்றனர். அதனைக்கேட்ட பாதிரியாரும் ஏறுகேட்ட அரவமென்ன ஏங்கினர். இத்தருணம் இவரை நீப்பின் வேறொரு தமிழ்மொழி வல்லாரை எங்கே தேடுவதென்று வருந்தினர். பழமையும் பண்பும்மிக்க நன்மொழி பல கூறினர். பண்டுபோலமரச் செய்தனர். அறிவழகரும் அதற்கொருவாறு சம்மதித்தார். அச்சமயம் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலானது சிவாகமநெறிக்கு மாறாகக் கடவுண் மங்கலஞ் செய்தமைகண்டு மனம்பொறாது, அவ்வாதீன கர்த்தரோடு பல வாதப்பிரதி வாதங்களை இயற்றுவாராயினர். தமது அறநெறியைக் கைக்கொள்ளாத ஆதீன கர்த்தரது துன்மதியை நினைந்து புன்முறுவல் பூத்தார். ஆங்குநின்று மகன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் வசந்தமண்டபத்தில் பேரவையொன்று கூட்டி, சொற்பொழிவாற்றியும், ஆற்றுவித்தும் ஒழுகுநாளில் வயது இருபத்தைந்து ஆயது. இச்சம்பவங்களைக்கண்டு அழுக்காறுற்றார் பலர் பாதிரியாரிடம் நண்ணினர். இனியெம் மதமழியும் நாள் வந்ததோ? என்று மனம் வருந்திக்கூறினர். இருமொழி வல்ல குரவர் வேறொருவரின்மையின் இவரே எமக்கு ஏற்புடையர், நீரகல்மின் என்றனர். நாவலரவர்கள் பண்டுபோலவே சைவப்பெருஞ் சொல் வழங்கலாயினர். இவ்வருமையினால் எம் சைவத்தமிழ் நாடானது எவ்வளவு பெருமையெய்தியதோ அவ்வளவு மனக்கொதிப்பு மெய்தியது. இது மக்களியற்கைபோலும். அத்தருணம் பாதிரியாரிடத்திலாற்றிய பொருள் வருவாயினையுடைய உத்தியோகம் முழுதும் நீங்கலாயது. அப்பொழுது வயது இருபத்தாறாகும். அக்காலத்தில் சமயநெறி தவறினோரை நேரிற்கண்டித்தார். பல கண்டனங்கள் எழுதினார். அறக்கருணை கொண்டொழுகினமையால் பலவிடங்களிலுமுள்ள கற்றோரும் மற்றோரும் பகைமையெய்தினர். "இடுக்கண் வருங்கால் நகுக" என்றமைக்கிணங்க எவ்வகைத் துன்பத்தையும் இன்பமாய் அனுபவித்தனர். இறைவன் திருவருளால் தம்மைப் பகைத்த சத்துராதிகள் அடுத்துப் பின்செல்லவும் குற்றேவல் புரியவும் நேர்ந்தது. பல ஏட்டுச்சுவடிகளைத் தேடி, பாடவழூஉக்களும் சொல்வழூஉக்களும் களைந்து அச்சிடலெவ்வாறென ஆலோசித்தனர். தம்மிடம்கற்ற மாணாக்கருள் தலைமைவாய்ந்த சதாசிவப்பிள்ளையையும் அழைத்துக்கொண்டு திருவாவடுதுறை நோக்கிச் சென்றனர். ஆங்குச் சிலநாட்டங்கி அறிஞர்கள் பலர்கூடி இலக்கிய இலக்கண தர்க்க முறைகளிலும், பல கலைத்துறைகளிலும் வினாவிய வினாக்கள் பலவற்றிற்கு ஏற்ற வேற்ற விடைகள் பகர்ந்தனர். இதனைக்கண்ட

ஆசாரிய மூர்த்திகள் அம்மடத்திலோர் சைவப்பிரசங்கஞ் செய்யும்படி வேண்டினர். உவகைபூர்த்த வுள்ளத்தையுடையவராகிய புலவர் பெருந்தகையும் மும்பொருளுண்மையும் முதற்பொருட்டலைமையும் பொருந்தும்படி அவையிலுள்ளார் மனங்குளிர்ந்து ஆச்சரியமடையப் பேசிமுடித்தனர். அறிஞர்கள் விதித்த அழகுபத்தும், உத்தி முப்பத்திரண்டும் பொருந்த உரைத்த இப்பேருரையானது மும்மையினும் முதன்மையுடையதென்று உபய சந்நிதானமும் மனமகிழ்ந்து "நாவலர்" என்னும் பட்டமாலையைச் சூட்டினர். அன்றுதொட்டு யாவரும் அப்பெயராலேயே அழைக்கலாயினர். அடிகளும் ஆங்குநின்று சென்னையை நண்ணுவாராயினர். சௌந்தரியலகரி, சூடாமணி நிகண்டு என்னும் இரு நூல்களையும் அச்சிற் பதிப்பித்தார். அங்குள்ள அச்சியந்திரசாலையொன்றை விலைக்குப்பெற்றுத் திரும்பினர். திருவண்ணாமலையிலுள்ள சின்னப் பண்டார சந்நிதானத்தைக் காணவேண்டியதனால் அங்கு நண்ணினர். ஆசாரிய மூர்த்திகளால் நன்கு உபசரிக்கப்பெற்றனர். பின் நாவலர் பெருமானின் கல்வித்திறமையையும் சமயத் தெளிவையும் மிகமிக மகிழ்ந்து நாவலோய்! தாங்கள் இவ்விடத்திற்றானே சில காலமிருந்து செல்லுதிரென்று வேண்டினர். அதற்கு விடையாகத் தாமெடுத்துக்கொண்ட சமயத்தொண்டானது அம்மடத்திற்றங்குவதற்கு இடையூறாகின்றதென்றும், மீண்டும் அவ்விடம் வருவலென்றும் சந்நிதானமவர்களது மனத்தைத் தேற்றி விடைபெற்றுத்தாம் பிறந்தவிடமாகிய யாழ்ப்பாணத்தை யெய்தினர்.

எய்திய அடிகள், தாம் கொண்டுவந்த அவ்வெந்திரக் கருவிக்கு "வித்தியாநுபாலனயந்திரசாலை" என்னும் பெயரைச் சிறப்புறத் தந்து, அதிற் சிலநூல்களை அழுத்தகஞ் செய்வித்தனர். சமயசம்பந்தமாகவும் சில நூல்களை வெளிப்படுத்தினர். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த பெரியாரனைவரும் இதினும் பார்க்கப் பெறற்கரும்பேறு உலகிலுண்டோவென்று ஆச்சரியமெய்தினர். இவ்வற்புதச செய்தி நிகழ்ந்தகாலத்தில் எம் மன்புடைத்தோன்றலுக்கு வயது முப்பது ஆகும். அச்சமயம் கிறீஸ்துமதவழுக்கள் சிலவற்றைத் திரட்டித் துண்டுச் சுவடியாகிய கும்மியை அச்சிட்டு வெளிப்படுத்தினர். கிறீஸ்து மதத்தினரது பொறாமையால் எப்படியுமந்த அச்சுயந்திரத்தை அகற்றிவிடுதலே தகுமென்று ஏற்ற தீங்குகளிழைத்தனர். இதனை அறிந்த நாவலரவர்கள் வச்சிரதண்டமென்னும் நூலை வெளிப்படுத்தினர். கிறீஸ்தவர்கள் முருகன் திருவுருவைப் பலவாறாக இகழ்ந்து ஒரு துண்டுச்சுவடியை வெளியிட்டனர். அது கண்டநாவலரவர்கள் முருகன் பெருமையையும் இருமருங்குந்

தங்கியிருக்கும் இச்சை கிரியையாகிய சத்திகளின் தன்மையையும், திருக்கையிற்பொருந்திய ஞான சத்தியாகும் வேற்படையின் செம்மையையும், மற்றைய திருக்கரங்களிலமைந்த கலாயுதக் கொடிமுதலாம் பதினொருபடைக்கலங்களும் பதினொருருத்திரராகுமென்பதன் திண்மையையும் ஒருங்கு அமைத்து "சுப்பிரபோதம்" என்னும் பெயரையுடைய நூல் ஒன்றை யாவரும் வியக்க வெளியிட்டனர். கிறீஸ்தவர்கள் முன்னரிலும் பன்மடங்கு மனங்கொதித்தனர். பலவகைச் சைவதூடனங்களை யெழுதிப்பரப்பினர். நாவலரவர்கள் "சைவ தூடனபரிகாரம்." என்னும் நூலொன்றை வெளியிட்டனர். இச்செயல்கள் நிகழுங்காலத்தில் நாவலரவர்களது நொது மலர் வகுப்பிலுள்ளாருட் சிலர்சென்று இல்லறவிரதத்தை அனுட்டிக்கும்படிக்கு வேண்டினர். நாவலரும் அந்தக்கேள்விக்கு எதிராகச் சிவார்ச்சனையின் பெருமையை எடுத்துக்கூறி இல்லோம்பலைக் கருதுதல் என் கடனன்று எனமறுத்தனர். சதாசிவப்பிள்ளையையுங் கூட்டிக்கொண்டு தமது ஆசாரிய மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் குருநாட்டையடைந்தார். பஞ்சசூத்திரவிதி தவறாது முற்ற முடிந்தபடி கலிங்கமொன்றை வாங்கிப் பிரதிஷ்டை செய்வித்துக்கொண்டனர். ஆங்குசிலநாள் தங்கி, பின் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். இவை நிகழ்ந்தகாலத்தில் வயது முப்பத்திரெண்டென்பர்.

தெளிந்து செயல்

தெளிந்து செயலென்பதனை ஆசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் தமது ஒழுகக நூலில் ஓர் அதிகாரமாக யாத்துள்ளார். கொல்லா விரதம், நுண்ணறிவு, மனவமைதி ஆகிய இவைகள் ஒருங்கமையப் பெற்றோரைத் தேவரென்றே பெரியோர்கள் கூறுவர். நானமுகப் புத்தேளோ வினைப்பயனின் விளைவு என்று சொல்லும்படியாகத் தோல் எலும்பு முதலாம் எழுவகைத் தாதுக்களினாலும் படைத்த இவ்வுடம்பு அழியாநிற்கும். தண்டமிழ்ப் புலவர்களாவார் தம் நுண்ணறிவின் பெருமையினால் துணித்துக்கண்ட மொழியாக்கம் முதலாம் பெருஞ்செய்கைகள் உலகுள்ளளவும் அழியாவாம். இக்கருத்தை நன்குதெளிந்த நந்தமிழ் விரகரானவர் வண்ணார்பண்ணையில் ஓர் சைவப் பாடசாலையையமைக்க நினைத்தனர். அதன் இருமைப் பயன்களையும் நன்குணர்ந்தவராகலின், அறிவாலும் உயர்வொழுக்கங்களாலும் சிறந்த பல பிரபுக்களைத் தெரிந்தெடுத்தனர். சமயக் கல்வியின் நன்மையை நன்கு விளக்கிக்காட்டினர்.

பற்பலவிடங்களிலுள்ள அறிவாளிகளுக்குத் திருமுகங்களும் வரைந்தனுப்பினர். அச்சமயம் கொழும்புநகர் வாசரும் மேன்மைதங்கிய பிரபு சிகாமணியுமாகிய திருவளர் செல்வன் நன்னித்தம்பி முதலியாரவர்கள் தமக்குக் கிடைத்த கடிதத்தின் பயனாக அவ்வித்தியா பரிபாலனத்தின்பொருட்டு நாற்சதச் செம்பொன் (நாலாயிரம் ரூபா) வழங்கினர். முதலியாரவர்களினது பொருளையே மூலதனமாக வைத்துக்கொண்டு பாடசாலையைக் கிரமமாக நடாத்தினர். சைவசமயப் பிரசங்கங்களையும் ஒழுங்காகச் செய்தனர். பிரசங்கங்களைக் கிரமமாகக் கேட்ட அறிவாளிகள் பலர் தங்களாலியன்ற பணங்களைக் கொடுத்துதவினர். அவ்வித்தியாசாலையினது பிற்கால நிலைமையைக்கருதி, ஓர் பெரிய வர்த்தகசாலையையும் விலைக்குப் பெற்றார். தம்மாணாக்கர்களுள் ஆறுமுகச் செட்டியார் கையில் இரண்டினையும் ஒப்புவித்து முன்போலத் திருவாவடுதுறையாதீனம் நண்ணினர். அம்மடத்திலும் பிறவிடங்களிலும் சைவப் பிரசங்கங்கள் செய்தனர். பின் தருமபுரவாதீனஞ் சென்று, மிக மேலாகிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். பின் திருவாசகம், திருக்கோவையாராகிய சைவ நூல்களையும், பல பிரதிகளையொப்பிட்டுப் பரிசோதனைசெய்து வழூஉக்களைந்து, தம் அன்புடைய மாணவ ரத்தினமாகும் சதாசிவப்பிள்ளை பெயரில் வெகுதூய்மைபொருந்த அச்சிட்டனர்.

இஃதிவ்வாறாக, அந்நாளில் நிலத்தின்கிழமையும் நிதியின் கிழமையும் ஒருங்கமைந்தவரும் புலவர் வரிசையிலுள்ளார்க்கு அவ்வவர் திறமைகண்டு, பொன்னும், மணியும், முத்தும், பூந்துகிலும் கொடுத்துதவுபவரும், வள்ளற்றன்மைக்கு உரிமைபூண்டவரும், இராசரீகத்திறமை மிக்குடைய அரசனுக்கு மேன்மைதொக்க மந்திரித்தன்மைவாய்ந்த பொன்னுச்சாமித் தேவரென்பவர், இவரது பெருந்திறமையை இவர் பதிப்பித்த நூல்களினால் அறிந்தனர். மிக்க ஆவலுடன் தேடியடைந்து அளவளாவி ஆனந்தங்கொண்டார். திருவள்ளுவர் பரிமேலழகருரை, தருக்கசங்கிரகம் ஆகிய இந்நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிடுக! யாம் பெருநிதிக்குவை தருவல் என்று வேண்டினர். உவகை பூத்த உள்ளத்தையுடையவராதலால், அத்திருத்தொண்டை இனிது நிறைபெறச்செய்து, தக்க அறிஞர்களைத் தேடி ஒவ்வோர் பிரதியனுப்பினர். அவ்வற்புதச் செய்கையை அஞ்ஞான்று அழுத்தகத்தின் செம்மையையும் நூல்களின் பெருமையையும் நன்குசூர்ந்து நோக்கிய உள்ளத்தினையுடையாராகும் திருவாவடுதுறை யாதீனத்து நமசிவாய மூர்த்திகளால் அறிஞர் பெருந்தகையென மதிக்கப்பெற்ற

வரும், தற்போது தமிழுலகிற்கு ஓரணியாகவுமுள்ள டக்ரர். உ. வே. சுவாமிநாதையரவர்களது ஆசிரியருமாகிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும், அவர் மாணாக்கர்கள் தியாகராசச் செட்டியார், சுப்புராயச் செட்டியார் ஆகிய இவர்களும் வியந்து கூறிய பாயிரச் செய்யுளை காட்டாநிற்கும்.

சிதம்பரம் சைவவித்தியாசாலை

சிதம்பரதலத்திலோர் சைவப்பிரகாச வித்தியாசாலையமைப்பதற்கு ஆசைகொண்டனர். அவ்வாறமைப்போர்க்குறும் பயனும், அதற்குப் பொருளுதவுவோரெய்தும் பெருநலமும் விளங்கவமைந்த பத்திரிகையைப் பரப்பினர். திருவண்ணாமலையாதீனத்திலெழுந்தருளியிருக்கும் ஆறுமுகதேசிகமூர்த்திகளறிந்தனர். ஓதுவார்கள் சிலர் மூலமாகவழைப்பித்து ஆங்கு சைவப் பிரசங்கத்தை நிகழச்செய்வித்து, இத்தொழிற்குரியாரிவரேயென்று பலர்க்குங் கூறினர். தமது உருத்திரசஞ்சியத்தை அருமைத் திருக்கரத்தாலெடுத்து நாவலர்பெருமான் திருக்கழுத்திற் சூட்டினர். பல உபசாரங்களைச் செய்துஅனுப்பினர். அடிகளும் துறைசைப் பதியிலுள்ள தமது ஆசாரிய மூர்த்திகளையடைந்தார். அத்தருணம் சற்குருவாகிய அம்பலவாணசுவாமியவர்களும், அவர் மாணாக்கர் சுப்பிரமணிய தேசிகரவர்களும் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபடி நாவலர் பெருந்தகைக்கு வேண்டிய அனுசரணையைச்செய்து இமைப்பொழுதும் விட்டுப்பிரியாது மூவருமொருங்கிருக்கலாயினர். சைவசித்தாந்த சாத்திரங்களையு மாராய்ச்சி செய்தனர். அவ்வாறு சிலநாட்கழிந்தது. அதன்பின்பு நாவலரவர்கள், இவ்விடத்திலிருந்து ஒரு சைவவித்தியாசாலையமைத்து, சைவப் பிரசங்கமுஞ் செய்தலே நன்றென்று ஆசாரியர் வேண்டினர். குருமொழியாதலால் எதிர்பேசாது மௌனமாகவிருந்து அவ்விடத்தினின்றும் ஒருவாறு நீங்கினர். திருநாகைக்காரோணம் எய்தி அவ்விடத்திலும் பல பிரசங்கங்களைச் செய்து முப்பத்தொன்பதாம் ஆண்டு நிரம்பிய பருவத்தில் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். சிதம்பரத்துச் சைவவித்தியாசாலையமைக்கும் நோக்கமாக வண்ணார்பண்ணையிலுள்ள பாடசாலையில் ஒரு சபை கூட்டி அதில் வித்தியாதருமம் என்னும் பொருளை நன்கு விளக்கிக்காட்டினர். அவ்விடமிருந்த பெரியார்கள் தங்களாலியன்ற பொருளுதவிசெய்தனர். அதுபோலவே பருத்தித்துறைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் மேற்குறித்த வித்தியாதருமம் போதிக்கப்பட்டது. ஆங்குள்ளார்களும் தங்களாலியன்ற பொருளுதவி செய்தனர்; அதற்குப்பின்பு வேத சிவாகம சம்பந்தமாகிய பிரசங்கங்களினால் வைதிகத்திற்கும் சைவத்திற்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்தியம்பலாயினர். அக்காரணத்தால் அங்குள்ள அந்தணர் சிலர்க்கும் அடிகட்கும் சமயப்போர் நிகழ்ந்தது. ஈற்றில் அந்தணர் நன்மையெய்தினர். அக்காலம் வயது நாற்பதாயது. தம்மாணாக்கனாகிய தில்லைநாதனை வித்தியாதரும பரிபாலகனாக அமைத்துத் தாம் சென்னபட்டினத்தை நோக்கிச் சென்றார்.

இராமநாதபுர வாதீனத்தில் தங்கினர். விசுவலிங்க தேசிகரது வேண்டுகோளுக்காகச் சிலநாள அங்கிருந்தனர். அச்சமயம் அப்பட்டினத்திற்கு அரசராய், கல்வி, செல்வம், கொடை, புகழ் ஆகிய இவைகள் ஒருங்கு அமையப்பெற்ற ஸ்ரீ ராசாதிராச பாஸ்கர சேதுபதியென்னும் பெருந்தகையாருளர். அவர் பெரிய தந்தையாராகிய பொன்னுச்சுவாமி நரேந்திரர்மாட்டுத் தாம் கொண்ட மனத்தாபங் காரணமாக வேந்தன்மாட்டுச் செல்வதைத் தவிர்ந்திருந்தனர். அதனையறிந்த அரசரும் கர்வங்கொண்டார். எவ்வகைப் பெரியராகவிருப்பினும் எம் நகரத்தில் வந்தவர், பல்லோர்களாலும் நன்குமதிக்கப்படுகின்ற எமது முன்னிலைக்கு வாராதகாரணமென்னை என்று வியப்பெய்தினர். தமது சமஸ்தான வித்துவான் ஒருவனை நாவலர் அவர்களிடம் தூது அனுப்பினர். தூதன் ஆங்குச் சென்று அருகிருந்து அன்புமொழி பல கூறினன். பின்பு அடிகளை விளித்துத் தாங்களின்னும் இந்நகரத்து அரசனைக் காணவில்லையோ? என்றனன். அதனைக் கேட்ட நாவலர் அவர்கள், அச்செய்கை நமக்கு உடன்பாடன்று என மறுத்தனர். ஒற்றனானவன், அடிகளே! எவ்வாறாயினும் அரசனைக் காண்பது நலம என்று மீண்டுசென்று அரசனுக்குணர்த்தினன். அரசனும் அதனைக் கேட்டவுடன் ஏறு கேட்ட அரவமென்ன மனஞ்சிதைந்தான். புலவனைப் பின்னும் நோக்கினான். இளநாவலர் இவ்விடம் வாராது செல்லின், எம் மாண்டகைக்கு ஏதமுண்டாகும். ஆதலின், நீர் இன்னும் ஒருமுறை சென்று நன்னாவலர்புகழ் செந்நாவலரைத் தம்மின் என்றனன். புலவனும் மறுமுறையும் நாவலர்மாட்டுச் சென்றனன். வழிபாடாற்றினன். அடிகளே! சொன்னயம் பொருணயம் மிக்கு விளங்கும் செந்தமிழ்மொழியைச் செவ்விதில் வளப்படுத்துந் தங்கட்கு, அடியேன் ஒரு கருமத்தையே மென்மேலும் கூறுதல் மிகையாகும். எனினும் அடியேன்மீது சினமுறாதீர்! நும்போன்ற நாவல்லவர்கள் எமது அரசனிடத்துஞ் செல்வது மரபு. அதனால், எய்தத்தக்கது புகழ், பொருள், பூசையாதியனவாம். ஞானபண்டிதராகிய அடிகட்கும் அது தக்கதேயாகும். யானும் அறிந்தவற்றை உள்ளவாறு கூறினேன் என்றான்.

அடிகளும் அவனை முன்னிலைப்படுத்தினர். புலவ! ஒரு பெரியவரை முறையாகச் சென்று காணுதல் விருப்பமில்லாத தருணத்தில் மேலும் மேலும் அதனையே சொல்வது நம்மனோர்க்கழகன்று. உமது புலமைக்கும் ஏதமுண்டாகும். யாமும் உமது வேண்டுகோளையேற்பின், எமது இருமைப்பயனுக்கும் ஏதமுண்டாகும் என்று மறுத்தனர். இதனைக்கேட்ட புலவனும் விரைந்து சென்று வேந்தர்க்குணர்த்தினன். வேந்தனே! மறுபடியும் சந்து செய்யும்படி வேண்டினன். அரசனின் கட்டளையை மறுக்க முடியாத புலவன் மறுநாளும் நாவலர் அவர்களையணுகினன். உள்ளதையுள்ளவாறு கூறுவதற்குச் சென்றவன் ஆதலின், தமது மன்னர்பிரானின் வலிமையையும் எடுத்துரைத்தனன். நாவலர் பெருந்தகையோ புன்னகையுடன் கேட்டுப் புலவ! இவ்வெற்றுரவாரத்திற்கு யான் அஞ்சேன் என்றும், அரசனிடத்துள்ள சில குற்றங்களை எடுத்துக்காட்டியும் மறுத்தனர். புலவன் உடனே திரும்பிச் சென்று அரசனையணுகி, அரசரேறே! நாவலர் தங்கள் ஆண்மையை மதிக்கின்றிலர். ஆதலின் தாங்கள் வேண்டியதைச் செய்தலே தகுதியென்றான். தனது ஆண்மையும், மேன்மையும் வலிகுன்றியதையுணர்ந்த அரசன் பின்னுங் கவலையுடனாலோசிக்கின்றான். என்னே! நாவலர்க்குக் கேடுசூழினும் குற்றம். மற்றைய வித்துவான்களும் மதியார்கள் ஆதலால் இதற்கு என்னசெய்யலாம் என்று மீட்டும் மீட்டும் நினைத்தான். ஓர் உபாயங் கருதினான். அதாவது, நாவலரவர்களைக் கொண்டு ஒரு சைவப்பிரசங்கஞ் செய்வித்து, அதனை இவ்விடமுள்ள புலவர்களினால் மறுத்துரையாடுவித்து வைணவ சமயத்தை மேன்மையாக்குதலே தகுதியாகும் என்று கருதிப் பரிகாசமாக ஒரு திருமுகம் வரைந்தனுப்பினான். அதனைக்கண்ட சைவப் பெருந்தகையார் புன்னகைபூத்தனர். "எழுத்துப் பிழையற எழுத முடியாத புலவர்கள்தாமோ எம்முடன் வாதம்புரிபவர்" என்று பரிகசித்து அனுப்பினர். அச்சங்கதியைப் பொன்னுச்சுவாமியென்னும் பெருந்தகையார் நன்கு உணர்ந்தார். ஒரு தகுந்த உபாயம் நினைந்தார். ஒரு திருமுகத்தில் "இளங்கன்றானது தன் தாயைப் பிரிந்துசெல்லின், அன்புடைய தாய்ப்பசுவானது மிக ஆர்வத்துடன் தேடியடைதல் வழக்காகும். அதுபோல யாமும் ஏதாவது சிறிய குற்றங்களைச் செய்யின், அதனைப் பொறுத்தல் நும்மனோர் கடனாகும்" என்று வரைந்து விடுத்தனர். அக்கடிதத்தைக் கண்ணுற்ற நாவலர் பெருந்தகையும் அன்பே காரணமாக ஒருவர் வலிந்தழைக்கும்பொழுது போதலே தகுதியாகும். அங்ஙனம் போகுஞ்சமயத்தில் ஆங்குள்ள அரண்மனை வித்துவான்கள் எவ்வித அபிநயங்களும் புரிதல் நன்றாகாது என்னும் உறுதி

யுடன் போதலே தகுதியென்று எழுந்துசென்றனர். பெரியாரின் வரவைக்கண்ட மன்னர் பெருந்தகை நன்றாக உபசரித்தனன். உயர்ந்த ஆசனத்திருத்தினான். அடிகளே! இவ்விடத்தில் ஓர் சைவப்பிரசங்கஞ் செய்தலே நலமென வேண்டினன். நாவலரவர்கள் இசைவுகொண்டார். தாயுமானசுவாமிகளாற் பாடப்பெற்ற சைவசமயமே மிக மேலானதென்றும், வைணவ சமயக் கொள்கைகள் நன்றன்று என்றும் பற்பல விற்பன்னர்கள் குழுமிய பேரவையிற் பேசிமுடித்தனர். அரசனும் மகிழ்ச்சியெய்தி ஒரு பொற்கிழியை அன்புடன் கொடுத்தான். பின்னும் மனமகிழ்ச்சியுடன் நின்று, அடிகாள்! ஏட்டிலுள்ள பல பெரிய நூல்களைப் பிழையறப் பரிசோதித்து அச்சிடுவதற்காகவே இந்நிதிக்குவையையுதவினேன் என்று பணிந்து வேண்டினன். நாவலரவர்கள் பொற்கிழியை அன்புடனேற்றுத் தமது விடுதிசென்றார். சென்றவர் மறுதினம் உத்தரகோசமங்கை மார்க்கமாக முத்தமிழும் முதன்மைவாய்ந்து விளங்கும் மதுரையம்பதியையடைந்தனர். அவ்விடமுள்ள சைவ நன்மக்களினதும் ஆதீனத்துத் தம்பிரானதும் வேண்டுகோளின்படி மேன்மைதங்கிய சைவசமய உண்மைகளை உபந்நியாசஞ்செய்தார். புதிய விருந்துபோன்ற உபந்நியாசத்தைக் கேட்ட அர்ச்சகர் அவர்கள் அம்மையாருக்குச் சாத்திய பரிவட்டத்தையும் மலர்மாலையையும் ஆசீர்வதித்துச் சாத்தினர்.

மறுநாட்பிரசங்கத்தில் அர்ச்சகரவர்கள சந்தோஷ மிகுதியினால் தமது செவியில் அணிந்துள்ள கேடகத்தையும் எடுத்துச் சாத்தினார். அவ்வதிசயத்தைக் கண்ட சின்னச் சந்நிதானம் அவர்கள், இலக்கணக்கொத்து, தருக்க நியாயம் ஆதிய நூல்களை ஐயமறக் கேட்டுத் தெளிந்தனர். அடிகளும் அவ்விடம் விட்டு நீங்கித் திருவண்ணாமலை ஆதீனஞ் சேர்ந்தார். பண்டார சந்நிதியாருடைய ஐயப்பாடுகளனைத்திற்கும் தக்கபடி தெளிவு கூறினர். கலைவல்லோர்களும், பௌராணிகர்களும் ஒருங்கு கூடிய பேரவையில் சைவசித்தாந்த நுண்பொருள்களை எடுத்து விரிவுரைசெய்தனர். இப்பேரதிசயத்தை மற்றைய ஆதீனங்களிலுள்ள தேசிகர்களும் ஓதுவார்களும் அறிந்து வேண்டிய உபசாரங்களைச் செய்தனர். நாவலரவர்கள் அங்குவிடைபெற்றுச் சென்று மறுமுறையும் மதுரைமாநகரையெய்தினர். தேவாரத்திருப்பதிகங்களை அச்சிட்ட இராமசுவாமியென்னும் சைவப்பெருந்தகையாருக்கும், வண்றொண்டச் செட்டியாருக்கும் திருவிளையாடல், நந்நூல் விருத்தி ஆகிய இவைகட்குச் சந்தேகந் தெளிவித்தனர் பின்பு அவ்விடம் விட்டுக் கும்பகோணம் எய்தினார். அங்குள்ள தேசிகர் அவர்கள் அறிந்து மகாவித்துவானாகும் மீனாட்சி சுந்தரப்பிள்ளையையும் சில ஓது

வார்களையும் ஒருங்குகூட்டி நீவிரனைவிரும் சென்று சைவ போதகராகிய ஆறுமுகநாவலரை அழைத்து வம்மின் என்றனர். எல்லோரும் ஒருங்கு சென்றனர். வழிபார்த்திருந்த அன்புக்கடலாகிய தேசிகர் அவர்களும் அருட்கடலாகிய ஞானபோதகரும் ஒருவரையொருவர் கண்ணாரக்கண்டனர் ஆனந்தங்கொண்டாடினர். தேசிகர் அவர்களின் விருப்பத்திற்கிசைந்து அங்கு சின்னாட்டங்கினர். புறமதத்தினர்களும் மெச்சும்படியாக இலக்கிய இலக்கணதர்க்க முறையிலுள்ள ஐயங்கட்கு ஏற்றவிடை பகர்ந்து, தில்லையம்பதியை நண்ணினார். தில்லையம்பதியின்மேலை வீதியில் சைவநன்மக்கள் தவந்திரண்டதோவென்று சொல்லும்படியாக ஒரு கல்விச்சாலையை அமைப்பித்தார். அங்குச் சிலகாலந்தங்கி ஏற்ற முறையாக மாணாக்கர்களுக்குக் கற்பித்தனர் தமது பாடசாலைக்கு ஏற்ற ஆசிரியரொருவரைத் தெரிந்து அவ்விடம் நிறுவி, திருநாகைக் காரோணம்நோக்கிச்சென்றனர். நாட்டுக்கோட்டை நகரவாசிகளாகிய செட்டிப்பிள்ளைகள் நாவலரவர்களின் மேலாகிய கல்வித்தொண்டை அறிந்தனர். அவ்வித்தியாதருமமானது என்றும் நின்று நிலவச் சித்தங்கொண்டு பொற்றுவையீந்தனர். அதனை வித்தியாசாலையின் பிற்கால நலத்திற்காகப் பக்குவஞ்செய்தனர். தில்லைவாழந்தணர்கள் பொறாமை மிகுதியினால் பல தீயகருமங்களைச் செய்தனர். நாவலரவர்கள் அவ்வத்தீங்குகட்கு ஏற்றவிடைகளை அந்தந்த நேரத்திலேயே பகர்ந்தார். தில்லையம்பதியின் பெருமையைக் குறித்துப் பல பிரசங்கங்களைச்செய்து பின்சென்னையை நண்ணினர். அங்குள்ள கருங்குளி இராமலிங்கபிள்ளை என்னும் அறிஞருடன் பற்பல வாக்குவாதங்களைச் செய்து வெற்றிபெற்றார். தமது நாற்பத்தாறாவது வயதில் பள்ளிச் சிறுவர்கள் மனமகிழ்வுடன் கற்கக்கூடிய வசனநூல்களை முதல் நூல்களின்படி வகுத்தனர், அதுவே மூன்றும் பாலபாடமாகும். அப்புத்தகத்துடன், வாக்குண்டாம, நல்வழி, நன்னெறி ஆகிய ஔவை அறநூற்களையும் கூட்டி அச்சிட்டனர். பின்னர் திருவிளையாடல் கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய பெருநூல்களை வசனரூபமாக இயற்றி அச்சிட்டனர். சேதுபுராணம், இலக்கண விளக்கச் சூறாவழி, இலக்கணக்கொத்து, தொல்காப்பியப்பாயிர விருத்தி, வேறுசிலசமயநூல்களையும் பரிசோதனைசெய்து அச்சிட்டார்.

சமயசம்பந்தமாக, சைவத்தமிழ் நாட்டுக்குச் செய்ய வேண்டிய பிரசங்கங்கள் பலசெய்தனர். சேது புராணம், சைவசமய நெறி ஆகிய இரு சைவநூல்கட்கும் உரையெழுதி வெளியிட்டனர். பின்பு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து அக்காலத்

திற்கு இன்றியமையாத சமயத்தொண்டுகளை எக்காலமும் நன்மை பயக்கக்கூடியனவாகச் செய்தனர். கோப்பாயிலும் புலோலியிலும் அமைந்துள்ள இரு சைவ ஆங்கில வித்தியாசாலைகட்கும் தம்மாலியன்ற உதவிகளைச்செய்தனர். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலும் சிற்சில திருத்தங்கள் செய்தார். பள்ளிச்சிறார்கள் இலகுவாகக் கற்கக்கூடிய முறையாக, இறைவன் திருவருளினால் உதவிய முதனூல்களின் சாரத்தை, முதலாம் இரண்டாம் சைவ வினாவிடை, இலக்கணச் சுருக்கம், சிவஞானபோதச் சிற்றுரை, சிவராத்திரிபுராணம் ஆதியனவற்றையியற்றியும், பரிசோதித்தும் அச்சுவாகனமேற்றினர். யாழ்ப்பாணத்திலுள்ள சைவத்தமிழ்மக்களின் நன்மையை நாடித்துறை சையாதீனத்திலிருந்து ஓதுவார்மூர்த்திகள் சிலரையழைப்பித்துப் பன்னிருதிருமுறைகளையுங் கற்பித்தனர். நைடதம், திருவிளையாடல், நன்னூல் விருத்தி முதலியவற்றைத் திருத்தி, இன்றியமையாத விளக்கங்களுடன் அச்சேற்றினர். "உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்னும் அருமைத்திருவாய் மொழியைக் கையாட்சி செய்பவராகிக் காலமழையின்றிப் பசியால் வருந்திய ஏழைகட்கு அன்னபானீயம் உதவினர். 56 வயதும் 11 மாதமும் நிறைந்த பிரமாதியாண்டு கார்த்திகைத்திங்கள் 21 ம் திகதி மகநாள், வெள்ளிவாரம் சத்தமிதிதி இரவு நாளிகை 15 ல் இறைவன் திருவடிநிழலை எய்தினர்.

இத்திருவருட் புலவரைக் குறித்துப் பாடிய புலவர்களாவார், சென்னபட்டினம் ம. ரா. ரா. ஸ்ரீ சி. வே. தாமோதரம்பிள்ளை, உடுப்பிட்டி ம. ரா. ரா. ஸ்ரீ அ. சிவசம்புப்புலவர், கும்பகோணம் ம. ரா. ரா. ஸ்ரீ பூ. முருகேசபிள்ளை, நீர்வேலி ம. ரா. ரா. ஸ்ரீ சிவப்பிரகாசபிள்ளை, ஆவரங்கால் ம. ரா. ரா. ஸ்ரீ நமச்சிவாயபிள்ளை, சுன்னாகம் ம. ரா. ரா. ஸ்ரீ அ. குமாரசாமிப்பிள்ளை, ஊரெழு ம. ரா. ரா. ஸ்ரீ சைவ உதையபானுப்பத்திராதிபர், சு. சரவணமுத்துப்பிள்ளை, மல்லாகம் பிரம்மஸ்ரீ சி. செந்திநாதஐயர், கொக்குவில் ம. ரா. ரா. ஸ்ரீ சபாரத்தினப்பிள்ளை, திருநெல்வேலி ம. ரா. ரா. ஸ்ரீ க. வேலுப்பிள்ளை ஸ்ரீ ல ஸ்ரீ திருநெல்வேலித் தண்டபாணிசுவாமிகள் நாவலர் அவர்களுடைய மருகரும், மாணாக்கரும், வித்துவசிரோன்மணியுமாகிய ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை ஆகிய இவர்களும் இன்னும் பல அன்பர்களுமாகும். இப்பெரியார்களின் பாடல்களுள் உரிமையே பற்றுக்கோடாக எமது ஆசிரியர் அவர்கள் ம. ரா. ரா. ஸ்ரீ அ. குமாரசாமிப்பிள்ளை பாடல் ஒன்று தருகின்றாம். வினாவுத்தரவெண்பா.

"ஐந்தின்பின்னுவதென்ன வானனத்தின் பேரென்ன
மூந்துநேவின் மொழி யென்ன—விந்திரற்கு
மாறுகொண்டோன் பேரென்ன வாக்கின் மிகவல்ல
வாறுமுக நாவலனே யாம்"

6ம் பாடம்.

பனையின்பயன்.

இது பனையினது நுகர் பொருளனுபவ மென்னும் பொருளில், ஆறும் வேற்றுமை உருபுதொக்கு இன்னிசை நிறைக்க வந்த இன்னென்னும் சாரியையுடன் நிறைவுபெற்றது.

தேவர்கள் வசிக்கும் பொன்னுலகிலுள்ள கற்பகமரமானது சென்றடைந்தார்க்கு விரும்பிய பொருட்களை யெல்லாமுதவும் என்பதைப் பலபெருநூல்களெல்லாம் விதந்தோதாநிற்கும் தேவருலகவாழ்வானது, முழுதும் புண்ணியப் பயனுடையார்க்கே உரித்தாம். யாம் வசிக்கு மிப்பூவுலகமானது புண்ணியமும் பாவமுங்கூடியனுபவிக்கும் மிச்சிரமாகிய கலப்பு அனுபவத்திற்குரிய இடமாகும். ஆதலின் பொன்னுலகத்துள்ளார் துய்க்கும் கற்பகதருவையொத்து, இம்மண்ணுலகத்துள்ளார் துய்க்கப் பனை யென்னும் பெரும்புல்லையும் இறைவனே அருளின் நீர்மையாயமைத்தன னென்கை ஆன்றோர் பலர் துணிபு.

இதனை ஆங்கிலத்திற் (Palmyrah) 'பல் மேறு' என்றும் சிங்களத்திற் 'தால்' என்றும் தெலுங்கிலுங்கன்னடத்திலும் 'தாலி' யென்றும் மலையாளத்திற் 'றுல' மென்றும் வழங்குவார்.

பனையானது உருவத்தால் மிக நீண்டு பருத்திருப்பினு மின நோக்கிப் புல்லென்பதே பெரியோர்துணிபு. இக்காலத்திற் பலபுதிய முறைகளைக் கையாடி, வசனரூபமாகவுஞ் செய்யுள் ரூபமாகவும் நூலியற்றுவோர்களுட் பெரும்பான்மையோர்கள், "பனைமரம்" என்றுபலவிடங்களிலுமெடுத்தாழுகின்றனர். இதனைக் காவிய உறுப்பு நனி சிறந்து விளங்கும் சிலப்பதிகாரத்துள் "தாலப்புல்லிற்றந்திடுதவிசின்" என இளங்கோவடிகளெடுத்துக்கூறினர். முன்னோர் வழிச் செலவும் பெரியோர் கடனாகும். ஆங்கில மொழி விற்பன்னர்கள் சிலர், "The Palmyrah tree" என்று வழங்குகின்றனர். அங்ஙனங் கொள்ளலை இந்நாகரீக உலகமேற்குமெனினும் "The Palmyrah Palm" என்றே வழக்காற்றிலமைத்துக் காட்டல் தகுதியென்று இருபெரும் மொழிவல்ல அறிஞர் கூறுநிற்பர். இத்தகைய பெருமைவாய்ந்த பனையென்னும் பெரும் புல்லின் பெருமையைக் கூறுவதும் பெருமையேயாகும்.

பயிரிடுதலும்பருவமும்.

மக்கள் கார்ப்பருவமாகிய ஆவணி புரட்டாதிமாதங்களில், பன்னிரண்டங்குல ஆழமுள்ள ஒரு கிடங்கைவெட்டிப் பனங்கொட்டையைப்புதைப்பர். ஏறக்குறைய எட்டுமாதங்களில், அக்கொட்டையினின்றுந் தோன்றியமுளையானது, இளங்குருத்தையீனும். இதுவே அதன்வளர்ச்சியைக் காட்டும் முதற்பருவமாகும். தென்னை முதலியவைகளைப்போன்று, எருவிடல் நீர்ப்பாய்ச்சல்களின்றித் தானாகவே வளருந்தன்மையை நோக்கின் வெகு அதிசயமாகும். மிக்கவைரமுள்ள மூக்கினால் ஒருவகை வண்டானது, இழங்குருத்துக்களைக்கறிக்காது காப்பாற்றின் அதுவே பேருபகாரமாகும். இவ்வாறு ஓராண்டுகழிந்தபின் நம்நாட்டினர், வடலி என்னும் பெயரினால் வழங்குகின்றனர்.

பனையின்கொட்டையைப் புதைத்த நிலமானது, மருதமுமதனைச் சார்ந்துமிருப்பின் பன்னிரண்டாம், பதினைந்தாமாண்டுகளில் நற்பயனையுதவும். நெய்தலே பனைக்குரியதென்றுகூறுவாருளர். "பனையும் பெண்ணும் பன்னிரண்டாண்டிற்பயன்" என்னும் பழமொழியுமுய்த்துணரற்பாலது. இளமைகழிந்து முற்றியவுடன் கங்குகடாமாகவே யுதிரும். இப்பருவத்தைக் கங்கொடியும் காலமென்பர். ஏறக்குறைய முப்பதாமாண்டளவிலிந்நிகழ்ச்சியுண்டாகும். இத்தகையசெய்கைகணடைபெறுங் காலமே, வளர்ச்சிக்கு அளவுகூறத்தக்ககாலமாகும். ஏறக்குறைய அறுபதடி உயர்ந்துவளருந்தன்மையுமுண்டு.

வேர்

பனையினடியிலிருந்து கற்றையாக நிலத்துட்செல்லும் பாகமே வேராகும். இவற்றுட் சரிந்து செல்லும் வேர்களானவை இருநூறு யாருக்கு மேற்படச் சென்று, களிமண்ணையுங் கற்களையுமூடுருவித் தங்களுக்கு வேண்டிய எருமுதலாமுணாக்களை உண்ணுதலோடு பல நூற்றாண்டுகட்குயிர் வாழக் கூடியதான தன்மையையும் நுகருகின்றது. கீழ்நோக்கிச் செல்லும் கிளை வேர்களானவை, நிலத்தினதுபண்பிற்கேற்ப, வயிரக்கற்களையு மூடுருவிச் சென்று தண்ணீராகிய நுண்ணுணவையுமதிற் சம்பந்தப்பட்டிருக்கின்றவாயுக்கள் சிலவற்றையும், தேவையான உப்புணாக்களையும்நுகரும். . இக்காரணத்தினாலேயேபாலை

நிலத்திலாயினும் பனை இலகுவிற் படுதலருமையாகும். மிகவும் நீண்டகாலத்திற்கும் உயிருடனிற்குங்காரணமுமிது வென்பர். இவ்வேரானது நுண்ணியதும்புகளடித்தெடுத்துப் பல்வகைத் துடைப்பங்கள் செய்ய உதவுகின்றது.

பயனளிக்கும் முறை

சுருங்கச் சொல்லின் பனையானது, பாதாதிகேசம் வரையிலும் நற்பயனையே உதவா நிற்கும். தலையானும் பயனளிப்பது தென்னையெனினும், பனையின்பயனை நிகராதென்பதே, ஆய்ந்தறிந்த பெரியோர் கொள்கையாகும்.

கங்குமட்டை

பருவம் முதிர்ந்து தானாகவுதிர்ந்த பிளவுள்ள மட்டையே கங்குமட்டையாம். இது பயிர்களுக்கெருவாகவுமுபயோகப்படும். கங்குகளினின்று உதிர்த்தெடுக்குந் தும்பானது, இக்காலமுறைக்கு ஏற்ற, பலவகைக் கூட்டுமாறுகளை யமைப்பதற்கு பேனுட்டாரால் மிகவும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எம்நாட்டிலுள்ள செல்வமகளிரல்லாதார் விறகாகவும் பாவிக்கின்றனர்.

ஓலை

தலையாலீனப்பெற்ற குருத்துக்கள் விசிறிவடிவமாக விரிந்து முற்றி விளங்குவதே ஓலையாகும். இதுமாடுகளுக்கேற்றனவும் விருப்பம் மிக்கனவுமாகிய உணவாகின்றது. வீடுவேய்வோர்களுஞ் சுகத்தை விரும்பிற் பனையோலையினாலேயே வேய்கின்றனர். பண்டைக் காலந்தொடக்கம் கீழ்நாட்டாருக்கும், சிறப்புவகையிற் றமிழ்நாட்டாருக்கும், ஏடாகியது மோலையேயாம். தளப்பத்து ஓலையும் தொழில் முறையில் பனையை யொத்திருப்பினும், இதழினிருபக்கங்களிலும் வரைவதற்குப் பனையோலையே சிறந்ததாகும். இவ்வாறுபனையோலையிலெழுதப்பெற்ற புலத்துறைமுற்றிய அறத்துறைநூல்களளப்பரியனவாகும். உலகில் வாழும் மக்களுக்கெல்லாம் தாயகமாகவுள்ளோர் பயிரிடுவோர்களாவர். பயிரிடுவோருக்கு இறைக்கும்பட்டையும், பனையோலையினாலன்றிமற்றெதனாலுமாகாதென்பது நேரிற்கண்டதுணிபாகும். கிணறுகளிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதற்குப் பீலிப்பட்டை போன்று வேறு எப்பாத்திரங்களு மொவ்வாதனவாகும். மக்கள் காலத்திற்கேற்பப் புதிய நாகரீகங்களை ஒழுகலாற்றிலமைத்தனர். அதனாலருமையும் பெருமையு முருசியும் வாழ்க்கை நலமும் ஒருங்கமைந்த உணாக்கள் பலவற்றையுமொதுக்கினர்.

தண்ணீரிறைக்கும் பீலிப்பட்டையை எவ்வாறு ஒதுக்கினும், பழைமைவாய்ந்த பனையோலைப் பட்டையே பண்புடைத்தாகும். உண்கலங்கள் பலவும், தொப்பிகள், குடைகள், விசிறிகள் செய்வதற்குமேற்ற பெட்புடையது பனையோலையேயாகும். வீட்டுப் பாவனைக்குரிய பெலமுள்ள பெட்டி முதலாம் பாத்திரங்களும், இளைப்பதற்குப் பனையோலையே இன்றியமையாததாகும்.

ஈர்க்கு

ஓலையினின்றும் பிரித்தெடுக்குமீர்க்கானது, அதிகபெலமுள்ள ஈர்வாணிக்கொடி செய்வதற்கும், வீட்டினடுக்களைக்கின்றியமையாத, சுளகு, சல்லடை முதலாம் பாத்திரங்கள் செய்வதற்கும், வீடுவேய்வதற்கும் அழகிய தலைவாரப்பட்டை (ஓர் வகைத்தொப்பி) செய்வதற்கு மின்றியமையாதது.

மட்டை

ஓலையினின்றும் வெட்டி யகற்றும் மட்டையானது, சணல், ஆத்திநார்களிலும் பெலமுள்ள நார்களையுதவும். மக்களானோர் அந்நாரினாற் பலவகைக் கயிறுகளை முறுக்கியும், கடகம் கூடை முதலாம் பாத்திரங்களைச் செய்தும் மகிழ்வர்.

பண்ணாடை

இது பண்டைநாட்டொடக்கமின்றளவும் அட்டிற்றொழில் செய்வோர் மிகச் சுலபமாக நெருப்பு மூட்ட உதவுகின்றது. நாகரீகமக்க ளிருப்பினாற் செய்த வடிகருவிகளிற் றேநீர் காப்பி முதலியனவற்றை வடித்து மகிழ்வெய்துகின்றனர். நெருப்பு மூட்டுங்கால் மண்ணெண்ணையையுமுபயோகிப்பர். இயற்கை வளனறியாத பட்டினவாசிகளும், சுகாதார பரிசோதகர்களும் வசாகைங்கரியம் பேசுமபிமானிகளு மிதனை நன்காலோசிப்பார்களாக.

நுங்கு

சுவையுணவை விம்புவோர் தந்நாவிற்கிதமளிக்கவேண்டின் நுங்கையே விரும்பி யுண்பர். நுங்கென்பது, பனங்கொட்டையினுள்ளிருக்கும் வித்தின் இளம்பருவமாகும். வஸ்து நிச்சயம்செய்வோர் உலகிலுள்ள பொருட்களை மூன்று பெரும் பிரிவாகப் பிரிப்பர். அவை, மிகக்கடினமானபொருளொன்று, நீர்த்தன்மையுடையதொன்று, இவ்விரண்டனுக்கு மத்தியில், காலின் தன்மையுடைமையும், அதிக நெருக்கமில்லாத பரமாணுக்களையுடைமையினாலியாண்டு முட்செல்லக்கூடியதுமான பொரு

ளொன்று. யாமெடுத்துக்கொண்ட நுங்கெனில், முற்கூறிய மூவகைப்பொருளும்போலாகாது, பனிக்கட்டியை யுருக்கிய நீர்போன்ற வழுவழுப்பமைந்த நீருடன் கூடிய அங்குரதளத்தைத் தன்மாட்டமைத்துக்கொண்டுள்ள இருபிளவுகளையுடைய சீதளப்பொருளேயாம். இது இக்கால ஆராய்ச்சிவல்லுநர்களுக்கு மிக ஆழ்ந்த முபற்சிக்கேதுவாகவிருக்கின்றது. இதன் நீரானது வேர்க்குருவைமாற்றவும் பசியை யுண்டாக்கவுமுபயோகிக்கப்படுமென்றும், கயருடன் கூடிய நுங்கானது, சீதபேதியைமாற்றுமென்றும் மருத்துவநூலார் கூறுநிற்பர்.

பனம்பழம்

நாவுக்கதிகதித்திப்புச் சுவையைக் கொடுக்கக்கூடிய பழங்களுட் பனம் பழம் மிகமாண்புடையது. இதனை வேளையுணவாகமகிழ்ந்துண்டு, உயிர் வாழ்ந்தமக்கள் பலர் இந்நல்லமிழ்தை யொறுத்து ஒதுக்குகின்றனர். உண்ணுமுறையில் மற்றைய பழங்களைப்போலாகாது, வலிந்துபயனளிக்குந்தன்மையினாலென்பர் சிலர். கைகளிரண்டும் வாயுங்கூடி யொன்றுபடவுண்பதினாலென்பர் வேறுசிலர். காலத்திக்கேற்க இந்நறும்பழத்தைச் சிறுச் சிறுத்துண்டுகளாக நறுக்கி வள்ளங்களிலிட்டு, ஐரோப்பியமுறையேபோன்று காண்டி முட்களாலுண்பது சாலச்சிறப்புடைத்து! அரும்பெரும்பழங்களை, உப்பும் தேங்காய்ப்பாலும், பயிற்றம்பருப்புமிட்டு அவித்து ஆறவைத்துண்கவென்று தரலவிலாசநூலுடையார் கூறுவர். இதுவே சார்வாய்ப் பனங்காயென்று வழங்குகின்றது. இக்காரணத்தினாலன்றோ எம்முதியோர்கள் தத்தமுணவுக்கேற்ற நறும்பழங்களைக்கொடுக்கின்றபனைகட்குத் தோரை, கருப்பை, செருக்கலி, காறலி, தேனி, பூமணத்தி முதலாம் பெயர்களையுமிட்டு வழங்குவர்.

பழத்தை நன்றாகக் கசக்கிப் பிழிந்த சாற்றைப்பின்னுஞ் சுத்தப்படுத்திச் சம்பா அரிசிமா அல்லது தினையரிசிமாவுடன் கூட்டி, வெல்லம், தேங்காய்ப்பால், பருப்பிடி இவற்றுடன் கூட்டிப்பிசைந்து இருப்பை நெய்யிற் பொரித்தெடுத்துப் பல நாட்களுக்கு வைத்துண்ணல் வழக்காறாகும். இதுவே, பனங்காய்ப்பணிகாரமாகும்.

மேற்கூறிய சாற்றைத் தினையரிசியுடன் சேர்த்துப் பொங்கலாகப்பொங்கி உண்பதுமுண்டு. இதற்குத்தேங்காய்ப்பால் கூட்டுவாருமுளர். இவ்வுணவைப்பனங்கனிப் புற்கையென வழங்குவர்.

மேற்கூறிய சாற்றைப் பனையோலைப்பாயின் மீது தடவுவர். அந்தக்கழியானது சூரிய வெப்பத்தினாற் காய்தலடையும். நாடோறு மிவ்வண்ணஞ் செய்து முக்காலங்குலக் கனதிகண்டபின் பாயினின்றும் பிரித்தெடுப்பர். இதனைச் சிறு கூடைகளிலடக்கிப்புகைப்பரணிலிட்டுக் காப்பாற்றுவர். இவ்வரிய முறையானது எம்மிந்திய மக்களின் கையாட்சியிலகப்படாததும் ஆச்சரியமாகும். பனை + அட்டு = பனாட்டு என்னும் விதியை நன்னூல் முதலாம் இலக்கண நூல்களிற்காணுமிடத்து, இப்பொருளியாண்டுள தெனவினவுவாருமுளர். பனாட்டின் பெருமையையுணர்ந்த மருத்துவநூலாரும், இவ்வமிழ்தத்தைத்தினந்தோறும் நேரமறிந்துண்கவென்பர். கரப்பான், அழுகிய கிரந்தி, நீர்க்கடுப்பு, பித்தவாயுவினாலுண்டான தீமைகள், தலைக்கனமாதியன தீரும் நோய்களாம். எம்நாட்டிலுள்ள அறிஞர்களும், பணக்காரர்களும், பதநீர்ப்பாணியுடன், மட்டாகத்தேனுங்கூட்டி மிளகு சீரகங்களுடன் பாணியாக்கிப் பதமாகக் காய்ச்சி யிறக்குவர். முற்கூறிய பனாட்டை ஓரங்குலச் சதுரங்களாக நறுக்கிப் பதங்கண்ட பாணியுடன் சேர்த்துப் பழம் பாண்டத்திலிட்டு வைப்பர். இவ்வுணவானது ஐந்து வருடங்கள்வரை நிலைபெற்றிருக்கும். இதுவே பாணிப்பனாட்டாகும்.

பனங்கிழங்கு

காய்ந்துலர்ந்த கொட்டைகளை, ஆவணி புரட்டாதிமாதங்களிற்பாத்தியிலிடுவர். மார்கழி, தை மாதங்களிற்கிழங்குகளையகழ்ந்தெடுப்பர். தோல் நீக்கியவற்றை வெதுப்பியுமவித்துமுடனுணவாகவுண்பதுமுண்டு. வேண்டுவனகூட்டித்துவைத்துண்ணலும் வழக்காறாகும். இவ்வருமையான உணவை, வைத்தியநூலுடையார், பித்த மேகம் முதலாம் ரோகங்களையகற்றிக் குளிர்ச்சியும் வனப்புமுண்டாக்கத் தினந்தோறு முண்கவென்பர். கிழங்கை ஒடியலாகப்பதனிடுதல் மூன்று பெரும்பிரிவுளடங்கும். ஒன்று, பீலியுந் தோலுந் தும்பும் நீக்கி வெயிலிலுலர்த்துதல். இதனை மாவாக்கிப் பிட்டாகவுங் கூழாகவுமுண்ணல் வழக்கு. பண்டைக்காலத்து மக்கள் செல்வர்களாயினுமிவ்விரு உணாக்களையும் வேளை உண்டிகளாகப் பாவித்து இனிது வாழ்ந்தனர். இக்காலம், பொழுதுபோக்குணவாக மதிப்பர் சிலர். பெயர் கேட்பின் செவிபொத்துவாரும் சிலர். மலச்சிக்கலையகற்றிக் கிருமிகளை நீக்குவதற்கு இவ்விரு உணாக்களுஞ் சாலச்சிறந்தவைகளெனச் சங்கைபோந்த மருத்துவவல்லோரனுமதியிட்டுரைப்பர். இரண்டாவது, மருத்துவர்கள், சீந்திற் சர்க்

களை யெடுக்கும் முறையானது, நொய்தினும் நொய்யதாகும். அதுபோலவே, பச்சைக்கிழங்கை நன்றாகச் சுத்தப்படுத்திக் கல்லுரலிலும், வேப்பமுரலிலுமிட்டு, நொறுங்கவிடிப்பர். அவ்விடியை, நீரிற்கரைத்து நன்றாக அகன்ற தாம்பிரமட்பாத்திரங்களில் வடித்தெடுத்து வெயிலில் வைப்பர். பருதியின் வெம்மைகாரணத்தால் நுண்பொருளாகிய மாவானது பாண்டத்தினடியிலுறையும். நீரைமிருதுவாகவிறுத்து ஈற்றிற் சுண்டக் காய்ந்திருக்கும் மாவைப்பக்குவப்படுத்திக் கொள்வர். ஆய்ந்தமைந்த ஆயுள் வேதியர்கள், ஆறுமாசங் கழிந்த பாலர்கட்கு ஏற்ற உணவாகக்கொடுப்பி னுணவுப்பயனுடன் மருந்துப்பயனுமொருங்குண்டாமென்பர். முலைப்பாலின்றேற்றம்மக்களை வளர்க்க விரும்புஞ் தாய்மார்கள், இம்மாவை நன்றாக விரும்பியுண்ணல் நலம். இக்காரணத்தினாலுமெம்முன்னோர்கள், சரீராரோக்கியம் பெற்று நெடுங்காலம் பெலமுற்றிருந்தன ரென்றெண்ணல்மிகையாகாது. மூன்றாவது, கிழங்கைப் பதமாகப் புழுக்கிச் சுத்தஞ் செய்வர். வட்டித்த சிறுத்துண்டுகளாக நறுக்கி வெயிலிலுலர்த்திக் கொள்வர். இது ஏறக்குறைய இரண்டு மூன்றாண்டுகட்கு நல்லுணவாக வைத்துண்ணலேற்புடைத்து.

கள்ளு

பனையின் பாளையைப் பதஞ்செய்து, மதநீரைப், பதப்படுத்திய பாளையின் மூலமிறக்கி எடுப்பதே கள்ளாகும். இவ்வியாசத்தின் றலைப்பிற் பனையைக் கற்பகதருவுக்கு ஒப்பிடலாமென்று கூறப்பட்டிருக்கின்றது. கற்பகதருவோ!! சென்றடைந்தார்க்கு அமிழ்தம் முதற்காஞ் சிரங்காயீறாக விரும்பிய பயனையுதவும். பனையுமவ்வாறே மதிகெடுக்குங் கள்முதல், கல்லாக் காரமீறாகிய எவ்வகைப்பட்ட பயனையு முதவாநிற்கும். கள்ளின் குணமானது, பழஞ்சுரம், நரம்புச்சூடு, மேகம், முதலான நோய்களை மாற்றும்; சுக்கில தாதுவை நன்கு பெலப்படுத்துமென ஆயுள்வேதியர் கூறுநிற்பர். உலகில் வாழும் மக்கள் பலர், மருந்தென வேண்டாது மயக்கத்தையே விரும்பிக் கள்ளை உணவாக அருந்துகின்றனர். எம் தேசத்துமக்கள் நெற்றிவேர்வை நிலத்தில் வீழப்பாடுபட்டுத் தேடிய நற்பொருள் முழுவதனையு மேனாட்டுக் குடிவகைக்கு, அந்தோ! செலவிடுகின்றனர். இம்மது அபிமானிகளாலாயிரக் கணக்கானரூபா, தம் நாட்டின் நன்மை கருதிக் கள்ளிற் செலவிடப்படின், கள்ளானது கீழ்மக்களின் குடிவகை யென்றெள்ளி நகையாடலும் நீங்கும். எம் தேசத்துள்ள மது அபிமானிகளின் கைப்பொருளும், பலவகையாகிய தேச நன்மைகளை உண்டாக்குமென்பதிலையமின்று.

கள்ளெனுஞ் சொல்லானது, நற்குடிப்பிறந்த மக்கட்கு நாணத்தையே யுண்டுபண்ணுமென்று ஆன்றோர் கூறுவர்.

"உட்கப்படா ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்—கட்
காதல் கொண்டொழுகுவார்"

என்னு முத்தரவேதமுடையார் கூற்றையும் பொன்னே போற் போற்றாது பொது நோக்காக நோக்கும் பூவுலகி லெப்பாகத்தினர்க்கும் கள்ளெனபது மயக்கத்தை யுண்டாக்கும் பொருளாதலால் கனவிலும் நினையற்க கள்ளை என்பதே கண்கூடாகும். மருந்தாகவுங் கள்ளையருந்துதல் மதியீனமென்பதே துணிபு.

பதநீர்

கள்ளின் றிரிபொருளாகச் சுண்ணம்பிட்டுப் பதப்படுத்தியிறக்குவதே பதநீராகும். இதன் வீரியமானது கள்ளைப்போலன்றி லாகிரிக்குணம் நீங்கி எத்திறத்தினர்க்குஞ் சுவையை விரும்பியும் வேளைக்கேற்பப் பசி நிரப்பவும் நல்லுணவாகும். இக்காரணத்தினால் மக்களாயினோர் யாவருமிதனை விரும்பியுண்பர். கஞ்சி, கூழ் முதலாம் நீருணவுகட்குமிது உதவும். உட்டணசம்பந்தமான இருமல் முதலா முரோகங்கட்கு நன்மருந்தாகக் கல்லாக்காரத்தை முறைப்படிசெய்து உண்க என மருத்துவர்கள் கூறுநிற்பர். குன்மரோகிகட்கும், மலச்சிக்கலுக்கும் நன் மருந்தாகும் பனங்கட்டி செய்து உண்க என்பர். பனங்கட்டியின் பெருமையையுணராத எம் நாட்டினர், சாவகத்தீவு முதலாம் பிறநாடுகளிலிருந்து, தித்திப்புச் சுவையையுதவுகின்றசீனிக்கு வருடவீதமறுபத்தைந்திலக்கம் ரூபா வரையிற் செலுத்துகின்றனர். பிறநாட்டுச் சீனியானது, கருப்பஞ்சாற்றை மிகவலிந்தெடுத்துச் செய்யப்படுவது. இதனை யெம்நாட்டுப் புலவராகிய கச்சியப்ப சிவாசாரியர் உலோபிகளின் கொடைக்கொப்பிடுகின்றனர்; "ஊறுகாட்டினர்க்கல்லது லோபரீவரோ." எமது பனங்கட்டியோ அங்ஙனமன்று. எழுத்தறியா மைந்தர்கள் மகளிர்களும், மிக இலகுவாகப் பெற்ற பதநீரைச் சிறுகுடில்களிலிருந்தே காய்ச்சியெடுப்பர். எம நாட்டிலுள்ள மகளிர்கட்குப் பொழுது போக்குத் தொழிலாகவும் நடைபெறுகின்றது. வாணிபத்தொழில தலைசிறந்து விளங்கும் ஜேர்மனிய தேசவர்த்தகரொருவர், கருப்பநீரிற் சீனி செய்தலைப்போன்று, எமது தேசத்திற்றலை சிறந்து விளங்கும் பதநீரிலுஞ் சீனிசெய்ய வெகு நன்முயற்சிகளை இளைத்தனர். அம்முயற்சியானது நம் நாட்டின் சோம்பலினாலும், அபிமானமின்மையாலும், இனிது நிறைவெய்தாவாயின. ஒரு தேசத்தவர்கள், மற்றைய தேசத்

தவர்கட்குக் கீழ்ப்பட்டு வாழுமிழி தகைமையை நீக்க வேண்டின், தமது நாட்டிலுள்ள நற்பொருளை வளம்படுத்தி யுண்ணலே தகுதியாகும். அடிமை நாடாகிய எமது லங்காதுவீபமோவெனில், நெருப்பிருக்கத் தீத்தேடுவாரையொத்து விளங்குகின்றது. ஆரியர், யவனர், கிரேக்கர், சீனர், போத்துக்கீசரானோர் இதன் பலவகை வளப்பங்களையுங் கண்டு மகிழ்ந்து, தத்தம் மனப்பான்மைக்கேற்பப் பற்பல நற்பெயர்களையுஞ் சூட்டினர். அந்தோ! இவ்வித பெருமையையும் யாமுணருகின்றேமில்லையே. வல்லுவெட்டித்துறையிற் பதநீரினாற் செய்த சீனியானது வெண்ணிறமின்மை பற்றி எம் நாட்டினராற் புறக்கணிக்கப்பட்டமை எவ்வளவு மதியீனம்!

இலங்காதேவியின் அரும்புதல்வர்கள் உத்தியோக வேட்கையினாலுலைந்து திரிவர். பனையின் பதநீரினின்று மிக விலகுவிலமைக்கக்கூடிய வெல்லத்தின் பெருமையை நன்குணராமையும், வர்த்தகப் பயிற்சியின்மையுமே காரணமெனில், ஒரு புடையொப்பாகும். வடவிலங்கையைச் சேர்ந்த, மன்னார், முல்லைத்தீவு, முள்ளியவளை, வற்றாப்பழை, புதுக்குடியிருப்பு, முதலாமிடங்களிற் பனை மிகச் செழிப்புற்று விளங்கும். யாழ்ப்பாணத்திற்கு மிகவுமண்மையிலுள்ள வடமராட்சியே, பதநீரின் பயனை நுகரும் முறையிற்றலை சிறந்து விளங்கும். மேற்குறித்த நாடுகளின் பனையின்பயன் கொள்ளின், ஒன்றுக்குப் பத்தாகப் பெருகுமென்பதிலையமில்லை. பனையினும் பார்க்க எத்தனையோ மடங்கு சிறுமையும், செய்மையிலுமுள்ள கருப்பநீர்ச் சீனிக்குக் கணக்கெழுதத் திரியுமெம்மனோர் பதநீரின் கட்டியை அல்லது பெருமையுடன் செய்த சீனியை விருத்தி செய்யின், பொருளுடன் புகழும் மறுமைப் பயனுமுண்டாகுமென்பது கூறவும் வேண்டுமோ? உயர்தர இலக்கியங்களிலும், நன்னூல் முதலாமிலக்கணங்களிலும் பனையின் பெருமையை, உதாரணமாகவும், உவமையாகவும், பொருள், குணம், தொழில், ஆகியனவற்றை எடுத்தாளாதனவுமுளவோ? யாமெடுத்துக்கொண்ட இப்பாடத்திற் கூறாத பகுதிகளின்னும் பலவுள. விரிவஞ்சி விடுத்தனம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும், ஒருவன் பெற்ற நன்றி தினைத்துணையவெனினும், பனைத்துணையாக்கொள்ளலே செய்ந்நன்றியறிதலின் பேறு என்பதனை

"தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரிவர்"

என்று கூறியதும் பருமன் பற்றியன்று. பிரயோசனத்தினாற் பனை தினையிலுமெவ்வளவு கூடியபங்கை யுதவுமென்பதே

கருத்தாகும். பாண்டவர்கள் திக்குவிசயஞ் செய்த ஞான்று, வீமனின் மகனாகிய கடோற்கசனானவன், தென்னிலங்கையை நண்ணினன். இலங்கைவேந்தனிளவலாகிய வீபீடணன், வந்த இளவலை நன்கு மதித்தான். பதினான்கு பொற்பனைகளை வெகுமதியாக வழங்கினனென்று மகாபாரதங் கூறும். மறைந்த குமரிகண்டத்தில் ஈழப்பனை நாடுமுளவெனவு மிளங்கோவடிகள் குறிப்பாலுணர்த்துவர்.

நிறைவு பெற்றது.

நூலைவாசிக்குமுன் பிழைகளைத் திருத்திக்கொள்க

பிழை	பக்கம்	திருத்தம்
வானமு	செ 33	வானகமு
எதிர்த்தும	,, 38	எதிர்த்துப்
மன்னன்	செ 41	மன்னவன்
நச்சுமரம்	47 வரி 28	காடு
வெழி	48	வெளி
மரியாதைகளைத்	49	மரியாதைகளைச்
இஃதிங்கனமாக	50	இஃதிங்ஙனமாக
சொல்னும்படியாக	54	சொல்லும்படியாக
அழாவிக்கொண்டு	57	அளாவிக்கொண்டு
பாச்சவிடு	59	பாய்சசவிடு
பாச்சினன்	62	பாய்ச்சினன்
மாறுதலைடையும்	65	மாறுதலடையும்
நிட்சயம்	69	நிச்சயம்
நீாருக	72	நீருக
வெண்ணையையும்	76	வெண்ணெயையும்
நினைக்கவுக்	80	நினைக்கவுங்
மக்கட்க்கெல்லாம்	96	மக்கட்கெல்லாம்
மரபிநின்	96	மரபினின்